# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953
E-mail: brocalebjoshua@gmail.com

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22.20

எண்: 11/2 மாடி, பெரியார் நகர், E. B. எதிர்
சென்னீர்குப்பம், பூந்தமல்லி போஸ்ட், சென்னை - 600056

## 1.பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு

(The Great White Throne Judgment)

## 2.ஆப்ரிக்கா மண்ணில் பிறந்து, வளர்ந்த கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்பு

## 3.தமிழ்நாட்டின் மண்ணில் பிறந்து, வளர்ந்தவர்கள் சாட்சியற்ற வாழ்க்கை வாழ்ந்துக்கொண்டு, ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியை தமிழில் மொழிப்பெயர்த்து, விநியோகிக்கும் அவலநிலை.

**(அ) உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும், நியாயந்தீர்க்கப்போகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (2தீமோ.4:1). நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்.(யோ.9:39)**

**(ஆ) ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள். கோடாகோடிப்பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள். நியாயசங்கம் உட்கார்ந்தது. புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. (தானி. 7:10)**

**(இ)மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புத்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது. அந்த புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். (வெளி.20:12)**

**(ஈ) சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் வெள்ளாடுகளிலிருந்து செம்மறியாடுகளை வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளை தமது வலத பக்கத்திலும், வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப்பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பார். இடது பக்கத்தில் நிற்பவர்களைப்பார்த்து: சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும், ஆயத்தம் பண்ணபட்டிருக்கிற அக்கினியிலே போங்கள் என்பார்( மத்25:32,33,34,41).**

நாம் இங்கு தியானிக்கப்போகும் அநேக சம்பவங்கள் இனி நடக்கப்போகிற காரியங்களுக்கடுத்ததாக இருப்பதால், இதை நாம் சரியான விதத்தில் அணுகி, அதை தெரிந்துக்கொள்ள பரிசுத்த ஆவியானவர் தாமே நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவாராக. கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுவர்கள் மத்தியில் எண்ணிக்கையில் ஆயிரக்கணக்கான ஸ்தாபன சபைகள், அதன் கிளைகள் ஆங்காங்கு மூலைமுடுக்குகளில் உண்டு. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? இல்லை. ஆதலால் ஒவ்வொரு ஸ்தாபன சபைகளும், தங்களுக்கு நலமாக தோன்றும் கருத்துக்களை உபதேசங்களாய் போதிக்கிறார்கள். ஆதலால் கிறிஸ்தவர்கள் மத்தியில் உபதேசங்களுக்கு அடுத்த போதனைகளில் குழப்பங்கள் உண்டு. இதனால் பிரிவினைகள் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் அனைவரும் எதைஎதையோ உபதேசங்களாய் போதிக்கலாம், ஆனால் முடிவில் நாம் எப்படியும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசித்து விடலாம் என நினைக்கிறார்கள். இது முற்றிலும் ஒரு தவறான கருத்து. தேவனுக்கு ஜனங்களை நியாயந்தீர்க்க ஒரு நியமம் உண்டு. அதுதான் தேவனுடைய வார்த்தை. நான் (இயேசு) சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோ.12:48) பிரியமானவர்களே, மனுஷர்களால் ஸ்தாபிக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட, மனுஷர்களை தலைவர்களாகக் கொண்ட, நீங்கள் சார்ந்திருக்கும் சபை, அதன் உபதேசங்கள் தான் உங்கள் முடிவு என்று நீங்கள் தீர்மானித்திருந்தால், தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேத வாக்கியங்கள் கூறும் எதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். அப்படியானால் உங்கள் நிலை ஏசாவின் நிலைதான். பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ள விரும்பினான், ஆனால் ஆகாதவன் என்று தள்ளப்பட்டான். (எபி.12:17)

அ. ஆவிகள் உங்களுக்கு கீழ்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் (அதாவது ஜீவபுஸ்தகத்தில்/ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில்) எழுதப்பட்டிருகிறதற்காக சந்தோஷப்படுங்கள். தியானியுங்கள் லூாக்.10:20. ஜீவனுக்கென்று பேர் எழுதப்பட்டவன் எவனும் பரிசுத்தவான் என்று சொல்லப்படுவான் (ஏசா.4:3). நித்தியஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் கர்த்தருடைய வசனத்தைக்கேட்டு, சந்தோஷப்பட்டு, விசுவாசித்து வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். (அப்.13:48ன் சாராம்சம் ) கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. (ரோ.8:1) என் வசனத்தைக்கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. அவன்

ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்கு உட்பட்டுவிட்டான். (யோ.5:24). **இவர்கள் பெயர்கள்தான் ஆட்டுக்குட்டியின் ஜீவப்புஸ்தகத்தில் உண்டு.**

(ஆ) சிகப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக்கண்டேன். பிசாசின் வல்லமை மூன்று கட்டங்களில் வெளிப்படுகிறது. முதலாவது கட்டத்தில் அவன் பிசாசு அல்லது அந்திக்கிறிஸ்து என அழைக்கப்படுகிறான். இரண்டாவது கட்டத்தில் அவன் கள்ளத்தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறான். மூன்றாவது கட்டத்தில் அவன் மிருகம் எனப்படுகிறான். வேசிகளுக்கும், பூமியில் உள்ள அருவருப்புகளுக்கும், தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும், வெறிக்கொண்டு இருக்கிறதைக் கண்டேன். பரி.அகஸ்டீன் காலத்திலிருந்து 1586 வரை ரோமன் கத்தோலிக்க திருச்சபை சுமார் 6,80,00,000 புராட்டஸ்டண்ட் விசுவாசிகளை அவர்கள் தங்களுடன் இணங்காததால் கொன்றுக்குவித்தனர். பாருங்கள் சிகப்பு நிறமுள்ள குதிரை இரத்தத்தை சிந்தியது. உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற அந்த மிருகத்தைப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள். உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவப்புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள். ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன் / சிந்திக்கக்கடவன். அந்த ஏழுதலைகளும், அந்த ஸ்திரீ உட்கார்திருக்கிற ஏழு மலைகள் ஆகும். இதுக்குறித்து நீங்கள் வெளி. 13 மற்றும் 17 அதிகளை தியானியுங்கள். அந்த ஏழு மலைகளின் மேல் அமர்ந்திருப்பது வாட்டிகன் நகரம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இது உங்களுடைய தாய் சபையாகிய கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சிப்பீடம். இது சாத்தானின் சிங்காசனம் இருக்கிற இடமும்கூட. கத்தோலிக்க திருச்சபை ரோமாபுரியிலுள்ள நிசாயாவில் கான்ஸ்டன்டைன் அரசின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இங்குதான் தேவத்துவத்தில் திரித்துவ உபதேசம் ஆரம்பமானது. மேலும் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. தேவனுடைய வார்த்தை முதுகுக்குப்பின்னால் எறியப்பட்டது. இந்த தாய்சபை உலகம் முழுவதும் வியாபித்திருக்கிறது. இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நீங்கள் மறுக்க முடியாது. இந்த கத்தோலிக்க திருச்சபையின் ஆதிக்கத்தின் கீழ் தான் உலக ராஜ்ஜியங்கள் இயங்குகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். போப் அந்த அளவுக்கு அதிகாரம் கொண்டவர். இவர் தேவனுடைய குமாரனுக்குப்பதிலாக (VICARIVS FILII DEI) என்று அழைக்கப்படுகிறார். அந்த மிருகத்தின் இலக்கம் மனுஷனுடைய இலக்கத்தின் படி 666 ஆகும். அதாவது VICARIVS FILII DEI என்ற லத்தீன் சொற்களில் காணப்படும் ரோம எழுத்துக்களின் எண்ணிக்கை 666 ஆகும். கத்தோலிக்க திருச்சபை தான் அந்த மிருகம் என்று தேவனுடைய வார்த்தை நமக்கு திட்டவட்டமாக போதிக்கிறது. மிருகம் என்றால் வல்லமை என்று பொருள். ஆகவே, மிருகம் என்பது வாட்டிகன் நகரம்-கத்தோலிக்க குருக்கள் ஆட்சி. புராட்டஸ்டண்ட் சபைகள் கத்தோலிக்க சபையிலிருந்து வெளியே வந்து தங்களை தாங்களே மறுபடியும் ஸ்தாபித்துக்கொண்டனர். இது ஒரு சிறிய வல்லமை. அதுதான் மிருகத்தின் சொரூபம். புராட்டஸ்டண்ட் சபைகள் யாவும் ஒரு ஸ்தாபனமாக தங்களை உருவாக்கிக்கொண்டு மிருகத்தை போல தங்களுக்கு ஒரு சொரூபத்தை உண்டாக்கிக் கொண்டார்கள். ஆக இந்த கத்தோலிக்க திருச்சபையில் போப்களுடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து, ஜீவனுள்ள தேவனுக்கு வீணாய் ஆராதனை செய்து வருகிறார்கள். தேவன் ஒருவரே (மூவர் அல்ல, பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி ஒருவர் என்ற மூவர்கள் அல்ல). தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே, அவரே மனுஷனாகிய கிறிஸ்து இயேசு(1தீமோ.2:5,6). என ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தைக்கூற, அதை புறம்பே தள்ளி, மறுதலித்து, தேவத்துவத்தில் திரித்துவத்தை நுழைத்து தேவனுக்கும் மனுஷர்களுக்கும் இடையில் மத்தியஸ்த ஊழியத்தில் மரியாளையும், பரிசுத்தவான்களையும் வைத்து அவர்களுக்கு தேவன் வெறுக்கும் விக்கிரகங்களை உண்டாக்கி, அருக்களிப்பான சிலைகள் மேல் மனமயங்கினார்கள். அதை வணங்கி, விக்கிரகாராதனை செய்யும் அனைத்து **கத்தோலிக்க திருச்சபையின் போப் மற்றும் விசுவாசிகளுடைய பேர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கவில்லை.** தொடக்கத்திலிருந்தே இவர்கள் தேவபக்தியில்லாத பாவிகள். வெளி.17:8,9 வசனங்களை தியானியுங்கள். இவர்களின் பெயர்கள் புத்தகங்களில் காணப்படுகின்றன.

(இ) கர்த்தர் மோசேயை நோக்கி: எனக்கு விரோதமாய் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கி போடுவேன் என்றார். (யாத்.32:32) ஜீவபுஸ்கத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுபோவதாக: நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக. (சங்.69:28) இதுக்குறித்து ஆபிரகாம்: துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்கு தூரமாய் இருப்பதாக; நீதிமானையும், துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்கு தூரமாய் இருப்பதாக, சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பரோ என்றான். (ஆதி.18:25) இங்கு சற்று தேவத்துவத்துக்கடுத்த பாவத்தை (அவிசுவாசத்தை) கவனியுங்கள். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது. (கொலோ.2:9) இதை மறுதலித்து / மாற்றி தேவத்துவத்தில் மூவர் உண்டு. பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி ஒருவர் என்ற அதநாஷியஸ் விசுவாசப்பிரமாணத்தை மக்களுக்கு போதித்து, அவர்களின் விசுவாசக்கப்பலை சேதப்படுத்தியது தேவத்துவத்தில் திரித்துவம் என்ற போதனையே. பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். இது ஆங்கிலத்தில் இவ்வாறு உள்ளது. THERE ARE THREE, THE FATHER, THE WORD AND THE HOLY SPIRIT, THESE THREE ARE ONE இம்மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள் என 1யோ.5:7 ல் உள்ளது. இந்த வார்த்தை தமிழில் உயர்தினையில் உள்ளது. ஆனால் ஆங்கிலத்தில் அப்படியல்ல, அஃறினையில் உள்ளது. ஆதலால் மூவர் என்பதற்கு மூன்று என்பதே சரியான பொருள். பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று. ஜலம், ரத்தம், ஆவி. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. நீங்கள் பரிசுத்தமாக்கப்படாமல் நீதிமானாக முடியும். நீதிமானாக்கப்படாமல் பரிசுத்தமாக முடியும். பரிசுத்த ஆவியை பெறாமல் பரிசுத்தமாக முடியும். யோ.17:17 ல் சிஷர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு பிசாசுகளை துரத்த அதிகாரம் பெற்றார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கவில்லை. மேலும் அவர்கள் பெந்தெகொஸ்தே நாள்வரை அவர்கள் பரிசுத்த ஆவிக்காக காத்திருக்க வேண்டியதாய் இருந்தது. மேலும் கவனியுங்கள் மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் (Mary was found with child of the Holy Spirit) மத்.1:18 யை கவனியுங்கள். மரியாள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள். ஆதலால் அவள் பெற்ற குழந்தை / குமாரன் (இயேசு) க்கு தகப்பன் (பிதா) பரிசுத்த ஆவி ஆகும். பிதா என்று மற்றோரு தகப்பனும், குமாரனாகிய இயேசுவுக்கு இருப்பாராகில் அவருக்கு இரு பிதாக்கள் / தகப்பன்கள் ஆகும். மரியாள் பிதாவினாலும், பரிசுத்த ஆவியானலும் கர்ப்பவதியானாள் என பொருள்படும். அவள் பிதா என்பவராலும், பரிசுத்த ஆவி என்பவராலும் கர்ப்பவதியானாள் என்பது எவ்வளவு பெரிய விசுவாச துரோகம். பிதாவும், பரிசுத்த ஆவியும் ஒருவராக இருந்து மரியாள் கர்ப்பவதியாகியிருந்தால், பின் திரித்துவ கொள்கை எங்கே? சற்று திரித்துவ சித்தாந்தத்தை குறித்து சிந்தித்து செயல்படுங்கள். இந்த ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்துமாய் இருக்கிறது. நானும் (குமாரன்) பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம். (I and My Father are One) யோ.10:30. குமாரன் (இயேசு) என்னைக்கண்டவன் பிதாவைக் கண்டான், அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்கிறாய் என்றார் இயேசு (யோ.14:9). **ஆக திரித்துவ ஸ்தாபன சபை ஆடுகள் யாவும், வெள்ளாடுகளே.**

**(மத்.25:33,41).** இதை காலேப் யோசுவா கூறவில்லை, மாறாக தேவனுடைய வார்த்தைக் கூறுகிறது. இவர்கள் பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டு, கிறுக்கி போடப்பட இருக்கிறது

(ஈ)அடுத்து நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும், மனுஷர்களுக்குள்ளே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமேயேல்லாமல், வேறோரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. (அப்.4:12) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, என்ற ஒரு நாமம் நம்முடைய இரட்சிப்புக்கு கொடுக்கப்படவில்லை. ஆனால் பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்கு உரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறவேண்டும். (அப்.10:43) ஆக பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெற்றதினால் பாவமன்னிப்பு இல்லை, இரட்சிப்பும் இல்லை. ஆக திரித்துவ உபதேசத்தில் உள்ள மக்கள் தங்கள் பாவமன்னிப்பை பெறவில்லை, மறுபிறப்பு அடையாத ஜென்ம சுபாவ மனிதர்களாகவே காணப்படுகிறார்கள். ஆதலால் இவர்கள் பேர் கிறிஸ்துவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். **ஆதலால் இவர்களுடைய தலைவர்கள், விசுவாசிகள் யாவரும் பேர் கிறிஸ்துவர்களாக இருப்பதினால், இவர்கள் பேர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்படஉள்ளது.** இவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட காலத்தை, நல்ல தருணங்களை புறகணித்துவிட்டார்கள். ஆனாலும் சென்ற காலங்களில் தேவன் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தார். ஆம் அறியாமை உள்ள காலங்களை தேவன் காணாதவர் போல் இருந்தார். ஆனால் இப்பொழுது அப்படியல்ல, நீங்கள் மனம் திருந்த வேண்டும் என்று விரும்புகிறார். தியானியுங்கள். அப்.14:16,17:30.

முடிவாக கத்தோலிக்க திருச்சபையினர் பெயர்கள் யாவும் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கவில்லை. அடுத்து திரித்துவ ஸ்தாபன சபையினர் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டியிருந்தாலும், பிற்பாடு கிறுக்கி போடப்படுவதாக இருக்கிறது. நான் ஸ்தாபன சபைகளில் மற்றும் ஊழியர்களை, விசுவாசிகளை குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் கருதலாம். ஆனால் உங்கள் கருத்து தவறு. அன்பு திருத்தும் தன்மை கொண்டது. நீங்கள் திருந்த வேண்டும் என்ற அன்பின் நிமித்தமாக உங்களை, நீங்கள் சார்ந்திருக்கும் சபைகளை, ஊழியர்களை கடிந்துக்கொள்கிறேன். பாருங்கள் ஒரு பள்ளி ஆசிரியர் தனது மாணவர்களில் ஒருவன் நன்றாக படிப்பது இல்லை, வீட்டுப்பாடங்களை ஒழுங்காக செய்வது இல்லை. வகுப்பில் கவனம் செலுத்துவது இல்லை. இந்நிலையில் அவர் அவன் மீது அன்பு கொண்டவராக அவனைக்கண்டிக்கிறார். மாற்றம் எதுவும் இல்லை, அவனை அடிக்கிறார், அதனாலும் மாற்றம் எதுவும் இல்லை. தலைமை ஆசிரியரிடம் புகார் கொடுக்கிறார். அதனாலும் பலன் எதுவும் இல்லை. பெற்றோர்களுக்கு தகவல் கொடுக்கிறார். ஏன் இத்தனை அக்கறை அவன் மீது? அவன் திருந்தினால் என்ன? திருந்தாமல் போனால் என்ன? என எண்ணி, அவனை அப்படியே விட்டிருக்கலாமே? அவனை குறித்து இத்தனை அக்கறை ஏன் எடுத்தார்? ஆசிரியர் மாணவன் மீது வைத்திருந்த அன்பு ஒன்றுதான் காரணம். அதைத்தான் நானும் செய்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் பிசாசின் உபதேசமாகிய திரித்துவத்தை விட்டு வெளியேறவேண்டும். உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கு, உங்கள் இரட்சிப்புக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தான் அடிக்கடி கடிந்து, கண்டனம் பண்ணி புத்தி சொல்லி எழுதுகிறேன். நீங்கள் திருந்தாவிட்டால் நிச்சயமாக நியாயத்தீர்ப்பு நாள் அன்று உங்களுக்காக நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். உங்களுடைய உணர்வுகளை புண்படுத்துவதற்காக நான் இவைகளை எழுதவில்லை. இது உண்மை.

---

1 கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற நாம் அனைவரும் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு, அலைகிறவர்களாயிராமல் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும், ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும் சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரிரமாகிய சபையானது, பக்திவிருத்தி அடைவதற்காகவும், கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய, காலேப் யோசுவா ஆகிய எனக்கு பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு குறித்து உங்களுக்கு எழுதுவது நலமாகக்கண்டது. உங்களில் யார் யார் பேர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டு, எக்காரணம் கொண்டும் நீக்கப்படாது, யார் யார் பேர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டு, ஆனாலும் அவர்கள் தேவனுக்கு விரோதமாக நடந்ததினால் பேர் கிறுக்கப்படுகிறதென்றும், யார் யார் பேர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவே இல்லை என்பது குறித்தும் நீங்கள் அறிந்துக்கொள்ள வேண்டும் என்று தேவனுடைய சித்தமாய் இருக்கிறது. நானும் அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். ஜனங்களை பிரியப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு நான் ஒன்றும் எழுதுவது கிடையாது. தேவன் அதை அறிவார். நான் ஒரு ஒருத்துவக்காரனும் இல்லை, இருத்துவக்காரனும் இல்லை, திரித்துவக்காரனும் இல்லை.மாறாக நான் தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்கள் என்ன கூறுகிறதோ, அதை அப்படியே விசுவாசிக்கிறேன். கர்த்தர் என்னை வழிநடத்தும் விதத்தில் என் சிந்தனைகளை செலுத்துகிறேன். என் சிந்தனையோடு தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களும், லவோதிக்கேயா சபைதூதனுடைய செய்தியும் ஒன்றுக்கொன்று இணையும் போது அது தேவனிடத்திலிருந்து வந்தது என்று எண்ணி திருப்தி அடைகிறேன். ஆக என்னுடைய செய்திகளை நான் எப்பொழுதும் முதலில் வேதவாக்கியங்களை தியானிப்பதின் மூலமாகவும், அதன்பின்பு இக்காலத்திற்குரிய செய்திகளை தியானிப்பதின் மூலமாகவும், பின்பு பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி உங்களுக்கு எழுதுகிறேன். ஆக என்னுடைய செய்திக்கு பக்கபலமாக வலதுபுறத்தில் தேவனுடைய வார்த்தை, இடதுபுறத்தில் இக்காலத்திற்குரிய செய்தி. நான் சகோ பிரன்ஹாமினால் பிரசங்கிக்கப்பட்ட செய்திகளை தியானிப்பேன், நிதானிப்பேன், ஆராய்வேன். அதன்பின்பு எனக்குள் ஒரு முடிவு எடுப்பேன். ஆனால் அவருடைய கருத்து அனைத்தும் 100% சரியானது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தவறு என்று நான் கருதுவேனாகில் அதை தேவனுடைய வார்த்தையைக் கொண்டு சரிசெய்துக்கொள்வேன். தேவன் என் உள்ளத்தில் வைத்த கருத்துக்களை நான் எனது பேனாவினால் காகிதத்தில் எழுத, பின்பு அது DTP பணி தீர்ந்து, அதன்பின் அது பிரிண்ட் ஆகி, உங்கள் ஆத்துமாவுக்கு ஆகாரமாக உங்களிடத்து வருகிறது. ஆகாரத்தை சாப்பிடுவது அல்லது இலவசமாக கொடுக்கப்பட்ட ஆகாரத்தை உதாசினப்படுத்துவது உங்களுக்கு உள்ள அதிகாரம். ஆனால் ஒன்று மட்டும் நான் கூற விரும்பிகிறேன், நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, ஆனால் பரிசுத்த ஆவியை பெறாத, அநேகருக்கு நான், தேவனுடைய வார்த்தையை ஆகாரமாக கொடுத்துக்கொண்டு வருகிறேன் அது உண்மை.

2. 15-05-2016 அன்று சென்னை, ஆவடி, சகோ.ஆமோஸ் பாஸ்கரனை மேய்ப்பனாகக்கொண்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில் நான் மத்.25:31-46 வசனங்களைக்கொண்டு சுருக்கமாக பிரசிங்கிக்க கர்த்தர் கிருபை செய்தார். இப்பொழுது அன்று பிரசிங்கித்த செய்தியை விசாலமாக எழுதியுள்ளேன். ஆக உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிருகிற, பேர் எழுதப்படாத, பேர் எழுதப்பட்டும் பின்பு கிறுக்கிப்போடப்படயிருக்கிற உயிரோடு இருக்கிறவர்களையும், மரித்தவர்களையும், நியாயம் தீர்க்கப்போகிற, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால், இந்த என் நிருபத்தை வாசிக்கும், தியானிக்கும், சிலாக்கியத்தைப்பெற்ற

உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும், இரக்கமும், சமாதானமும், சத்தியத்தோடும், அன்போடும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக.

3. நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இந்த மணிவேளை, ஏழாம் சபை / லவோதிக்கேயாசபை காலமுடிவு / நிறைவு வேளையாக இருக்கிறது. ஆயினும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ.(லூக்.18:8) என்று எழுதியிருக்கிறபடியினால், இந்நாட்களில் ஜனங்கள் ஆரோக்கியமான உபதேசத்தினை பொறுக்க மனதில்லாமல் கொழுத்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கு ஏற்றபடி நடந்து, தங்கள் மனவிருப்பத்திற்கேற்ப சபைகளை தெரிந்துக்கொண்டு, போதகர்களை தெரிந்துக்கொண்டு, சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்துப்போகும் காலமாய் இருக்கிறது. ஆனால் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத்.1:3) இங்கு நன்கு கவனியுங்கள், தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் அனைவருக்கும் உண்டாகாது. ஒரு குறிப்பிட்ட சபையை சார்ந்தவர்களுக்கு மாத்திரம் உண்டாகாது. பட்டங்கள் பல பெற்ற வேத விரிவுரையாளர்களுக்கு உண்டாகாது. உங்கள் போப், பிஷப், தலைமை போதகர் சபைஸ்தாபர்களுக்கு உண்டாகாது. மாறாக தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட, தனிநபர்களுக்கு மட்டுமே உண்டாகும். மேலும் நீங்கள் சார்ந்திருக்கும் சபை நியாயாதிபதி அல்ல. உங்கள் சபைதலைவர்களும் அல்ல, தேவனே நியாயாதிபதி. உங்கள் சபைதலைவர்கள் அனைவரும் பொதுமக்களைப்போன்று நியாயச்சங்கத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். ஆதலால் அவர்கள் என்ன போதித்தார்கள் என்பது காரியம் அல்ல. ஒன்றைக்குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறியதோ ஆதுவே காரியம். ஆனாலும் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்றுவிரும்பி தேவன் நம் மேல் நீடிய பொறுமை உள்ளவாராய் இருக்கிறார். துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழியை விட்டு திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்கு பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் கூறுகிறார். நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டு திரும்பிப் பிழைப்பதையே விரும்பிகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்கிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். இதுக்குறித்து 2பேது.3:9, எசே.18:23, 33:11வசனங்களை தியானியுங்கள். ஆதலால் இந்த நிருபம் இன்றைய நிலையிலிருக்கும் எண்ணத்திலிருந்து உங்கள் மனதை மாற்றிக்கொள்ள, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிய உங்களை வழிநடத்தும் ஒரு நற்செய்தியாக இருக்குமென கிறிஸ்துவிற்குள் விசுவாசிக்கிறேன். ஆதலால் என் விசுவாசத்திற்கேற்ப இதை நீங்கள் ஏற்றுக்கொள்வது அல்லது என் விசுவாசத்திற்கு மாறாக இந்த நிருபத்தை உங்கள் முதுகிற்கு பின்னாக எறிவது உங்கள் சுயாதீனம். கேட்டவர்கள் விசுவாசித்தார்கள். விசுவாசத்துடன் கேட்டு விசுவாசித்ததால் அது அவர்களுக்கு பிரியோஜனப்பட்டது. ஏனென்றால் நித்தியஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் விசுவாசித்தார்கள். திருவசனத்தை இவர்கள் சாந்தமாய் ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து, அதன்படி தங்கள் கிரியைகளை காண்பித்து கனி கொடுக்கிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். மற்றவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டதினாலும், வாசித்ததினாலும், அவர்கள் கேட்ட, வாசித்த நற்செய்தி அவர்களுக்கு பிரியோஜனப்படவில்லை. அவர்கள் திருவசனத்திற்கு கீழ்படியாதிருந்து இடறுகிறார்கள். அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்கள் விசுவாசியாமற்போனாலும் என்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? இல்லை (ரோ.3:3).

4. **இப்பொழுது நாம் பூமியின் குடிகளின் மேல் வரும் தேவனுடைய கடைசி நியாயத்தீர்ப்புக் குறித்து வேதவாக்கியங்களில் எங்கெங்கு முன்னுரைக்கப்பட்டுள்ளது என்று பார்ப்போம்.** நாம் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டத்தான் முடியும். ஆனால் அதில் எழுதப்பட்டிருப்பவைகளை பரிசுத்த ஆவிதான் நமக்கு வெளிப்படுத்திக்கொடுக்க வேண்டும். மற்றபடி நாம் எதையும் அறிந்துக்கொள்ள, புரிந்துக்கொள்ள முடியாது. பொதுவாக கிறிஸ்தவமக்கள் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள பக்கங்களை புரட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதைத்தான் அவர்களால் செய்ய முடியும். ஏனென்றால் பரிசுத்த ஆவி அவர்களிடத்தில் இல்லை. அது உண்மை.

(அ) தேவன் ஒரு நாளைக்குறித்து இருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார். (அப்.17:31) தேவனே நியாயாதிபதி. (சங்.50:6). கர்த்தர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். (1நாளா.14:33, சங்.50:4)

(ஆ) குமாரன், மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்பு செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். (யோ.5:27) நீதியுள்ள நியாயாதிபதி கர்த்தர் (2தீமோ.4:8).

(இ) பட்சபாதமில்லாமல் அவன் அவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நாம் பிதாவாக தொழுதுக் கொண்டுவருகிறோம். (1பேது.1:17). அப்படியானால் பிதா யார்? குமாரன் யார்? என்பதை பரிசுத்த ஆவி உங்களிடத்தில் இருக்குமானால், அதன் ஒத்தாசையினால் நிதானித்துக்கொள்ளுங்கள்.

(ஈ) உயிரோடு இருக்கிறவர்களையும், மரித்தவர்களையும், நியாயந்தீர்க்கப்போகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (2தீமோ.4:1). இவரே உயிரோடுயிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும், தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி என்று ஜனங்களுக்கு பிரசங்கிக்க அப்போஸ்தலர்களுக்கு இயேசு கட்டளையிட்டார். (அப்.10:42). இயேசு:பிலிப்புவே இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? இப்படியிருக்க பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். என்னைக்கண்டவன் பிதாவைக் கண்டான். இப்படியிருக்க பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய் என்று கூறினார். (யோ.14:8,9) இதிலிருந்து பிதாவும் குமாரனும் ஆள்தத்துவத்தில் ஒருவரே என அறியலாம். ஆக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற மூன்று தன்மைகள் உண்டு. ஆம் எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும் (பிதாவாக) எல்லாரோடும் (குமாரனாக) எல்லாருக்குள்ளும் (பரிசுத்த ஆவியாக) இருக்கிறவர். (எபே.4:5) தேவரீர் எங்கள் பிதாவாக இருக்கிறீர். (ஏசா.63:16) கர்த்தாவே நீர் எங்கள் பிதாவும் எங்கள் மீட்பருமாய் இருக்கிறீர்.(ஏசா.63:16) கர்த்தரே தேவன் என்று அறியுங்கள்.(சங்.100:3) இயேசுவே கிறிஸ்து.(அப்.5:42) கிறிஸ்து இயேசுவே கர்த்தர். (2கொரி.4:5)

(உ) அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை சத்தியத்தோடும் நியாயம் தீர்ப்பார். (சங்.96:13) மேலும் அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை நிதானத்தோடும் நியாயம் தீர்ப்பார். (சங்.98:9)

(ஊ) என் தேவனாகிய கர்த்தர் வருவார். தேவரீரோடே எல்லா பரிசுத்தவான்களும் வருவார்கள். (சகரி.14:5)

(எ) இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய் செய்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தம் தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகள் எல்லாவற்றினிமித்தமும், அவர்களை கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடும்கூட கர்த்தர் வருகிறார். (யூதா.14:15)

(ஏ) மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய் தம்முடைய தூதரோடும் கூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைகளுக்குத்தக்கதாக அவனவனுக்கு பதிலளிப்பார். (மத்.16:27)

(ஐ) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்கள் அனைவரோடும் கூட வரும்போது:தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். (1தெச.3:13) மேலும் உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படிக்கு காக்கப்படுவதாக. (1தெச.5:23)

(ஒ) நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும், அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புத்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். (வெளி.11:12)

(ஓ) மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்ததூதரோடும் கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் வெள்ளாடுகளிலிருந்து செம்மறி ஆடுகளை பிரிக்கிறது போல அவர்களை பிரித்து செம்மறி ஆடுகளை தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். வலது பக்கத்தில் நிற்பவர்களை என் பிதாவினால் ஆசீர்வதிக்கபட்டவர்களே என்றும், இடது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து சபிக்கப்பட்டவர்களே என்றும் கூறுவார். (மத்.25:31-34,41)

(ஔ) சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களில் உள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். (வெளி.20:13)

(ஃ) என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்களை குறித்து நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நாள். (ரோ.2:16) இங்கு நன்கு கவனியுங்கள் நியாயத்தீர்ப்பு நீங்கள் சார்ந்திருக்கும் ரோமன் கத்தோலிக்க திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, அசெம்ளி ஆப் காட் போன்ற சபைகளின் போதனைகளைக்கொண்டு அல்ல, மாறாக அப்பவுலின் சுவிசேஷத்தின்படியே.

(க) ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபி.9:27)

(கா) சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்கபலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயஸ்தலத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். (2கொரி.5:10)

(கி) பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். (தானி.12:2)

(கீ) அப்பொழுது நன்மை செய்கிறவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். (யோ.5:29)

(கு) ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்தீர்ப்பிலே கொண்டு வருவார். (பிரச.12:14)

(கூ) **கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டு. (ரோ.8:1)**

(கெ) சகல எண்ணங்களையும், சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கர்களையும், துன்மார்க்கர்களையும் தேவன் நியாயந்தீர்ப்பார். (பிர.3:17)

(கே) இதோ சீக்கிரமாய் வருகிறேன் : அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது என நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாய் இருக்கிறேன் என்பவர் கூறுகிறார்.(வெளி.20:12,13)

இவைகளை சாட்சியாய் அறிவிக்கிறவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். **ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். (வெளி.22:20)**

5. **பூமியின் குடிகள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறைந்தபட்சம் மூன்று வித்தியாசமான கட்டங்களில் உண்டு என்றதொரு உபதேசம் உண்டு.**

(அ) முதலாவது நியாயத்தீர்ப்பு மத்.25:31-46 வசனங்களில் அடங்கியுள்ளது என்கிறார்கள். அதாவது மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும், வெவ்வெறாக பிரிக்கிறது போல மனுஷகுமாரன் அவருக்கு முன்பாக சேர்க்கப்பட்டுள்ள ஜனங்களை பிரிப்பார் என தமிழ் மொழிப்பெயர்ப்பில் உள்ளது. ஆனால் இது ஆங்கிலத்தில் ஒரு மெய்ப்பனானவன் வெள்ளாடுகளிலிருந்து செம்மறியாடுகளை பிரிக்கிறது போல மனுஷகுமாரன் அவருக்கு முன்பாக சேர்க்கப்பட்டுள்ள ஜனங்களை பிரிப்பார் என உள்ளது. And he shall separate them one from another as a shepherd divideth his sheep from the goats. இந்த நியாயத்தீர்ப்பு பூலோகம் எங்கும் உள்ள சகல ஜனங்களின் மேல் விழுந்த கடைசி தீர்ப்பு. ஆங்கிலத்தில் இதை Judgment of the Nations என அழைக்கிறார்கள். இது உபத்திரவக்காலத்திற்கு பிறகு ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன் நடக்கும் ஒரு சம்பவம். இந்த நியாயத்தீர்ப்பு யார் யார் ஆயிரம் வருட அரசாட்சியில் பங்குபெறுவார்கள் என்பதை தீர்மானிக்கும் என்கிறார்கள்.

(ஆ) இரண்டாவது நியாயத்தீர்ப்பு 2கொரி.5:10 ல் கூறப்பட்டுள்ளது என்கிறார்கள். இது ஒரு கிறிஸ்துவ விசுவாசியின் பணி மற்றும் வேலைபாடுகளைக்கொண்டு அதன் மீது உள்ள நியாயத்தீர்ப்பு என்கிறார்கள். இதில் விசுவாசி தேவனுக்குச் செய்த அவனுடைய பணிக்காக வெகுமதிகளைப் பெறுகிறான். சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு (Judgement seat of Christ) முன்பாக வெளிப்பட வேண்டும். அதாவது கிறிஸ்துவர்கள் இந்த பூமியில் தங்கள் ஜீவியகாலத்தில் செய்த நன்மை தீமை, அவர்கள் செய்த இறைப்பணி, தேவனுக்கு விரோதமாக செய்த காரியங்கள் அனைத்தும் விசாரிக்கப்பட்டு அதற்கேற்ப வெகுமதி அல்லது தண்டனைப்பெறும் நியாயத்தீர்ப்பு என்கிறார்கள்.

(இ) மூன்றாவது பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு (வெளி.20:11-15) இது ஆயிரம் வருட அரசாட்சியின் முடிவில் நடைபெறும் என்கிறார்கள். இது தேவனை அறியாதவர்கள் மீதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்கள் மீதும், தேவன் இல்லை என்று கூறும் மதிகெட்டவன், தேவபக்தியற்றவன் மீதும் விழும் நியாயத்தீர்ப்பு என்கிறார்கள். இவர்கள் யாவரும் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். இதுவே இவர்கள் மேல் விழும் நியாயத்தீர்ப்பு என்கிறார்கள்.

6. ஆனால் பொதுவான கருத்து என்னவென்றால் மேற்க்கண்ட அனைத்து தீர்ப்புகளும் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குள் வந்துவிடுகிறது. இங்குதான் விசுவாசிகள், அவிசுவாசிகள், தேவனை மறுதலிப்பவர்கள், தேவனை அறியாதவர்கள்,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்கள், விக்கிரகாராதனைகாரர்கள் அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்பதாகும். ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டி ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பே, பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்பே அவருடன் மகிமையில் இருக்கிறாள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

7. **உங்கள் சிந்தனைக்கு ஒரு காரியம்.** வெளி.20:4 ல் ஒரு சம்பவத்தைக்காண்கிறோம். யோவான் சிங்காசனங்களை கண்டான். அவைகளில் மேல் உட்க்கார்ந்திருக்கிறவர்களையும் கண்டான். அவர்களுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டது எனவும் கூறுகிறான். ஆனால் வெளி.20:4 ஆயிரம் வருட அரசாட்சிக்கடுத்ததாக இருக்கிறது. ஆதலால் இத்துடன் மத்.25:31-46 சம்பவங்களை இணைக்கமுடியாது. அடுத்து பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு ஆயிரம் வருட அரசாட்சிக்குப்பின்பு நடக்கிறது. ஆதலால் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புடன் வெளி.20:4 ஐ இணைக்கமுடியாது. வெளி.20:4 ல் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிறவர்கள் மாத்திரமே காணப்படுகிறார்கள். ஆனால் வெளி.20:11 ல் இரண்டாம் மரணத்திற்கு அடுத்த சம்பவங்கள் காணப்படுகிறது. ஆக வெளி.20:4 மற்றும் வெளி.20:11 இரண்டும் தனித்தனி நியாயத்தீர்ப்புக்கடுத்த சம்பவங்கள். வெளி.20:4 நியாயத்தீர்ப்புக்கடுத்த காரியங்களை நாம் சற்று நிதானித்தால் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவின் நியாயசனத்தீர்ப்பு (Judgement seat of Christ) என்பது தவறு. மேலும் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு இரட்சிக்கப்படாத பாவிகளுக்கு மாத்திரமே என்பதும் தவறு. ஏனென்றால் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பில் ஜீவபுஸ்தகமும், புஸ்தகங்களும் திறக்கப்படுகின்றன. நல்லோரும், தீயோரும் நியாயாசனத்திற்கு முன்பாக வருகிறார்கள். அடுத்து வெளி.20:4 மற்றும் 20:11 இரண்டும் ஒரே நேரத்தில் நடக்கும் சம்பவம் என்றும் கூற முடியாது. ஏனென்றால் வெளி.20:4 ஆயிரம் வருட அரசாட்சியோடு சம்பந்தப்பட்டதாகும், வெளி.20:11 ஆயிரம் வருட அரசாட்சிக்குப்பின்பு நடைபெறும் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பாக இருக்கிறது. இங்குதான் மத்.25:31-46 சம்பவம் சம்பந்தப்பட்டது. இதோடு மட்டுமல்ல 2கொரி.5:10 ம் வெளி.20:11வுடன் சம்பந்தப்பட்டது. ஏனென்றால் ஜீவப்புஸ்தகம் இங்கு நியாயத்தீர்ப்பு வேளையில் காணப்படுகிறது. அடுத்து தூதர்களுக்கடுத்த நியாயத்தீர்ப்பும் உண்டு. இதுகுறித்து யூதா: தங்களுடைய ஆதி மேன்மையைக்காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்தியசங்கிலியினால கட்டி அந்தகாரத்தில் (Under Darkness) அடைத்துவைத்திருக்கிறார் என்கிறான். (யூதா:6) பேதுருவும் இதுக்குறித்து : பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல் அந்தகார சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக, ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்கிறான். (2பேது.2:4) சாத்தானும் நியாயத்தீர்ப்பின் போது நியாயத்தீர்ப்பு சங்கத்திற்கு முன்பாக வந்து நிற்கவேண்டும். அவன் குற்றவாளி என்று தீர்க்கப்படவேண்டும்.

8. **இந்த பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குமுன் சில சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக கிரமமாக நடைப்பெற வேண்டியிருக்கிறது.**

(அ) முதலாவது கிறிஸ்துவின் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அவள் மகிமைக்குள் செல்லுகிறாள். மணவாட்டி பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டபிறகு புறஜாதி சபைக்கு எல்லாம் முடிவடைந்திருக்கும். தேவஆவியானவர் பூமியை விட்டு போய்விடுகிறார். தேற்றரவாளன் ஊழியம் முடிவு பெறுகிறது. இப்பொழுது அசுத்தமாய் இருக்கிறவன் இன்னும் அசுத்தமாய் இருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். (வெளி.22:11) கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு புறப்படுகிறார். அவருடைய மத்தியஸ்த காலம் முடிவடைந்தது. அவர் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு புறப்பட்டுசென்று, மீட்பின் புத்தகத்தை வாங்கிக்கொண்டு, அவர் மீட்டுக்கொண்ட எல்லாவற்றின் மீதும் உரிமைக்கோரி பெற்றுக்கொள்கிறார். மத்தியஸ்த ஊழியம் அதன்பின்பு கிடையாது. எடுத்துக்கொள்ளப்படுதலில் முதலாவது கிறிஸ்துவுக்குள் மரித்து பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் முதலில் நித்திரையிலிருந்து எழுப்பப்படுகிறார்கள். இந்த அழிவுள்ள சரீரங்கள் கர்த்தருடைய எடுத்துக்கொள்ளப்படும் கிருபையினால் அழியாமையை தரித்துக்கொள்ளும். அதன்பின்பு எல்லாரும் ஒன்றுக்கூடுவார்கள். அவர்கள் ஒன்றுக்கூடத் தொடங்கும்போது உயிரோடுயிருக்கிற நாம் மறுரூபமாக்கப்படுவோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் மரணத்தைக்காண்பதில்லை. சடுதியாக நம்மை வேகமாக அடித்துக்கொண்டு செல்வதுபோன்று ஒன்று உண்டாகும். அப்பொழுது நீங்கள் மறுரூபமடைவீர்கள். நீங்கள் ஆபிரகாமைப்போல் வயோதிபத்தில் இருந்து வாலிபனாகவும், வயோதிபஸ்திரீயில் இருந்து வாலிபப்பெண்ணாகவும் மாறுவீர்கள். இந்த சடுதியான மாற்றம் என்ன? சற்றுக்கழிந்து நீங்கள் சிந்தனையைப்போல் பிரயாணம் செய்வீர்கள். அப்பொழுது நீங்கள் ஏற்கெனவே உயிர்த்தெழுந்தவர்களைக் காணமுடியும். அதன்பின்பு நாம் அவர்களுடன் ஒன்றுசேர்ந்து அவர்களோடுகூட எடுத்துக்கொள்ளப்பட்டு, கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம். ஆயிரம் வருட அரசாட்சிவரைக்கும் மேசியா இந்த பூமிக்கு வரமாட்டார். ஏனென்றால் நாம் ஆகாயத்தில் எடுக்கப்பட்டு, கர்த்தரை அங்கு சந்திப்போம். அவர் பூமிக்கு வருவதில்லை. அவர் தம்முடைய மணவாட்டியை ஆகாயத்தில் இழுத்துக்கொள்கிறார். அப்பொழுது லவோதிக்கேயா சபைக்காலம் முடிவடையும். எடுத்துக்கொள்ளப்படுதல் வரை லவோதிக்கேயா சபைக்காலம் நீடிக்கும்.

(ஆ) இரண்டாவதாக கிறிஸ்துவின் மணவாட்டி எடுத்துக்கொள்ளபட்டப்பின்பு புத்தியில்லாத கன்னிகைகள் மீது மூன்றரை ஆண்டுகள் உபத்திரவகாலம் வந்திறங்கும். அவள் தனக்குக்கொடுக்கப்பட்ட பிராயசித்தத்தை அதன் முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிட்டாள். அவள் ஒரு விசுவாசி, விசுவாசியைப்போல் நடந்துக்கொள்ளாததால் உபத்திரவகாலத்தின் வழியாக கடந்து செல்லவேண்டும். அப்பொழுது இஸ்ரவேல் தன் தீர்க்கதரிசனத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும். அதன்பிறகு இஸ்ரவேலுக்கு உபத்திரவக்காலம் தொடங்குகிறது. சபையானது உபத்திரவகாலத்திற்குள் பிரவேசிக்கும் சமயத்தில் வெளி.11 ல் கூறப்பட்ட இருசாட்சிகள் இஸ்ரவேலில் இருந்து 1,44,000 பேரை அழைப்பார்கள். அவர்கள் 1260 நாட்கள் தீர்க்கத்தரிசனம் உரைப்பார்கள். அது மூன்றரை ஆண்டுகள் சபையின் மூன்றரை ஆண்டு உபத்திரவக்காலத்தில் மேசியாவின் செய்தி இஸ்ரவேலுக்கு பிரசிங்கிக்கப்பட அளிக்கப்பட்ட காலம்.

(இ) இதன்பின்பு அர்மகேதோன் யுத்தம் உண்டாகி எல்லாவற்றையும் அழித்துப்போடும்.

(ஈ) இத்தனை சம்பவங்களுக்குப்பின்பு எடுத்துக்கொள்ளப்பட்ட மணவாட்டி, மாணவாளனுடன் ஆயிரம் வருட அரசாட்சிக்கு வருகிறாள்.

(உ) இந்த ஆயிரம்வருட அரசாட்சிக்குப்பின்புதான் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு.

(ஊ) இதன்பின்பு புதிய வானமும், புதிய பூமியும் உண்டாகி, புதிய நகரம் தேவனிடத்திலிருந்து இறங்கி, பரலோகத்தைவிட்டு வருகிறது. அப்பொழுது காலமும் நித்தியமும் ஒன்றாக இணைகிறது.

ஆக ஆயிரம்வருட அரசாட்சிக்குப்பின்பு பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு நடைப்பெறுகிறது.

9. இங்கு முக்கியமாக நாம் தெரிந்துக்கொள்ள வேண்டிய காரியங்களுக்கு கடந்துச்செல்லும் முன்பு ஒரு சிறு ஆலோசனை உங்களுக்கு. அதாவது பொதுவாக பிசாசு தேவனுடைய வார்த்தையில் இல்லாத ஒன்றை, லவோதிக்கேயா சபைகாலத்திற்குரிய செய்தியில் இல்லாத ஒன்றைக் கொண்டு மனுஷர்களுடைய கற்பனைகளை உங்களுக்கு உபதேசங்களாய் போதித்து, மனுஷர்களுடைய பாரம்பரியங்களை

போதகமாக கொண்டுவந்து, உங்களை தேவனுடைய வார்த்தைகளிலிருந்து விலகச்செய்வான். இதைத்தான் இக்காலத்திற்குரிய செய்தி என்று கூறிக்கொண்டு கிறிஸ்து பிரன்ஹாம் கூட்டத்தினர், திருச்சி ராபின்சன் மற்றும் ரூபன், சென்னை ஜான் ஐசக், மும்பை டேனியல் கிறிஸ்டியான், கேரளா மார்ஷல் போன்றவர்கள் கோதுமை பயிர்களோடு களைகளையும் விதைத்துக்கொண்டு பிசாசின் வேலைகளை செய்துவருகிறார்கள். இவர்களுக்கென்று ஒரு நிரந்திரமான நிலை, ஸ்தானம் கிடையாது. அதாவது அடிக்கடி பச்சோந்திப்போன்று தங்கள் நிறத்தைமாற்றிக்கொண்டே வருவார்கள். அதாவது விதவிதமான போதனைகளை கொண்டுவந்து தங்களை அவ்வப்போது மாற்றிக்கொண்டு வருவார்கள். இவர்களுக்கு ஒரு நிலையான அழைப்பு கிடையாது, ஆதலால் உபதேசமும் கிடையாது. ஆனாலும் இவர்களுக்கென்று ஒரு கூட்டம் உண்டு. சிலர் நாங்கள் எங்கே செல்வது இவர்களை விட்டால் எங்களுக்கு வழி இல்லையே, ஒரு உருப்படியான சபையை அதாவது சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமான ஒரு சபையை காணமுடியவில்லையே என்கிறார்கள். பாஸ்டர்கள் அடிக்கடி உபதேசங்களை மாற்றி மாற்றி சபையை குழப்பி வருகிறார்கள் என்று ஆதங்கப்படுகிறார்கள். அது உண்மைதான். வேதவாக்கியங்களின்படி ஜீவிக்கிறவர்களை, கிறிஸ்து ஜனங்களில் ஜீவித்துக்கொண்டிருப்பதை காணக்கூடிய ஒரு கூட்டம் ஜனங்களை யாராவது பார்க்கமுடியுமா? அதுவும் முடியவில்லை. பிரியமானவர்களே உங்களுடைய மேய்ப்பனிடம் உங்களுக்கு விசுவாசம் கொள்ளமுடியவில்லை என்றால், அவர் மீது நம்பிக்கையில்லை என்றால், அவர் தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களுக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் மாறாக நடந்துவருகிறார் என்றால் முதலாவது அவரை விட்டு விலகுங்கள். அதுதான் சரியான முடிவு. பின் உங்களது அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை கர்த்தர் பார்த்துக்கொள்வார். ஒருவன் ஊழியகாரனாக இருந்தாலும் அல்லது விசுவாசியாக இருந்தாலும் தேவனுடைய சித்தத்தில் இருந்தால் மாத்திரமே அவர்களிடத்தில் தேவனுடைய வார்த்தையை காணமுடியும். இந்நாட்களில் ஜனங்கள், சபைகள் யாவரும் ஆவிக்குரியரீதியில் மரித்துக்கொண்டிருக்கிறதையே நான் காண்கிறேன். இவர்களைக்குறித்து மத்தேயு, ஏசாயா என்ன கூறுகிறார்கள்? இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்கு பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாய் இருக்கிறது. (மத்.15:8,9, ஏசா.29:13) இந்த காலக்கட்டத்தில் தேவனுடைய ஞானம் உங்களிடத்தில் இருந்தால் மாத்திரமே ஒன்றை சரி அல்லது தவறு என்று உங்களால் நிதானிக்கமுடியும். தேவஞானம், இயேசு கிறிஸ்துவின் தெய்வீகசுபாவங்களில் ஒன்று (2பேது.1:5)

10. **பாருங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும் (1யோ.1:7) நம்முடைய பாவங்களை நீக்கி நம்மை சுத்திகரிக்கக்கூடிய வல்லமை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் மாத்திரமே இருக்கிறது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. (எபி.9:22) அதாவது உங்களுடைய பாவ, அக்கிரமங்களுக்கு மன்னிப்பு உண்டாகவே இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தை சிந்தினார். அவருடைய இரத்தத்தினால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. ஆதலால்தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் பாவமன்னிப்பு பெறுவான் என்று அப்.10:43 ல் கூறப்பட்டுள்ளது. ஆதலால்தான் பெந்தெகொஸ்தே நாள் அன்று பேதுரு : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான். (அப்.2:38) அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் அன்னறய தினம் ஏறக்குறைய 3000 பேர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.2:41) அவ்வாறாக இரட்சிக்கப்படுபவர்களை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார். (அப்.2:47) பாவமன்னிப்பு பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெறுவதில் இல்லை. மாறாக பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமகரராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்போது பாவமன்னிப்பு உண்டு. இதுதான் தேவஞானம். ஆனால் பிசாசு கத்தோலிக்க திருச்சபையைக் கொண்டும், திரித்துவஸ்தாபன சபைகளைக் கொண்டும், அதாவது தாயையும், மகளையும் கொண்டு, அதாவது மகா வேசியையும் அவளுடைய குமாரத்திகளையும் கொண்டு உங்களை தேவனுடைய வார்த்தையை விட்டு விலகச்செய்து, நீங்கள் உங்கள் பாவமன்னிப்பை பெறாது, உங்கள் பாவத்திலே நீங்கள் மரிக்க தந்திரமாய் கி பி 325 முதல் அதாவது கத்தோலிக்க திருச்சபை உருவானது முதல் இதுவரை ஏமாற்றிவருகிறான். இந்த பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து பெறும் ஞானஸ்நானம் லௌகிகசம்பந்தமான ஞானம். ஆதலால் தேவஞானம் உங்களிடத்தில் இருந்தால் மாத்திரமே நீங்கள் ஒன்றை பகுத்தறிந்து நலமானதை பற்றிக்கொள்ள முடியும். உங்களுக்குள் பரிசுத்த ஆவி உண்டு என்று கூறி, நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போனால், இக்காலத்திற்குரிய செய்திக்கு செவிகொடுக்காமற் போனால் உங்களுக்குள் இருப்பது வேறோரு ஆவி. ஏனென்றால் தேவனுடைய ஆவி தேவனுடைய வார்த்தையின் மேல் தங்கி நிற்கும்.**

11. **மரித்தோர் உயிர்த்தெழுதல் :** இது ஆதியாகமம் முதல் முன்னுரைக்கப்பட்டுள்ளது.

(அ)பாருங்கள் ஆபிரகாம் தன் வேலைக்காரனை நோக்கி : நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே தரித்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம் மட்டும் போய், தொழுதுகொண்டு உங்களிடத்திற்கு திரும்பி வருவோம் என்றான். (ஆதி.22:5) விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தான். ஈசாக்கின் இடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டு இருந்தது. இப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தை பெற்றவனாய், மரித்தோரிலிருந்து எழுப்பத் தேவன் வல்லமை உள்ளவராய் இருக்கிறார் என்று எண்ணி, தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான். மரித்தோரிலிருந்து அவனை பாவனையாக திரும்ப பெற்றுக்கொண்டான். (எபி.11:17-19)

(ஆ). யோபுவும் மரித்தோர் உயிர்தெழுதலைக்குறித்து முன்னறிவிக்கிறான். என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவைகள் அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன், அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரை காணும் என்கிறான். யோபு.(20:25-27)

(இ) தீர்க்கதரிசிகளும் இதுக்குறித்து முன்னுரைக்கிறார்கள். ஏசாயா மரித்தோரின் உயிர்தெழுதல் குறித்து : மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள். மண்ணிலே தங்கியுள்ளவர்களோ விழித்து கெம்பீரியுங்கள். மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும். (ஏசா.26:19)

(ஈ) பூமியின் தூளிலே நித்திரை அடைந்தர்வர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். (தானி.12:2) நீயோவென்றால் முடிவுவரும் மட்டும் போயிரு; நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தரவீதத்திற்கு எழுந்திருப்பாய் என்றான். (தானி.12:13)

(உ) அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்க விலக்கி மீட்பேன். அவர்களை மரணத்திற்கு நீங்கலாக்கி விடுவிப்பேன். மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? (ஓசி.13:14)

12. **பழைய ஏற்பாட்டில் மரித்தோர் உயிரோடு எழுப்பப்பட்ட அற்புதங்களை நாம் காண்கிறோம்.**(அ) எலியா வீட்டிற்குள் வந்தபோது இதோ அந்தபிள்ளை அவன் கட்டிலின் மேல் செத்துக்கிடந்தான். உள்ளே போய் தங்கள் இருவருக்கும் பின்னாக அவன் கதவை பூட்டி கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, கிட்டப்போய், தன் வாய்ப் பிள்ளையின்வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்கள் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன் மேல் குப்புறப்படுத்துக் கொண்டான். அப்பொழுது பிள்ளையாண்டான் உடல் அனல் கொண்டது. அவன் எழுந்து அந்த வீட்டில் இங்கும் அங்கும் உலாவி திரும்பி கிட்டப்போய் அவன் மேல் குப்புறப்படுத்தான். அப்பொழுது அந்தப்பிள்ளை ஏழுதரம் தும்பி தன் கண்களைத் திறந்தான். (2இராஜா.4:32-35)
(ஆ) அப்பொழுது அவர்கள் ஒரு மனிதனை அடக்கம்பண்ண போகையில் அந்த தண்டைக்கண்டு அந்த மனுஷனை எலியாவின் கல்லறையில் போட்டார்கள். அந்தமனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலியாவின் மேல்பட்டபோது அந்த மனுஷன் உயிரடைந்து, தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான். (2 ராஜா.13:21)

13. **புதிய ஏற்பாடு காலத்திலும் இயேசுகிறிஸ்து மரித்தோரை உயிரோடு எழுப்பியதைக் காண்கிறோம்.**
(அ) இயேசு தலைவனுடைய வீட்டிலே வந்து தாரை ஊதுகிறவர்களையும், இரைகிற ஜனங்களையும் கண்டு விலகுங்கள், இந்த சிறு பெண் மரிக்கவில்லை நித்திரையாய் இருக்கிறாள் என்றார். அதற்காக அவரைப்பார்த்து நகைத்தார்கள். ஜனங்கள் வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்த சிறு பெண்ணின் கையை பிடித்தார், உடனே அவள் எழுந்திருந்தாள். (மத்.9:23-25)
(ஆ) மறுநாளில் இயேசு நாயீன் என்னும் ஊருக்குப்போனார். அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும், அவருடனே கூடப்போனார்கள். அவர் ஊரின் வாசலுக்கு சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள். அவன் தன் தாய்க்கு ஒரே மகனாய் இருந்தான். அவளோ கைம்பெண்ணாய் இருந்தாள், ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனே கூட வந்தார்கள். கர்த்தர் அவளைப்பார்த்து, அவள் மேல் மனதுருகி, அழாதே என்று சொல்லி, கிட்டவந்து பாடையை தொட்டார். அதை சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர் வாலிபனே எழுந்திடு என்று உனக்கு சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து, உட்கார்ந்து பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். (லூக்.11:15)
(இ) இவைகளை சொன்னப்பின்பு, லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும், கைகளும் பிரேதசீலையினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையினால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி இவனை கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார். (யோ.11:43,44)

14. இயேசு தம்முடைய உயிர்தெழுதலையும் முன்னுரைத்தார். நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதை கொடுக்கிறபடியினால் பிதா என் மேல் அன்பாய் இருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக்கொடுத்தேன். அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு, இந்த கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார். (யோ.10:17-18) இயேசு தாம் முன்னுரைத்தப்படியே மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்தெழுந்தார். கல்லறை அடைத்திருந்தக்கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக்கண்டு, உள்ளே பிரவேசித்து கர்த்தராகிய இயேவின் சரீரத்தை காணாமல், அதைக்குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்த இரண்டு பேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டு, தலைகவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில், அந்த இரண்டு பேரும் அவர்களை நோக்கி : உயிரோடுயிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறது என்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டும் என்பதாக அவர் உயிரோடு இருந்தகாலத்தில் உங்களுக்கு சொன்னதை நினைவுக்கூறுங்கள் என்றார்கள். (லூக்.24:2-7)

15. இயேசு உயிரோடேழுந்தபோது அதைத்தொடர்ந்து அநேக பரிசுத்தவான்களும் எழுந்திருந்தார்கள். இயேசு மறுபடியும் மகா சத்தமாய் கூப்பிட்டு, ஆவியை விட்டார். அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது. அநேக பரிசுத்தவான்களுடைய சரீரமும் எழுந்திருந்தது. அவர் உயிர்தெழுந்தப்பின்பு அவர்கள் கல்லறையை விட்டு புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேர்களுக்கு காணப்பட்டார்கள். (மத்.27:52,53)

16. **அப்போஸ்தலர்களும் மரித்தோரை உயிரோடு எழுப்பினார்கள்.** யோப்பா பட்டிணத்தில் கிரேக்க மொழியிலே தொற்காள் என்ற அர்த்தம் கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் வியாதிப்பட்டு மரணம் அடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி மேல் வீட்டிலே கிடத்திவைத்தார்கள். பேதுரு எல்லோரையும் வெளியே போகச்செய்து, முழங்கால் படியிட்டு ஜெபம் பண்ணி பிரேதத்தின் புறமாய் திரும்பி தபீத்தாளே எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து பேதுரு கையை பிடித்து உட்கார்ந்தாள். அவன் அவளுக்கு கைகொடுத்து அவளை எழுந்திருக்கப்பண்ணி பரிசுத்தவான்களையும், விதவைகளையும் அழைத்து அவளை உயிருள்ளவளாக அவர்களின் முன்பாக நிறுத்தினான். (அப்.9:36-41)

17. மேலும் வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருந்தார்கள். பவுல் நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கம் அடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப்போய் அவன்மேல் விழுந்து அவனை அனைத்துக்கொண்டு, கலங்காதிருங்கள் இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். அந்த வாலிபனை அவர்கள் உயிர் உள்ளவனாக கூட்டிக்கொண்டுவந்து மிகுந்த ஆறுதல் அடைந்தார்கள். (அப்.20:7-12)

18. **புதிய ஏற்பாட்டில் நாம் இனி நடக்கவேண்டிய உயிர்தெழுதலைக்குறித்து காண்போம்.**
(அ) முதலாவது எடுத்துக்கொள்ளப்படுதல் குறித்து யோ5:24 மற்றும் 26 வசனங்களில் தியானிக்கலாம். என் வசனத்தைக்கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்கு உட்பட்டுவிட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். இங்கு வசனத்தைக்கேட்டு என்பது வசனத்தை புரிந்துக்கொண்டு என்று பொருள்படும். இன்று தேவனுடைய வசனத்தை கேட்கிறார்கள் அதை அவர்களால் புரிந்துகொள்ள

முடியாததால்தான் எங்கும் எதிலும் குழப்பம் காணப்படுகிறது. ஒரு வசனத்திற்கு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சுயவியாக்கியானத்தைக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒருவனை சத்திய ஆவியானவர்தான் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த முடியும். மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதை கேட்கிறவர்கள் (இதிலிருந்து தேவக்குமாரனுடைய சத்தத்தை கேட்கிறவர்களும் உண்டு. கேட்ககூடாதவர்களும் உண்டு என காண்கிறோம்.) பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். ஏனென்றால் பிதா தம்மில் தாமே ஜீவனுள்ளவராய் இருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுள்ளவராய் இருக்கும்படி அருள் செய்திருக்கிறார் எனக்காண்கிறோம். மேலும் நாம் 1தெச.4:16 ல் வாசிக்கிறோம். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், தேவகுமாரனுடைய சத்தத்தை கேட்டவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். இங்கு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் மாத்திரமே உயிர்தெழுவார்கள். தென்னிந்திய திருச்சபை, அசெம்பளி ஆப் காட், தி பெந்தெகொஸ்தே சபை, சர்ச் ஆப் காட் போன்ற சபைகளில் அங்கத்தினராக இருப்பவர்கள் அல்ல. இது மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகும். இதை முதலாம் உயிர்தெழுதல் என்று சொல்லமுடியாது. ஏனென்றால் முதலாம் உயிர்தெழுதல் வெளி.20 ஆம் அதிகாரத்தில் வருகிறது. இந்த முதலாம் உயிர்தெழுதலில் பங்குகொள்ளுபவர்கள் (அ) இயேசுவை பற்றிய சாட்சி நிமித்தம் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள் (ஆ) தேவனுடைய வசனத்தின் நிமித்தம் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள் (இ) மிருகத்தையாவது, அதன் சொரூபத்தையாவது வணங்காமலும், தங்கள் நெற்றியிலும், தங்கள் கையிலும் அதன் முத்திரையை தரித்துக்கொள்ளாமல் இருந்தவர்கள். இவர் உயிர்த்து கிறிஸ்துவுடன் ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.

(ஆ) அடுத்து உயிர்தெழுதல் யோ.5:28,29 வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. பிரேதக்குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். இது பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்கடுத்தது குறிக்கிறது. இங்கு யோவான் மரித்தோரில் சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் காண்கிறான். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கபட்டது. அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே. மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னில் உள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. தொடக்கத்தில் பரிசுத்த ஆவியை பெறாதவர்கள் நித்திய ஜீவனை பெறவில்லை. ஆதலால் எடுத்துக்கொள்ளபடுதலில் அவர்களுக்கு பங்கு இல்லை. ஆனாலும் அவர்கள் நியாயத்தீர்ப்பின் போது நித்திய ஜீவனை பெறுகிறார்கள். அதாவது ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டவர்களில் சிலர் பொதுவான உயிர்தெழுதலுக்கு முன்பும், பின்பும் நித்திய ஜீவனைப் பெறுகிறார்கள்.

19. **இங்கு ஒரு முக்கியமான காரியத்தை புரிந்துக்கொள்ள தவறக்கூடாது.** 1தெச.4:16,17 ல் கிறிஸ்துவின் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறிக்கிறது. ஆனால் வெளி.20:4 உபத்திரவகாலத்தில் பிரவேசித்து பின் நித்திய ஜீவனில் பங்குகொள்ள இருப்பவரை குறிக்கிறது. மணவாட்டி கிறிஸ்துவுடன். மணவாட்டி மணவாளனுடைய சிங்காசனத்தில் அவருடன் அமர்ந்திருக்கிறாள். மணவாட்டியில் கிறிஸ்துவுக்கு முன் மரித்தவர்கள் பிரதான தூதனுடைய சத்தத்தின் போது எழுந்திருப்பார்கள். இந்த மரித்தோர் உயிர்தெழுதலில் அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனம் உள்ளதாய் விதைக்கப்படும், மகிமை உள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனம் உள்ளதாய் விதைக்கப்படும், பலம் உள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிக்க மாட்டாது. அழிவுள்ளது அழியாமையை சுதந்திரிக்கவில்லை. மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய சாயலை அணிந்துக்கொள்வோம். (1கொரி.15:42-50) மணவாட்டியில் உயிரோடு இருப்பவர்கள் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள் மேல் அவரோடுகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பார்கள். ஒரு இமைப்பொழுதில் இவர்கள் மறுரூபம் ஆக்கப்படுவார்கள். அழிவுள்ளதான இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும். அப்பொழுது மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்று கூறப்படும் (1கொரி.15:51-55) நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். (பிலி.3:21) என் வசனத்தைக்கேட்டு, என்னை அனுப்பினோரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டுவிட்டான். (யோ.5:24) கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும், வானத்தில் இருந்து வருவார். அப்பொழுது கிறிஸ்துவிற்கு மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடுயிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுப்போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட அதாவது ஏற்கெனவே மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தவர்களோடுகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும், கர்த்தருடனே கூட இருப்போம். இது மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலாகும். (1தெச.4:16,17) இந்த மணவாட்டி யார்? இவள் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவையும், விசுவாசத்தையும் தேவனிடத்திலிருந்து பெற்ற தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவள். (தீத்.1:3) தேவன் இவர்களை முன் அறிந்து, முன்குறித்து அழைத்து, நீதிமான்களாக்கி, மகிமைபடுத்தியுள்ளார். (ரோ.8:29,30) ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிருக்கிற இவர்கள் மாத்திரமே தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரத்தில் பிரவேசிப்பார்கள். (வெளி.21:27)

20. **தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதல் எப்படி?** பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலும் இருக்கையில், தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு மூத்தவன் இளையவனுக்கு ஊழியம் செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது. அப்படியே யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. (ரோ.9:11-13) அதாவது தேவனுடைய அழைப்பு அவருடைய தெரிந்துக்கொள்ளுதலின் மூலமாகவேயன்றி ஒருவனுடைய வேலையை, கிரியையை பொருத்தது அல்ல. That is to say : The callings of God is by Election and not by the works. பாருங்கள் பிள்ளைகள் இன்னும் பிறக்கவில்லை. நல்வினை தீவினை ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும் மூத்தவன் இளையவனுக்கு ஊழியம் செய்வான் என்றுகூறப்பட்டுள்ளது. அதோடு மட்டும் அல்ல, யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்தேன் என்றும், எழுதி இருக்கிறது. அப்படியானால் தேவனிடத்தில் அநீதியா? அப்படி சொல்லக்கூடாதே! தேவன் : எவன் மேல் இரக்கமாய் இருக்க சித்தமாயிருப்பேனோ அவன் மேல் இரக்கமாயிருப்பேன். எவன் மேல் உருக்கமாயிருக்க சித்தமாயிருப்பேனோ அவன் மேல் உருக்கமாயிருப்பேன் என்கிறார். (ரோ.9:15) எவனைக் கடினப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனை கடினப்படுத்துகிறார். (ரோ.9:18) ஆம் பார்வோனைக் கடினப்படுத்தினார். (ரோ.9:17) இது தேவனுடைய பாரபட்சம் என்று நீங்கள் கூறலாம். ஆனால் அது அப்படியல்ல. உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி : நீ என்னை ஏன் இப்படி உருவாக்கினாய் என்று சொல்லலாமா? (ரோ.9:20) கூடாதே. குயவனுக்கு களிமண்மீது அதிகாரம் இல்லையா? குயவன் ஒரு பாத்திரத்தை கனமானதற்கும், மற்றொரு பாத்திரத்தை கனவீனமான காரியத்திற்கும், உருவாக்க அவனுக்கு களிமண் மீது அதிகாரம்

இல்லையா? (ரோ.9:27) உண்டே! ஆதலால் விரும்பிகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல இரங்குகிற தேவனாலே எல்லாம் ஆகும். (ரோ.9:16) ஆக தெரிந்துக்கொள்ளுதல் என்பது தேவனுடைய உரிமை. நமக்கும் நம்முடைய மனைவியை, செய்யும் தொழிலை, செல்ல இருக்கும் சபையை தெரிந்துக்கொள்ளும் உரிமை உண்டு.

21. **தேவன் தம்முடைய மணவாட்டியை தெரிந்துக்கொள்ளுதல் (Election) முறையில் தெரிந்தெடுக்கிறார்.** தெரிந்துக்கொள்ளுதல் என்பது ஒரே தன்மை, ஒரே தகுதி, வேண்டப்பட்ட தன்மைகள், தகுதிகள் உள்ள பலரிலிருந்து ஒருவரை தெரிந்தெடுப்பதாகும். உதாரணமாக 100 பேருக்கு ஒரே தகுதி தன்மை உண்டு. ஆனால் அந்த 100 ல் ஒருவரை தெரிந்தெடுப்பதுதான் தெரிந்துக்கொள்ளுதல் ஆகும். ஆக தெரிந்துக்கொள்ளுதல் தேவனுடைய, உங்களுடைய, என்னுடைய சுயாதினம். அதே வேளையில் Selection என்பது பலரகங்களில் இருந்து ஒன்றை தெரிந்தெடுத்தல். உதாரணமாக பல ரகமான பழங்கள், துணிகள், இனிப்பு வகைகள். இவற்றிலிருந்து ஒன்றை தெரிந்தெடுப்பது ஆகும். ஆனால் Election என்பது அப்படியல்ல. நீங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கலாம். உங்கள் பாவமன்னிப்புக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவராக இருக்கலாம். கொர்நெலியு போன்று தேவபக்தி உள்ளவனும், தேவனுக்கு பயந்தவனும், ஜனங்களுக்கு மிகுந்த தானதர்மங்களை செய்கிறவனாய் இருந்தான். எப்பொழும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருக்கலாம். பரிசுத்த ஜீவியம், நீதி நேர்மையை தன்னுடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறவர்களாக இருக்கலாம். இவை எல்லாம் ஒரு கிறிஸ்தவனுக்கு தேவைதான். அத்தியாவசியமும் கூட. ஆனாலும் இவை அனைத்தும் தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதலுக்கு சாத்தியம் ஆகாது. மேலும் ஒரு எடுத்துக்காட்டு அரசியலில் M.L.A., M.P., பதவிகளுக்குப்போட்டி போட்டியிடும் அனைத்து நபர்களிடத்திலும் தேவையான தகுதிகள் உண்டு. ஆனால் நாம் தெரிந்துக்கொள்ளுவது ஒருவரையே. தேவனும் இதே முறையாய்தான் கடைபிடிக்கிறார். அனைத்து தகுதிகளும் உள்ள ஒரு கூட்ட ஜனங்கள் மத்தியில் தேவன் ஒரு சிலரை தமக்கென்று தெரிந்துக்கொள்கிறார். அப்படியானால் தகுதியிருந்து நிராகரிக்கப்பட்ட மற்ற அங்கத்தினர்கள் நிலை என்ன? அவர்கள் மணவாட்டி ஆக முடியாது. மற்றபடி முதலாம் உயிர்தெழுதலில் பங்கு கொள்வார்கள். (வெளி.20:6) முதலாம் உயிர்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும், பரிசுத்தவானுமாய் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பார்கள். இங்கு முதலாம் உயிர்தெழுதலில் யார் பங்குபெறுவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதை மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலோடு ஒப்பிட்டு மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலை முதலாம் உயிர்தெழுதல் என்று கூறக் கூடாது.

22. **இதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு.** யோசுவா மற்றும் காலேப். எகிப்தை விட்டு வெளியேறிய இஸ்ரவேலரில் சிறியவர், பெரியவர், உடன்பிரயாணம் செய்த இதர ஜனங்கள் கூட்டு மொத்தமாக சுமார் 20,00,000 பேர்கள் இருந்தார்கள் என சரித்திர ஆசிரியர்கள் கணக்கெடுகிறார்கள். இவர்கள் யாவரும் பலிசெலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழ். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தை புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். அவர்களோடு சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக்குடித்தார்கள். தூதர்களின் மன்னாவை புசித்தார்கள். ஆனாலும் அவர்களில் யோசுவா மற்றும் காலேப் என்ற இருவர் மாத்திரமே கானானில் பிரவேசித்தார்கள் இதுதான் தெரிந்துக்கொள்ளுதல்.

23. **மூன்றாவது ஒரு எடுத்துக்காட்டு.** நீங்கள் உங்களுக்கு ஒரு சர்ட், பேண்ட் தைக்க இரண்டரை மீட்டர் துணி எடுத்தீர்கள். இதில் இரண்டேகால் மீட்டர் துணி மாத்திரமே தேவைப்பட்டது. கால்மீட்டர் துணியை கழித்துவிட்டார்கள். கழிக்கப்பட்ட இந்த மீதமுள்ள துணியானது நீங்கள் உங்கள் சர்ட்காக எடுத்துக்கொண்ட துணியிலிருந்து எந்த விதத்திலும் தரம் குறைந்ததா? இல்லை. உங்கள் தேவை போக மீதியானதும் அதே தரத்தைக்கொண்டது தான். அதுபோன்று தான் மணவாட்டி தெரிந்துக்கொள்ளபடுதலும் ஆகும். ஆக தெரிந்துக்கொள்ளப்பட்ட மணவாட்டி போக மீதமுள்ளவர்கள் முதலாம் உயிர்தெழுதலில் பங்குபெற்று நித்திய ஜீவனை பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் மணவாட்டி அல்ல.

24. **நான்காவது ஒரு எடுத்துக்காட்டு.** ஆண், பெண் உடல் உறவின் போது ஆணிலிருந்து வெளிவரும் விந்துவில் லட்சக்கணக்காண கிருமிகள் உள்ளன. அவை அனைத்தும் ஒன்றுப்போலவே தோன்றும். ஒன்றுக்கொன்று வித்தியாசம் இருக்காது. இதில் ஜீவனுக்கென்று தேவனால் நியமிக்கப்பட்ட அந்த ஒரு கிருமி லட்சகணக்கானக் கிருமிகள் மத்தியில் மெல்ல மெல்ல நகர்ந்து சென்று பெண்ணிலிருந்து முன்குறிக்கப்பட்ட முட்டையுடன் கருத்தரிக்கிறது. மற்ற கிருமிகள் அனைத்தும் மாண்டு போகின்றன. எந்த கிருமியும் முட்டையுடன் கருத்தரிக்க வேண்டும் என்பதை தேவனே தீர்மாணிக்கிறார். அது பையனோ, அல்லது பெண்ணோ என்பதனையும் தேவனே தீர்மானிக்கிறார். லட்சக்கணக்கான கிருமிகளில் முதலாவது வரும் கிருமி முட்டையோடு கருத்தரிப்பது இல்லை. மாறாக தேவன் எதை தீர்மானிக்கிறாரோ அந்த கிருமியே முட்டையுடன் கருத்தரிக்கிறது. தேவன் லட்சத்தில் ஒன்றை தெரிந்துக்கொள்கிறார். அதுவே தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதல்.

25. கிறிஸ்துவின் மணவாட்டி ஒரே நபர் இல்லை. மாறாக அவள் ஆயிரக்கணக்கான நபர்களை கொண்டதாகும். இவர்கள் ஒருமித்து மணவாட்டி என ஒருமையில் அழைக்கப்படுகிறார்கள். பல நபர்களைக் கொண்ட மணவாட்டி ஒருமையில் எப்படி அழைக்கப்படுகிறார்? கிறிஸ்து நமக்காக உண்டாக்கப்படவில்லை. சகலமும் அவரால் அவருக்கென்று சிருஷ்டிக்கப்பட்டது. அதன்படி நாம் கிறிஸ்துவுக்காக சிருஷ்டிக்கப்பட்டோம். தாவீதுக்கு ஐநூறு மனைவிகள் இருந்தனர். சாலொமோனுக்கு ஆயிரம் மனைவிகள் இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் அவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் இந்த ஸ்திரீகளில் ஒருவராவது வேறோரு புருஷனை மணக்கக்கூடாது. அவர்களுக்கு ஒரே கணவன் தான் இருக்க வேண்டும். ஏனென்றால் ஸ்திரீ மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டாள், மனுஷன் ஸ்திரீக்காக உண்டாக்கபடவில்லை. அந்த ஐநூறு ஸ்திரீகளும் தாவீதின் மனைவிகளே. அந்த ஆயிரம் ஸ்திரீகளும் சாலொமோனின் மனைவிகளே. இது ஒரு முன் அடையாளம். ஆயிரம் வருட அரசாட்சியில் கிறிஸ்து சிங்காசனத்தில் உட்காரும் போது அவருடைய மணவாட்டி ஒரே நபராக இருப்பது இல்லை. அது ஆயிரக்கணக்கான பேரை கொண்டதாக இருக்கும். ஆனால் அவர்கள் அனைவரும் ஒருமித்து மணவாட்டி என அழைக்கப்படுகிறார்கள். அது கிறிஸ்துவின் மணவாட்டியாக விசுவாசிகள் அனைவரும் ஒருமித்து நாம் கிறிஸ்துவுக்காக உண்டாக்கப்பட்டோம். ஒரு மனிதன் அநேக ஸ்திரீகளை திருமணம் செய்து கொள்வது அந்நாட்களில் நியாயப்பிரமாணத்தின்படி சட்டப்பூர்வமாண ஒரு செயலாக இருந்தது. புருஷன் ஸ்திரீக்காக உண்டாக்கப்படவில்லை ஆதலால், ஒரு ஸ்திரீ ஒரு புருஷனை மாத்திரமே திருமணம் செய்து கொள்ளலாம். தாவீது, சாலொமோன் மனைவி மற்றும் மறுமனையாட்டிகள் அனைவரும் இதர புருஷர்களை திருமணம் செய்துக்கொள்ளவில்லை.

26. கணவன் மனைவி இருவரும் ஒரே விசுவாசம் ஒரே நம்பிக்கையில் இருந்து இரட்சிப்பின் அனுபவத்திற்குள் இருந்தால் திருமணத்தின் போது உங்கள் தெரிந்துக்கொள்ளுதல் சரி. மற்றபடி ஒருவர் இரட்சிப்பின் அனுபவத்திலும் மற்றொருவர் இரட்சிப்படையாத நபராக இருந்து மரணம் அவர்களை சந்திக்குமாயின் அவர்கள் தெரிந்துக்கொள்ளுதல் தவறு ஆகும். ஏனென்றால் கணவனுடைய சரீரத்தின் ஒரு பாகமே மனைவி. இருவரும் இருவராயிராமல் ஒரே சரீரமாக, ஒரே மாம்சமாக இருக்கிறார்கள். ஆதலால் கணவன் ஒரு விசுவாசத்திலும், மனைவி மற்றொரு விசுவாசத்திலும் இருக்க முடியாது, கூடாது. கிறிஸ்துவில் இருந்து அவருடைய சரீரமாகிய சபையை பிரிக்க முடியாது. அதுபோன்றுதான் கணவனுடைய சரீரத்தில் இருந்து அவன் மனைவியை பிரிக்கமுடியாது. ஆனாலும் அவிசுவாசி பிரிந்துபோனால் போகட்டும்.(1கொரி.7:14) அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலையிலே நிலைத்திருக்கடவன்.(கொரி.7:17,20)

27. மேலே கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை எவ்வாறு தெரிந்தெடுக்கிறார் எனக்கண்டோம். **இப்பொழுது மணவாட்டி சபை எப்படி எடுத்துக்கொள்ளப்படுகிறது** என்பது குறித்து சுருக்கமாகக் காண்போம். இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் தங்கள் இருதயத்தில் அல்ல வெளிவேஷத்திலே மேன்மைப்பாராட்டி வருகிறார்கள். (2கொரி.5:12) எடுத்துக்கொள்ளப்படுதல் என்பது நிச்சயமாக நடக்கப்போகும் ஒரு சம்பவமாக இருக்கிறது. இது தெரிந்துக்கொள்ளப்பட்ட மணவாட்டிக்கு மாத்திரமே உரியதாகும். இது நிகழப்போகும் நேரத்தை கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறாள். மணவாட்டி இயேசு கிறிஸ்துவின் சரீரத்தின் பாகமாக இருக்கிறாள். இயேசு கிறிஸ்து - வார்த்தை. ஆகவே அவரது மணவாட்டியும் தேவனுடைய வார்த்தையில் நிலைத்து நிற்க வேண்டும். அவள் மனுஷர்களுடைய கற்பனைக்களுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்படிந்திருக்க முடியாது. அவள் ஸ்தாபன சபைகளின் கட்டுப்பட்டுக்குள் இருக்க முடியாது. அவள் திருவசனத்தைக்கேட்டு அதன்படி நடந்து, கனி கொடுக்கிறவளாய் இருக்கிறாள். கிறிஸ்து உங்களுக்குள் வாசமாய் இருந்தால் நீங்கள் அவருடைய வார்த்தையை ஒருகாலும் மறக்க, மறுக்க முடியாது. உங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவி உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும். இது பிரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாகவே சாத்தியமாகும். அந்த ஆவி கிறிஸ்துவின் ஜீவனாகும். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம். (1கொரி.12:13) இவர்கள்தான் வார்த்தையாகிய மணவாட்டி.

28. ஏனோக்கு ஆதாமின் ஏழாம் தலைமுறையானவன். ஏனோக் சபைக்காலங்களுக்கு உதாரணமாய் இருக்கிறான். அவனுக்குமுன் இருந்த ஆறுபோரும் மரித்தார்கள். ஆனால் ஏனோக் மரணமடையாமல் எடுத்துக்கொள்ளப்பட்டான். (எபி.11:5) ஏழாம்சபைக்காலத்தில் எடுத்துக்கொள்ளுதல் நடைபெறும் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. நாம் ஏழாம் சபைக்காலத்தில் இருக்கிறோம் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதற்கு ஏனோக்கின் எடுத்துக்கொள்ளப்படுதல் ஒரு முன் அடையாளமாக இருக்கிறது. கடைசி சபைக்காலத்தில் உள்ள மணவாட்டி வெளியே அழைக்கப்பட்டு, மரணமின்றி எடுத்துக்கொள்ளப்படுவாள். மணவாட்டி சபை எடுத்துக்கொள்ளப்பட்டவுடன், லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிடும். எப்பொழுதும் முரண்பாடானவைகளையே போதிக்கும் திருச்சி சகோ. ரூபன் போன்றோர் லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிட்டது என்கிறார்கள். இது ஒரு தவறான போதனை. மணவாட்டி சபை எடுத்துக்கொள்ளபட்டுவிட்டது என்றால், தங்களை மணவாட்டி என அழைத்துக்கொள்ளும் இவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்களே. இவர்கள் மணவாட்டி சபையின் அங்கத்தினராக இல்லை என அது அர்த்தமாகும். ஏழாம் சபைக்கால முடிவுக்குறித்து இவர்கள் தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கும் சகோ.வில்லியம் மாரியன் பிரன்ஹாம் என்ன கூறுகிறார்? லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிட்டதா? இல்லை. இது முடிந்து விட்டது என்று நான் ஒருபோதும் கூறினது இல்லை. அவ்விதம் நான் கூறியிருந்தால், அதை தவறாக கூறினேன். அல்லது நீங்கள் அதை தவறாக புரிந்துக்கொண்டீர்கள். இந்த லவோதிக்கேயா முடிவடையவில்லை. அது முடிவடைந்தால் சபை போய்விடும். சபை உள்ளவரை அது முடிவடையவில்லை. (கே.ப.391 பக்கம்.31 பத்தி.74 நாள்.30.8.1964) சபைக்காலமானது பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி அதாவது சபை ஆரம்பமான நாள் (அப்.2:47) முதல் சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளுக்கு இடைப்பட்டகாலம் ஆகும். சபைக்காலம் முடிந்துவிட்டது என உபதேசிக்கும் திருச்சி ரூபன் மற்றும் அவரது சகாக்கள் யாவரும் பிசாசின் கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையில் இக்காலத்திற்குரிய செய்தியில் இல்லாத ஒன்றை உபதேசிப்பதையே தங்கள் தொழிலாகக்கொண்டுள்ளார்கள். ஏனென்றால் இவர்களது ஆரம்பமே சரியில்லை. ஏனென்றால் பாலாசீர் லாறி மணவாட்டியுடன் இவர்களது கூட்டு / ஐக்கியம்.

29. நாம் ஆங்கிலத்தில் உபயோகிக்கும் Rapture என்னும் பதம் வேதாகமத்தில் எங்கும் இல்லை. Caughtup என்னும் ஆங்கிலப்பதமே உள்ளது. இதுக்குறித்து நாம் 1தெச.4:13-17 வசனங்களில் தியானிக்கலாம். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார். அவர் இறங்கி வரும்போது மேற்க்கண்ட மூன்று காரியங்களையும் அவரே செய்கிறார். **ஆரவாரம்** என்பது செய்தி. அது ஜீவ அப்பமாக முதலில் புறப்பட்டுச்சென்று மணவாட்டியை பிறப்பிக்கின்றது. அதாவது கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வரும்போது முதலாவதாக ஆரவாரம் புறப்பட்டுச்சென்றது. இது ஜனங்களை ஒன்றுக்கூட்டுவதற்கு என்று அழைக்கப்படும் செய்தியாகும். இப்பொழுது தீவட்டிகளை சுத்தப்படுத்தும் (Trim) சமயமாகும். மணவாளன் வருகிறார், எழுந்து உன் தீவட்டியை சரிப்படுத்து. புத்தியுள்ள கன்னிகைகள் அதற்கு கீழ்ப்படிந்தார்கள். இது தீவட்டியை சரிப்படுத்தும் நேரம். இது மல்.4ம் அதியின் நேரம். இது லூக்.17 ம் அதியின் நேரம். ஆனால் சிலருடைய தீவட்டியில் எண்ணெய் இல்லாதிருந்தது. ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி மணவாட்டி ஒன்று சேர அவளை அழைக்கிறது. இந்த செய்தியே ஆரவாரம். மணவாட்டி என்பவள் தன்னை ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியோடு இணைத்து தான் யார் என்பதை வெளிப்படுத்துகிறாள். கிறிஸ்துவின் மணவாட்டி என்பவள் அந்தந்த சபைகாலத்து தூதர்களின் செய்தியோடு தன்னை இணைத்துக்கொள்பவளாக இருப்பாள். அப்படியானால் ஏழாம் சபைகாலத்து தூதனுடைய செய்திக்கு கீழ்படிந்து நடக்கிறவளே ஏழாம் சபைகாலத்தில் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட அவரது மணவாட்டி.

30. ஆரவாரம் - செய்தியானது இதுவரை மறைக்கப்பட்டிருந்த அநேக இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தியது. உதாரணமாக : நாம் ஒரே தேவன், அவரது நாமம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராக இருக்கிறார் என்ற உண்மையைக் கண்டோம். திரித்துவம் என்ற பிசாசின் உபதேசம் உடைத்தெரியப்பட்டது. பிசாசின் முகத்திரை கிழித்தெறியப்பட்டது. அடுத்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் மாத்திரமே பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் என்ற உண்மை வெளிவந்தது. மேலும் ஏழு முத்திரைகளின் இரகசியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டது. ஏவாள் சாப்பிட்டது ஒரு மரத்தின் கனி அல்ல. மாறாக அவள் சாத்தானுடன் உடலுறவுக்கொண்டாள். அதினால் பிறந்த காயின் பொல்லாங்கனால் உண்டானவன் என்றும், அவன் பெயர் வம்சவரலாற்றில் இல்லை என்பதையும் கண்டோம். ஸ்திரீகள் சபையில் பிரசிங்கிக்கக் கூடாது அமைதலாக இருக்க வேண்டும்,

அவர்களது தலைமுக்காடு அவர்களது சேலை முந்தானை அல்ல, மாறாக அவர்களது நீண்ட தலை மயிரே என்றும் கண்டோம். ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்கவேண்டும், பொது இடங்களுக்கு சென்று பணிசெய்ய கூடாது என்றும் கண்டோம். ஒரு கிறிஸ்தவனுக்கு கர்த்தருக்குரிய தசமபாகம் கண்டிப்பானது என்பதையும் அறிய வந்தோம். ஏழுசபைக்காலங்களில் தூதர்கள் யார் யார் அவர்களுடைய காலங்கள் என்ன என்பதையும் அறிய வந்தோம்.

(அ) எபேசு சபைக்காலம் கி.பி. 53-170. தூதன் அப்.பவுல். முதாலவது சபைக்காலமானது கி.பி. 53-ல் துவங்கியது. அப்.பவுல் எபேசு பட்டிணத்தில் சபையை ஏற்படுத்தினான். கி.பி. 66 ல் சிரச்சேதம் பண்ணப்பட்டான். ஆக சுமார் 22 ஆண்டுகள் பவுல் எபேசு சபை மேய்ப்பனாக இருந்தான். பவுலின் மரணத்திற்கு பிறகு யோவான் எபேசு சபை மேய்ப்பனானான்.

(ஆ) சிமிர்னா சபைக்காலம் கி.பி. 170-312 தூதன் - இரினேயஸ். (இ) பெர்கமு சபைக்காலம் கி.பி.312-506 தூதன் - மார்ட்டீன்.

(ஈ) தியத்தீரா சபைக்காலம் கி.பி. 506-1520 தூதன் - கொலம்பா. (உ) சர்தை சபைக்காலம் கி.பி. 1520-1750 தூதன் - லூதர்.

(ஊ) பிலதெல்பியா சபைக்காலம் கி.பி. 1750-1906 தூதன் - வெஸ்லி.

(எ) லவோதிக்கேயா சபைக்காலம் கி.பி. 1906-இன்னும் முடிவடையவில்லை. தூதன் - வில்லியம் மாரியன் பிரன்ஹாம். லவோதிக்கேயா சபை முடிவுகாலக்கட்டத்தில், தன்னைத்தானே தீர்க்கதரிசி என்று பிரகடணம் செய்துகொண்டு, ஆப்ரிக்கா மண்ணில் இருந்து சகோ காக்குவ் பிலிப்பு எழும்பியுள்ளார். கர்த்தர் என்னை அழைத்தார், தரிசனத்தில் வெளிபடுத்தினார், ஊழியத்தைக் கொடுத்தார் போன்ற வீணான வார்த்தைகளை நாம் நம்பமுடியாது. அனைத்து அழைப்புகளும் வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டிருக்கவேண்டும். வேதவாக்கியங்கள் அந்த மனிதனின் அழைப்பை உறுதிசெய்யவேண்டும். ஆனால் இவரது காரியத்தில் அப்படியல்ல. ஆனாலும் இவருக்கு கூலிக்காக பல்லாக்கு தூக்க சகோ மார்ஷல், சகோ அனில், சகோ ஆபிரகாம் நம் மத்தியில் உண்டு.

ஏழுசபைக்காலங்கள் அந்தந்த சபைக்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் நமக்கு விவரிக்கப்பட்டது. ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சிக்கடுத்த இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீக சுபாவங்கள் நமக்கு விவரிக்கப்பட்டன. மேலும் தேவன் எவ்வாறு தம்முடைய மணவாட்டியை தெரிந்தெடுக்கிறார், மணவாட்டி சபை எவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது போன்ற சம்பவங்கள் தெளிவுப்படுத்தப்பட்டன. மேலும் ஆயிரம்வருட அரசாட்சி இதில் பங்குபெருகிறவர்கள் யார்? அடுத்த பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு போன்ற சம்பவங்கள் நமக்கு எடுத்துரைக்கப்பட்டன. ஆவி ஆத்துமா சரீரம் தெளிவுப்படுத்தப்பட்டது. மேலும் வேதவாக்கியங்களில் மறைந்துக்கிடந்த அநேக இரகசியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டது. ஆக ஆரவார செய்தி நமக்கு எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தை கொண்டுவருவதாக இருக்கிறது. பாருங்கள் விசுவாசத்தினாலே ஏனோக் மரணத்தைக்காணாதப்படிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். (எபி.11:5) நாம் யாராக இருந்தாலும் சரி, விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம்.

31. இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு முதலாவது **ஆரவாரம்.** இது செய்தி. ஆரவாரம் ஒரு செய்தியைக்கொண்டு வருகிறது. அந்த செய்தியை மணவாட்டி மாத்திரமே ஏற்றுக்கொள்வாள். அது அவளை கூட்டிச்சேர்க்கும் ஒரு செய்தியாக இருக்கிறது. அந்த செய்தி வெளிப்படுத்திய காரியங்களை நாம் மேலே தியானித்தோம். **அடுத்து உயிரோடே எழுப்பும் சத்தம்.** இது யோவான் 11:38-44ல் லாசருவை கல்லறையை விட்டு வெளியே வரும்படி அழைத்த அதே சத்தம். அதாவது முற்காலங்களில் நித்திரை அடைந்துள்ள மணவாட்டியை உயிரோடே எழுப்பும் சத்தம். ஒரு நாள் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடே எழுந்திருப்பார்கள். இது நிகழ காத்துக்கொண்டிருந்த, முன்பு இருந்த சபைக்காலங்களின் பரிசுத்தவான்கள் உயிரோடேழுந்து தங்கள் கல்லறையை விட்டு வெளியே வருவார்கள். அப்பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர்களுடன் அணிவகுத்து ஆகாயத்துக்குள் செல்லுவோம். இந்த அழிவுள்ள சரீரம் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படும். **மூன்றாவதாக எக்காளம்.** எக்காளம் ஊதப்பட்டு மணவாட்டி விருந்திற்கு அழைக்கப்படுகிறாள். அதுதான் ஆட்டுக்குட்டியானவர் மணவாட்டியுடன் ஆகாயத்தில் நடத்தும் கலியாண விருந்து. ஆகாயத்தில் நடக்கப்போகும் விருந்துக்காக உயிரோடேழும்பின மணவாட்டியும், உயிரோடுள்ள மணவாட்டியும், ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். எக்காளம் முழங்கி மணவாட்டி ஆட்டுக்குட்டியானவருடைய விருந்துக்கு அழைக்கப்படுகிறாள். எக்காள பண்டிகைக்கு இஸ்ரவேல் ஜனங்களை வரவழைக்க அந்நாட்களில் எக்காளம்தான் பயன்படுத்தப்பட்டது. இது பெந்தெகொஸ்தே பண்டிகையாகும். அந்த எடுத்துக்கொள்ளப்படுதல் நாளுக்காக நாம் ஆயத்தமா? நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆயத்தமா? கர்த்தாவே நாங்கள் உம்மை நெருங்கி வெகு விரைவில் நிகழயிருக்கும் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தமாய் காணப்பட எங்களுக்கு அருள்புரியும். கிருபையாய் இரும்.

32. **பழைய ஏற்பாட்டில் மூன்றுமுறை எடுத்துக்கொள்ளப்படும் சம்பவங்கள் நடந்ததை காண்கிறோம்.**

(அ) முதலாவது ஏனோக். விசுவாசனத்திலே மரணத்தை காணாதப்படிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படாமல் போனான். அவன் தேவனுக்கு பிரியமானவன் என்று, அவன் எடுத்துக்கொள்ளப்படதலுக்கு முன்னமே சாட்சி பெற்றான். (எபி.11:5) நாம் எடுத்துக்கொள்ளபடுதலில் பங்குபெற வாஞ்சிக்கிறோம். ஆனால் நாம் தேவனுக்கு பிரியமான பாத்திரம் என்று தேவன் நம்மைக்குறித்து சாட்சி கொடுத்துள்ளாரா? கொடுக்கிறாரா? பாருங்கள். ஏனோக் தன் வாழ்நாள் 365 ஆண்டுகளில் 300 ஆண்டுகள் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டு வந்தான். அவ்வாறாக சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமல் போனான். தேவன் அவனை எடுத்துக்கொண்டான். (ஆதி.5:22-24) சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளை ஆவலாய் எதிர்நோக்கி கொண்டிருக்கும் நாம் நம்முடைய வாழ்நாட்களில் எவ்வளவு நாட்களாக தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம்?

(ஆ) இரண்டாவதாக எலியா. எலியாவும், எலிசாவும் பேசிக்கொண்டு நடந்து போகையில் இதோ அக்கினி ரதமும், அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். (2இராஜா.2:11) ஆம் எலியா அக்கினி மயமான ரதத்தில் ஏறி, சுழற்காற்றில் எடுத்துக்கொள்ளப்பட்டான்.

(இ) மூன்றாவதாக இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடேழுந்து, சில நாட்கள் இவ்வுலகில் வாசம் செய்து, அதன் பின்பு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இயேசு பழைய ஏற்பாட்டிறகும், புதிய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள பொறுப்புக்கல் (Key Stone) பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் இணைத்தவர் இவரே. பழைய ஏற்பாட்டில் இந்த மூவரும் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ச்சிக்கு சாட்சிகளாய் இருக்கிறார்கள். இங்கு ஏனோக்கிற்கு தேவனுடைய வார்த்தை உண்டானது. அதுபோன்று எலியாவிற்கும் தேவனுடைய வார்த்தை உண்டானது. ஆனால் இயோசுவோ தேவனுடைய வார்த்தையாய் இருந்தார்.

33. **புதிய ஏற்பாட்டில் மத்.27:45-53 வசனங்களை தியானித்தால் அதில் எடுத்துக்கொள்ளப்படுதல் ஒருமுறை நிகழ்ந்ததை காண்கிறோம். அடுத்து இருமுறைகள் எதிர்பார்ப்பில் இருக்கிறது.**

(அ) கல்லறைகளும் திறந்தது. நித்திரை அடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரமும் எழுந்திருந்தது. அவர் (இயேசு) உயிர்தெழுந்தப்பின்பு, இவர்கள் (பரிசுத்தவான்கள்) கல்லறையை விட்டு புறப்பட்டு, பரிசுத்தநகரத்தில் பிரவேசித்து அநேகருக்கு காணப்பட்டார்கள். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் இவ்வுலகில் வந்து, ஜனங்களிடையே நடமாடி, இயேசு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருடன் கூட எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். தேவன் பேரில் விசுவாசம் கொண்டவர்களிடம் தேவனுடைய வார்த்தை வந்தது. காத்திருந்த பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களை அவர் அழைத்துக்கொண்டு உன்னதத்திற்கு ஏறினார். புதிய ஏற்பாட்டில் எடுத்துக்கொள்ளப்படுதல் ஒருமுறை நடந்துவிட்டது.

(ஆ) இரண்டாம் முறை எடுத்துக்கொள்ளப்படுதல் 1தெச.4 அதியில் கூறப்பட்டுள்ள மணவாட்டி சபைக்கு சம்பவிப்பதாகும். மரித்தோர் உயிரோடு எழும்புவார்கள். உயிரோடிருப்பவர்கள் உயிர்தெழுந்தவர்களுடன் மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகும். மரித்தவர்கள் உயிரோடேழுந்திருப்பார்கள். அதாவது சபைக்காலங்களில் மரித்த பரிசுத்தவான்கள் தங்கள் கல்லறையை விட்டு வெளியே வருவார்கள். அப்பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர்களுடன் அணிவகுத்து ஆகாயத்திற்குள் செல்வோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபம் ஆகும். இந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரத்திற்காக, ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியையடைந்த கிறிஸ்துவின் மணவாட்டி மாத்திரம் ஆவலுடன் எதிர்நோக்கி கொண்டிருக்கிறாள்.

(இ) புதிய ஏற்பாட்டில் எடுத்துக்கொள்ளப்படுதல் மூன்றாம் முறையாக வெளி.11:11,12 ல் கூறப்பட்டுள்ள இரண்டு சாட்சிகள் எடுத்துக்கொள்ளப்படுவதாகும். இவ்விரு சாட்சிகளும் (எலியா மற்றும் மோசே) கிறிஸ்துவின் ஆவியை பெற்றவர்களாய் மறுபடியும் வந்து யோசேப்பு தன் சகோதரர்களுக்கு சாட்சியாக இருந்தது போல இவர்களும் யூதர்களுக்கு சாட்சியாக இருப்பார்கள். இவர்களுடைய பிரேதங்கள் மூன்று நாட்கள் வீதிகளில் கிடக்கும். அதன்பின்பு ஜீவஆவி இவர்களுக்குள் பிரவேசித்து, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆக எடுத்துக்கொள்ளப்படுதல் பழைய ஏற்பாடுகாலத்தில் மூன்று முறைகள், புதிய ஏற்பாடுகாலத்தில் மூன்று முறைகள் நடைபெறுகின்றன. இவைகள் யாவும் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கடுத்த சம்பவங்கள். இதை உயிர்தெழுதலுக்கடுத்த சம்பவமாக கருதக்கூடாது. ஏனென்றால் நாம் முதலாம் உயிர்தெழுதல் குறித்து முதல் முறையாக வெளி.20:5 ல் தான் காண்கிறோம்.

34. **கிறிஸ்துவுக்குள் மரித்து முதலாவது எழுந்திருப்பது, உயிரோடிருந்து எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறுபவர்கள் யார்?**

(அ) முதலாவது அந்த நபர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்க வேண்டும். அதன்பின் ஜலத்தினாலும், ஆவினாலும் பிறக்க வேண்டும். தன்னுடைய பாவமன்னிப்புக்கென்று, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால், ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும். இருந்தாலும், தேவன் அறியாமையுள்ள காலங்களில் காணாதவர்போல் இருந்தார். அன்று அவர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என உச்சரித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள். இரட்சிப்பை பெற்றார்கள். அது உண்மை. அதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் லவோதிக்கேயா சபைக்காலம் அப்படியல்ல. சத்தியமானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால் இப்பொழுது சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த நீங்கள், மனப்பூர்வமாய் பாவங்கள் (தேவனுடைய வார்த்தை மீது அவிசுவாசம்) செய்கிறவர்களாய் இருந்தால், தேவனுடைய கோபாக்கினை நியாயத்தீர்ப்பின் நாள் உங்கள் மேல் வரும். (எபி.10:26)

(ஆ) இரண்டாவது நீங்கள் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல, நீங்கள் வசிக்கும் காலத்திற்குரிய தூதனுடைய செய்தியை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல, அதை சாந்தமாய் உங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அதன்படி கிரியை செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். (யாக்.1:21,22)

(இ) மூன்றாவது இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீக, திவ்ய சுபாவங்களில் பங்குபெற்றவர்களாக இருக்க வேண்டும். (2பேது.1:21,22) அதாவது நீங்கள் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைந்தவர்களாய் இருக்கவேண்டும்.

(ஈ) நான்காவது நீங்கள் அன்பிலே பரிசுத்தம் உள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாய் இருப்பதற்கு தேவனால் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். (எபே1:4) தேவபக்திக்கு ஏதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும், தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத்.1:3) ஆதலால் நீங்கள் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட, அழைக்கப்பட்ட, நீதிமான்களாக்கப்பட்ட, மகிமைபடுத்தப்பட்ட பாத்திரங்களாக இருக்கவேண்டும். இவர்கள்தான் கிறிஸ்துவின் மணவாட்டி. இயேசு : என் வசனத்தைக் கேட்டு (என் வசனத்தை புரிந்துக்கொண்டு) என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்கு உட்பட்டுவிட்டான். (யோ.5:24) இவர்கள் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு நாளில் கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் வீற்றிருந்து, உலகத்தையும், தேவதூதர்களையும் நியாயம் விசாரிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை ஜனங்கள், ராஜாக்கள் மேல் செலுத்த அதிகாரம் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு உண்டு. ஜனங்களை தண்டிக்கவும், மேன்மக்களை இருப்பு விலங்குகளால் கட்டவும், ராஜாக்களை சங்கிலிகளினால் கட்டவும் அதிகாரம் உண்டு. இந்தக்கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். (சங்.149:5,9) இவர்கள் பெயர் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இவர்கள் பெயர் எக்காரணம் கொண்டும் கிறுக்கிப்போடப்படமாட்டாது. இதுகுறித்து தானியேல் : சிங்காசனங்கள் வைக்கப்பட்டது. ஆயிரமாயிரம் பேர் அவரை சேவித்தார்கள். இதுதான் மணவாட்டி. கோடாக்கோடிப்பேர் அவருக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்காக நின்றார்கள். (தானி.7:9,10)

35. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிக்கப்படும். அவர்(இயேசு) வெண்வஸ்திரம் தரித்திருப்பது போன்று, ஜெயம் கொள்ளுகிறவனுக்கும் வெண்வஸ்திரம் தரிக்கப்படும். மறுரூபமலையில் அவர் வஸ்திரம் வெண்மையாக பிரகாசித்தது. அதை பேதுரு, யாக்கோபு, யோவான் கண்டனர். இவ்விதமாகவே பரிசுத்தவான்களுக்கும் வெண்வஸ்திரம் தரிக்கப்படும். அவர்களுடைய வஸ்திரங்கள் மிக, மிக வெண்மையாக பிரகாசிக்கும். ஜீவபுஸ்தகத்திலிருந்து ஜெயம் கொள்கிறவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும், அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். (வெளி.3:5, மத்.17:2)

36. ஜீவபுஸ்தகமானது ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகம், கர்த்தருடைய ஜீவபுஸ்தகம், ஜீவிக்கிறவர்களின் புஸ்தகம் என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. உலகத்தோற்றம் முதல் இன்று என்று சொல்லப்படும் ஒரு நாள் இருக்கும் வரை தேவன் தன்னுடைய ஜீவபுஸ்தகத்தில் இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசிப்பர்கள் பெயரை எழுதிக்கொண்டு வருகிறார் என்று நினைக்கிறார்கள். இதுக்குறித்து தமிழில் ஒரு பாட்டு உண்டு. “வருவாய் தருணமிதுவே, அழைக்கிறாரே வல்ல ஆண்டவர் இயேசுவண்டை” என்ற பாட்டில் ஒரு கவியானது “சத்தியவாக்கை நம்பியே வா, நித்தியஜீவனை உனக்களிப்பார், உன் பேரை ஜீவபுஸ்தகத்தில் உண்மையாய் **இன்றே எழுதிடுவார்”** என்பதாகும். ஜீவபுஸ்தகத்தில் உள்ள பேர்கள் யாவும், உலகத்தோற்றத்திற்கு

முன்பே எழுதப்பட்டது என்பதுதான் உண்மை. தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தம் உள்ளவர்களும், குற்றமில்லாதவர்களாய் இருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே, கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்துக்கொண்டார். (எபே.1:4) இவர்கள் யாவரும் நித்திய ஜீவனை பெறுவதற்கென அளிக்கப்பட்ட தருணத்தை, ஆதாயப்படுத்திக் கொண்டார்கள். மற்றொரு சாரார் நித்திய ஜீவனை பெறுவதற்கென அளிக்கப்பட்ட தருணத்தை மறுத்தவர்கள். இவர்களின் பெயர்களும் கூட ஜீவபுஸ்தகத்தில் காணப்படுகிறது. மேலும் மறுபடியும் பிறவாத கணக்கற்றவர்களும் நித்திய ஜீவனில் பிரவேசிக்கிறதை, நாம் வேதத்தில் காண்கிறோம். இது ஒரு வினோதமான காரியமாக உங்களுக்குத் தெரியலாம். ஆனால் அது நிச்சயமாக உண்மையானது. பாருங்கள் ஜீவபுஸ்தகத்தில் உள்ள ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்பே பேர் எழுதப்பட்ட ஒரு சாரார் உண்டு. அவர்கள் பெயர் எக்காரணத்தை முன்னிட்டும் அகற்றப்படுவதில்லை. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகம், ஜீவபுஸ்தகத்தின் ஒரு பகுதி / அத்தியாயமேயென்றி வேறோரு புஸ்தகம் இல்லை. எவ்வாறு பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இருபகுதிகளாக காணப்பட்டாலும், பரிசுத்த வேதாகமும் என்று நாம் ஒருமையில் அழைக்கிறோம். அதேபோன்று ஜீவபுஸ்தகத்தில் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகம் ஒரு பகுதியாக இருந்தாலும், ஒருமையில் அது ஜீவபுஸ்தகம் என அழைக்கப்படுகிறது. பாருங்கள் இவர்கள் தேவனுடைய தீர்மானத்தின்படி, முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரராகும்படிக்கு தெரிந்துக்கொள்ளப்பட்டு முத்திரையிடப்பட்டவர்கள். ஆதலால் இவர்களின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தின் ஒரு பகுதியாகிய ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் காணப்பட்டு, எக்காரணம் கொண்டும், எந்நிலையிலும் கிறுக்கிப்போடப்பட மாட்டாது. கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த அவருடைய மகிமைக்கு புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே நாங்கள் முன்குறிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரராகும்படி, தெரிந்துக்கொள்ளப்பட்டோம். நீங்களும் உங்கள் இரட்சிப்பில் சுவிசேஷமாகிய சத்தியவசனத்தைக்கேட்டு விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். (எபே.1:11-13) அதே வேளையில் உலகத்தோற்றத்திற்கு முன்னால் பேர் எழுதப்பட்ட வேறோரு சாராரும் உண்டு. இவர்கள் பெயர்கள் பிற்பாடு பற்பல காரணங்களைக்கொண்டு அகற்றப்படுகிறதாய் இருக்கிறது. பொதுவாக ஜீவபுஸ்தகத்தில் பரிசுத்த ஆவியை பெறாத ஆனால் பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகளின் பெயர்களும் காணப்படும். அடுத்து புத்தியில்லாத கன்னிகளின் பெயரும் காணப்படும். இவர்கள் யாவரும் நியாயத்தீர்ப்பின் ஊடாக கடந்து வருவார்கள். இந்த ஜீவபுஸ்தகம் தற்போது எங்கு இருக்கிறது? இயேசு தம்முடைய சீஷர்களிடம் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக்.10:20) இதிலிருந்து ஜீவபுஸ்தகம் பரலோகத்தில் வைக்கப்பட்டு பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது காணப்படுகிறது.

37. பெந்தெகொஸ்தே நாளன்று மேல் வீட்டில் ஏறியிருந்த ஏறக்குறைய 120 பேர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு பதினோருவரோடுங்கூட நின்று பிரசிங்கிக்கிறான். வானத்தின் கீழ் இருக்கிற சகல தேசங்களிலிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமில் வாசம் பண்ணினார்கள். அப்.2:8-11 வசனங்களில் சுமார் 17 நாட்டினர் கூடியிருந்ததாக காண்கிறோம். பேதுரு பிரசிங்கித்ததை அவர்கள் கேட்டபோது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். பேதுரு அவர்களை நோக்கி (இயேசு கூறியதை நினைவுக்கூர்ந்து / பரிசுத்த ஆவி அவனுக்கு நினைப்பூட்ட, அதாவது மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும், எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிரசிங்கிக்கப்படவும் வேண்டியது. லூக்.24:47) நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்றான். (அப்.2:38) நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் அவனுடைய வார்த்தையை விசுவாசித்தார்கள். (அப்.13:48) அவரை விசுவாசிக்கிறவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறுவான் என்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் சாட்சிக்கொடுத்தபடி, அன்று பேதுருவின் வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள், ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.10:43, 2:41) இவ்வாறாக இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார். (அப்.2:47) பெந்தெகொஸ்தே நாளன்று சீஷர்கள் அந்நிய பாஷை பேசவில்லை. பேசினவர்கள் கலிலேயர்கள். கேட்டவர்கள் தங்கள் ஜென்ம பாஷையில் கேட்டார்கள். அது அவர்களுக்கு அந்நிய பாஷை அல்ல. பேசிய கலிலேயர்கள் தங்கள் ஜென்ம பாஷையில் பேசக்கேட்டார்கள். ஆதலால் பெந்தெகொஸ்தே நாளன்று சீஷர்கள் அந்நிய பாஷையில் பேசினார்கள் என்பதற்கு போதுமான ஆதாரம் இல்லை. (அப்.2:6-8)

38. இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக இந்த பூமியில் வந்து பிறந்து, பாடுகள்பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தார் என்று ஒருவன் விசுவாகிக்கவேண்டும். ஆபிரகாமுடைய விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற வேண்டும். ஆக ஒருவன் தன் விசுவாசத்தைக்கொண்டு தண்ணீர் ஞானஸ்நானத்தினால் நீதிமான் ஆகிறான். பரிசுத்த ஆவியே இந்த கிரியையை அவனில் நடப்பிக்கிறது. ஆனால் அவன் இன்னும் பரிசுத்த ஆவியை பெறவில்லை. அடுத்து தண்ணீர் - இரத்தம் அவனை முற்றிலுமாக பரிசுத்தப்படுத்துகிறது. ஞானஸ்நானத்தில் அவன் தேவனுடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு ஒரு புதிய மனிதனாகிறான். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அவனுடைய சகல பாவங்களையும் நீக்கி அவனை முற்றிலும் சுத்திகரிக்கிறது. (1யோ.1:7) இந்த பரிசுத்தமாகுதல், தேவன் அவன் சரீரத்தில் வந்து தங்க அவனை சுத்திகரிக்கிறது, பரிசுத்தப்படுத்துகிறது. இதுவும் பரிசுத்த ஆவியின் கிரியையே. ஆனால் அவன் பரிசுத்தமாக்கப்பட்டாலும் இன்னும் பரிசுத்த ஆவியை பெறவில்லை. இங்கு தான் அநேகர் வஞ்சிக்கப்படுகிறார்கள். வெள்ளை ஆடைகள் தங்கள் ஆடையின் வெண்மை நிறத்திலும், சிலர் தங்கள் பரிசுத்தவாழ்க்கையினாலும் பரிசுத்த ஆவியை பெற்றுவிட்டதாக நினைக்கிறார்கள், வஞ்சிக்கப்படுகிறார்கள். ஏமாந்துபோகிறார்கள். இவர்கள் உணர்ச்சிவசப்பட்டு, அர்த்தமேயில்லாத வார்த்தைகளை பேசுகிறார்கள். அவர்களிடம் பரிசுத்த ஆவியில்லாவிட்டாலும், அது பரிசுத்த ஆவி என தங்களை தேற்றிக்கொள்கிறார்கள். **இது பெந்தெகொஸ்தே சபையின் மோசடிவித்தை.** பிதாவே, உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம். (யோ17:17) இயேசு வந்து நம்முடைய சரீரத்தில் வாசம்பண்ணும்படி நம்மை தண்ணீரினால் கழுவி இரத்தத்தினால் சுத்திகரித்து, நம்மை பரிசுத்தமாக்குகிறார். அவர் தன் சொந்த இரத்தத்தினால் தேவனால் பரிசுத்தமாக பிறபிக்கப்பட்ட அந்த மனித சரீரத்தில் இருந்து தேவஇரத்தமான தன் சொந்த இரத்தத்தை மாம்ச இச்சைகளினால் பிறந்த நம்மை கழுவி, சுத்திகரித்திடவும், நமக்கு பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்த பாத்திரத்தை ஈந்து அதில் அவர் தாமே வந்து வாசம் பண்ணுகிறார். நம்முடைய விசுவாசம் நம்மை நீதிமானாக்குகிறது. தேவனுடைய இரத்தம் நம்மை சுத்திகரிக்கிறது. நாம் பரிசுத்த ஆவியில் நிறைந்தவுடன் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாறுகிறோம். ஜலம், இரத்தம், ஆவி பரலோகத்தில் சாட்சியிடுகிற மூன்று. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. (1யோ.5:8) நம்முடைய ஆவிக்குரிய பிறப்பு, இயற்கையின் பிறப்பை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. இயற்கையான பிறப்பில் ஒரு பெண் தன் குழந்தையை பெறும் போது, அவளிடமிருந்து முதலாவது வெளிவருவது தண்ணீர் - தண்ணீர் ஞானஸ்நானம். அதன்பின்பு அவளிடமிருந்து வெளிவருவது இரத்தம் -

குழந்தை இரத்தத்தில் கழுவப்படுகிறது. இரத்தத்தினால் குழந்தை சுத்திக்கரிக்கப்பட்டு வெளிவருகிறது - பரிசுத்தமாவுதல். மூன்றாவது கட்டமாக அந்த குழந்தை வெளிவந்தவுடன் தன் சுவாசத்தை இழுத்து, சுவாசிக்க ஆரம்பிக்கிறது - ஜீவனைப் பெறுகிறது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம்.

39. இங்கு நாம் மிக முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் ஒருவன் தண்ணீர் ஞானஸ்நானம் பெறாமல், பரிசுத்த ஆவியை பெறமுடியும். இந்த வார்த்தையை பேதுரு பேசிக்கொண்டிருக்கையில், வசனத்தை கேட்டவர்கள் யாவரும் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். (அப்.10:44) சீமோன் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான். ஆனால் அவன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாக இல்லை. (அப்.8:13,21) சமாரியர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியை பெறவில்லை. (அப்.8:15) கொர்நெலியு தேவபக்தி உள்ளவன், தேவனுக்கு பயந்தவன், ஜனங்களுக்கு மிகுந்த தானதர்மங்களை செய்தான். எப்பொழுதும் தேவனை நோக்கி, ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். இவை யாவும் தேவனுடைய சந்நிதியில் எட்டியது. ஆனாலும் அவன் தண்ணீர் ஞானஸ்நானம் பெறவில்லை, பரிசுத்த ஆவியை பெறவில்லை. ஆனாலும் அவன் வாழ்க்கையில் பரிசுத்தம் இருந்தது. ஆக ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார் என்று விசுவாசித்து தண்ணீரினால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று (நீதிமானாக்கப்படுதல்) அடுத்து தேவனுடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு (பரிசுத்தமான ஜீவியத்திற்கு வந்து ஒருவன் பரிசுத்த ஆவியை பெற தகுதிப்படுத்துகிறது / ஆயத்தமாக்குகிறது) பின் பரிசுத்த ஆவியை பெற்று தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாறுகிறான். அந்த நபர் தேவனால் முன்னறிந்து, முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்ப்ட்டு, மகிமைப்படுத்தப்படுகிறான். இவர்கள் பெயர்கள் மாத்திரம் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் உண்டு. இவர்கள் பெயர்கள் ஒருபோதும், எந்த சூழ்நிலையிலும் கிறுக்கப்படுவதில்லை. மாறாக மேற்கூறிய மூன்றில் ஒன்றை பெற்று, ஒன்றை பெறாமல், வாழ்நாளை கழிப்பவர்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் காணப்பட்டு, பிற்பாடு கிறுக்கப்படும். இங்கு ஒன்றை மாத்திரம் மறந்துவிடாதீர்கள், அதாவது ஒருவர் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவது பரிசுத்த ஆவியின் கிரியை. அவர் பரிசுத்தமாக்கப்பட்டு பரிசுத்த ஜீவியம் செய்வதும் பரிசுத்த ஆவியின் கிரியை. ஆனால் அவர் பரிசுத்த ஆவியை பெறவிட்டாலும், அவர் பேர் ஜீவபுஸ்தகத்தில் காணப்படும். ஆனால் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் அல்ல.

40. **இப்பொழுது பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு குறித்து காண்போம்.**
(அ) தானியேல் 7:9,10 நான் பார்த்துக்கொண்டிருக்கையில் சிங்காசனங்கள் வைக்கப்பட்டது. நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார். ஆயிரமாயிரம் பேர் அவரை சேவித்தார்கள். கோடாக்கோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள். நியாயச்சங்கம் உட்கார்ந்தது. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.
(ஆ) மத்.25:31-33 மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய், சகல பரிசுத்த தூதரோடும் கூட வரும்போது, தனது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் வெள்ளாடுகளிலிருந்து செம்மறியாடுகளை பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளை தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். (And he shall separate them from one another as a shepherd divideth his sheep from the goats).
(இ) வெளி.20:11,12. பின்பு நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே. மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள்.
இப்பொழுது இந்த சம்பவத்திற்கு முன் மணவாட்டி சபை எடுத்துக்கொள்ளப்படுகிறது. உபத்திரவகாலம் முடிவடைகிறது. அர்மகேதேன் யுத்தம் முடிவடைகிறது. ஆயிரம் வருட அரசாட்சி முடிவடைகிறது. இந்த சம்பவங்கள் யாவும் நடந்து முடிந்த பின்புதான் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு வருகிறது.

41. இப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பது (எடுத்துக்கொள்ளப்படுதல்) 1தெச4:16 Dead in Christ shall rise இந்த சம்பவத்திற்கும் வெளி.20:4 ல் கூறப்பட்டுள்ளவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள் என்ற சம்பவத்துக்கும் எவ்வகையிலும் சம்பந்தமே கிடையாது. பலர் இந்த இரு சம்பவங்களையும் ஒன்றோடு ஒன்றாக இணைக்கிறார்கள். இது தவறு என்பது என் கருத்து. எடுத்துக்கொள்ளப்படுதல் முதலாம் உயிர்தெழுதலுக்குரிய சம்பவம் அல்ல. எடுத்துக்கொள்ளப்படுதலில் கல்லறைகள் திறக்கப்படுகிறது. நித்திரை அடைந்திருந்த பரிசுத்தவான்களுடைய சரீரம் எழுந்திருக்கிறது. பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவரோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். (1தெச.4:16) இவர்கள் உயிரோடெழுந்து எந்த நியாயச்சங்கத்துக்கும் முன்பாக நிற்கத் தேவையிருந்ததில்லை. ஆனால் வெளி.20:4-6 வசனங்களில் கூறப்பட்ட முதலாம் உயிர்தெழுதலில் பங்குகொள்ளும் பாக்கியவானும், பரிசுத்தவானும் மணவாட்டியில் இல்லை. சற்று கவனியுங்கள் வெளி.20:4-6 சம்பவத்திற்கு முன்பே மணவாட்டி எடுத்துக்கொள்ளபடுதலில் சென்றுவிட்டாள். அவள் ஏற்கெனவே மகிமைக்குள் பிரவேசித்துவிட்டாள். இவள் நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வழியாக நித்திய ஜீவனை பெற்றுவிட்டாள். ஆதலால் இவள் எந்த நியாயத்தீர்ப்புக்கு முன்பு வந்து நிற்க வேண்டிய தேவையில்லை. இவள் தன் நியாயத்தீர்ப்பை இந்த பூமியில் ஏற்கெனவே சந்தித்து விட்டாள். ஆதலால் எடுத்துக்கொள்ளப்படுதல், முதலாம் உயிர்தெழுதல் சம்பவத்தோடு இணைப்பட்டது கிடையாது. 1தெச.4:16, வெளி.20:4 சம்பவங்கள் இரண்டும் வேறு, வேறு. எடுத்துக்கொள்ளப்படுதல் 1கொரி.15:51,52 வுடன் சம்பந்தப்பட்டது. நாம் எல்லாரும் நித்திரை அடையவில்லை. ஆனாலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாம் எல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாம் மறுரூபமாக்கப்படுவோம். ஆக கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதல் எந்தவிதத்திலும் வெளி.20:4 ல் கூறப்பட்டுள்ள முதலாம் உயிர்தெழுதலோடு சம்பந்தப்பட்ட காரியம் இல்லை. இது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், உயிரோடுயிருப்பவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவதாகும். இவர்கள் அனைவரும் தேவனால் முன் அறிந்திருக்கப்பட்டு (Fore Knowledge) அவரால் முன்குறிக்கப்பட்டு (Predestination) அழைக்கப்பட்டவர்கள் (Called One) நீதிமான்களாக்கப்பட்டவர்கள் (Justified) பரிசுத்தமாக்கபட்டவர்கள் (Sanctified) மகிமைப்படுத்தப்பட்டவர்கள் (Glorified) ரோ.8:29,30 இவர்கள் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே (பரிசுத்த ஆவியினாலே), ஒரே சரீரத்திற்குள்ளாக (Body of Christ), ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே

ஆவிக்குள்ளாக தாகம்தீர்க்கப்பட்டார்கள். (1கொரி.12:13) இவர்கள் தேவனுடைய வசனத்தைக்கேட்டு, அதன்படி நடந்து தங்கள் விசுவாசத்தை காத்துக்கொண்டவர்கள். அதாவது என் வசனத்தைக்கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டுவிட்டான். (யோ.5:24) Passed from death unto life.

42. **ஆயிரம் வருட அரசாட்சி என்பது என்ன?** இது இயேசு தம்முடைய இரகசிய வருகையில் மணவாட்டியை எடுத்துக்கொள்ளும்போது, கல்லறைகள் திறக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்படுவதை யாரும் அறிவது இல்லை. இது ஒரு இரகசியமாக நடந்த சம்பவம். இது ஒரு பொதுவான உயிர்தெழுதலின் சம்பவம் இல்லை. இப்பொழுது அவ்வாறாக எடுத்துத்கொள்ளப்பட்டவர்கள் மகிமைக்குள் பிரவேசித்து, அங்கு கலியாணம் செய்தவர்களாய், கலியாண விருந்தில் கலந்துக்கொண்டவர்கள். இவர்கள் பூமிக்கு திரும்ப வந்து, அதாவது மணவாளனும், மணவாட்டியுமாக திரும்பி வந்து ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்கிறார்கள். ஆக இந்த ஆயிரம் வருட அரசாட்சி கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து தாவீதின் குமாரனாக ஆயிரம் வருடங்கள் இந்த பூமியில் அரசாட்சி செய்வதைக் குறிக்கின்றது. இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு அரசாங்கமும் பிசாசினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆனால் கிறிஸ்துவினால் ஆதீக்கம் செலுத்தப்படும் ஒரு அரசாங்கம் வரப்போகிறது. அதுதான் இந்த ஆயிரம் வருட அரசாட்சி. கிறிஸ்துவுக்குள் தேவன், சபைக்குள் கிறிஸ்து. வரப்போகும் இந்த இராஜ்யத்தில் ஆதாமும் ஏவாளும் - கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் திரும்ப ஏதேன் தோட்டத்தின் நிலைக்கு கொண்டுவரப்பட்டு, அவருடைய வாக்குதத்தத்தின்படி இராஜ்யம் திரும்ப அளிக்கப்படுகிறது. இது ஆங்கிலத்தில் Thousand years reign of Christ எனவும், லத்தீன் மொழியில் Millennium எனவும் அழைக்கப்படுகிறது. Mille என்றால் ஆயிரம் என்றும், Annus என்றால் வருஷம் என்றும் பொருள். இது கூட்டாக Millennium என அழைக்கப்படுகிறது. இந்த ஆட்சியின் போது பூமியெங்கும் சமாதானம்(Peace), செழிப்பு(Prosperity), நீடிய சுகவாழ்வு(Long life), நீதி நியாயம் (Righteousness) காணப்படும். எனென்றால் சாத்தான் இந்த ஆயிரம் வருடங்கள் அரசாட்சி முடியுமளவும், கட்டப்பட்டிருப்பான். ஆயிரம்வருட அரசாட்சிக்குறித்து நாம் கீழ்கண்ட வசனங்களில் தியானிக்கலாம்.

(அ) அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார்: கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்கு கொடுப்பார் நிறைவேறுதல் ஆகும். (லூக்.1:32)

(ஆ) அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார் : அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும் நிறைவேறுதலாகும். (சகரி.14:9)

(இ) ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்: அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குரிய ராஜ்யங்களாயின: அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீரசத்தங்கள் வானத்தில் உண்டாயின நிறைவேறுதலாகும். (வெளி.11:15) இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்: தேவரீர் உமது மகா வல்லமையைக்கொண்டு ராஜ்யபாரம் பண்ணுகிறீர் நிறைவேறுதலாகும். (வெளி.11:17)

(ஈ) இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ராஜாதிராஜாவாகவும், கர்த்தாதிகர்த்தராகவும் (வெளி.19:16) இந்த பூமியை எல்லாக்காலங்களிலும் உள்ள பரிசுத்தவான்களோடும், தம்முடைய மணவாட்டியோடும் ஆளுகை செய்யும் அரசாட்சியாகும்.

(உ) நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்கிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்வேன் நிறைவேறுதலாகும். (வெளி.3:21)

(ஊ) நீர் அடிக்கப்பட்டு, சகலகோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்: நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதியபாட்டை பாடியதின் நிறைவேறுதலாகும். (வெளி.5:9,10)

(எ) 2சாமு.7:16 நிறைவேறுதலாகும். இது தாவீதுக்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்தம். இயேசு தாவீத்தின் குமாரனாக அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்து அரசாட்சி செய்கிறார். சங்.72ம் சாலொமோனைப்பற்றிய சங்கீதமாகயிருந்தாலும், அதுவும் கிறிஸ்துவினுடைய ஆயிரம்வருட அரசாட்சியின் நிறைவேறுதலாகயிருக்கிறது.

(ஏ) தீர்க்கதரிசிகளில் ஏசாயா இந்த அரசாட்சிகுறித்து முன்னுரைக்கிறான். ஏசாயா, தாவீதின் சிங்காசனத்தையும், அவருடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்னென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை: சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதை செய்யும் என 9:7, 11-1-9 மற்றும் 24-23 ஆம் வசனங்களில் இந்த ஆட்சிக்குறித்து முன்னுரைக்கிறான்.

(ஐ) தீர்க்கதரிசி எரேமியா இதுகுறித்து: இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதிற்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பபண்ணுவேன்: அவர் ராஜாவாயிருந்து ஞானமாய் ராஜரீகம்பண்ணி பூமியிலே நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார். என 23:5லும், அந்நாட்களிலும், அக்காலத்திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன்: அவர் பூமியிலே நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார் என 33:15லும் முன்னுரைக்கிறான்.

(ஒ) அப்போஸ்தலராகிய பவுலும் கொரிந்தியருக்கு எழுதும்போது: முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரங்களையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் என 1கொரி.15:24ல் முன்னுரைக்கிறான்.

தேவன் மூன்று குமாரன் நாமங்களில் வருகிறார். 1. மனுஷகுமாரன் 2. தேவகுமாரன் 3. தாவீதின் குமாரன். எசேக்கியேலை மனுபுத்திரன் என்று யேகோவா அழைத்தார். மனுபுத்திரன் அல்லது மனுஷகுமாரன் என்றால் தீர்க்கதரிசி என்று பொருள். மோசே உபா.18:15 ல் உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உன் நடுவிலே எழும்பப்பண்ணுவார் என்று உரைத்ததை நிறைவேற்ற அவர் மனுஷகுமாரனாக வரவேண்டியதாயிற்று. அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று அழைத்துக்கொள்ளவில்லை. மனுஷகுமாரன் என்றுதான் அழைத்துக்கொண்டார். ஏனென்றால் அவர் வேதப்பிரகாரமாக வரவேண்டியதாயிற்று. மனுஷகுமாரனுடைய

மரணம், அடக்கம், உயிர்தெழுதல் இவைகளுக்கு பின்பு பெந்தெகொஸ்தே நாளன்று அவர் தேவகுமாரனானார். ஆவியின் ரூபத்தில் பரிசுத்த ஆவியாக வந்தார். அவர் தம்மை மறைத்துக்கொண்டு வேறொரு ரூபத்தில் தமது மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அவர் பரிசுத்த ஆவியாக - அதே தேவன். சபைக்காலங்களில் தொடர்பு கொள்ள தேவனுடைய குமாரனாக வந்தார். அவர் ஆயிரம்வருட அரசாட்சியின்போது தாவீதின் குமாரனாக - ராஜாவாக தாவீதின் சிங்காசனத்தில் உட்காருவார். இப்பொழுது அவர் பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். ஆனால் நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன் என்கிறார். (வெளி.3:21) எனவே ஆயிரம்வருட அரசாட்சியில் அவர் தாவீதின் குமாரனாகயிருப்பார். அது என்ன? அதே தேவன் வெவ்வேறு காலங்களில் தமது முகமூடியை மாற்றிக்கொள்வதாகும். ஆயிரவருட அரசாட்சி முடிவானது அல்ல. அதன்பின்பும் காலங்கள் உண்டு. இது புதிய பூமியும் அல்ல. இரட்சிக்கப்படுவோருக்கு நோவா ஒரு பரிபூரணமான உதாரணமாக இருந்தான். நோவா வெளியே வந்தபோது அவனோடு காம் இருந்தான். பாவம் அங்கு இன்னுமாக இருந்தது. பாவம் அவிசுவாசம் - பேழையின் மூலமாக கடந்து நியாயத்தீர்ப்புக்கு மேலாக சுமந்துவரப்பட்டது. ஆனால் ஏனோக் பேழையைவிட உயரமாக சென்றான். ஏனோக் தேவனுடைய சமூகத்திற்கு சென்றுவிட்டான். ஆனால் நோவாவோ அதன் வழியாக வெளியே நடந்தான். இங்கு இன்னுமாக பாவம் கூட இருந்தது. உலகநிலைமைக்குட்பட்ட ஆயிரம்வருட அரசாட்சிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அடுத்து ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் ஆயிரம்வருடங்களை கழிக்காததால், பிந்தின ஆதாமாகிய இயேசும், அவருடைய மணவாட்டியும் ஆயிரம்வருடகாலம் புதிய ஏதேன் தோட்டத்தில் சஞ்சரித்து தேவனுடைய எல்லா திட்டங்களையும் நிறைவேற்றுகின்றனர்.

43. மேலும் சற்று கவனியுங்கள். யோவான் காண்டது என்ன? நான் சிங்காசனங்களை கண்டேன். அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள். நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அந்த தீர்ப்பில் உள்ளவர்கள்தான் அதாவது இயேசுவை பற்றிய சாட்சியின் நிமித்தமும், தேவனுடைய வசனத்தின் நிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள். அடுத்து மிருகத்தையாவது, அதன் சொரூபத்தையாவது வணங்காமலும், தங்கள் நெற்றியிலும், தங்கள் கையிலும் அதன் முத்திரையை தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்கள் வெளி.20:4 கிறிஸ்துடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். இவர்களுடைய உயிர்தெழுதல்தான் முதலாம் உயிர்தெழுதல். ஆக இந்த முதலாம் உயிர்தெழுதலில் மணவாட்டி இல்லை. இவள் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அதிகாரம் பெற்றவள். பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா? தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போம் என்று அறியீர்களா? 1கொரி.6:2,3 ஆக வெளி.20:4 ல் நியாயத்தீர்ப்பு அதிகாரம் மணவாட்டிக்கு மாத்திரமே கொடுக்கப்படுகிறதாய் இருக்கிறது. நியாயத்தீர்ப்பில் நின்றவர்கள் மணவாட்டிகள் அல்ல. மாறாக அவர்கள் ஆயிரம் வருடம் தாவீதின் குமாரனுடைய அரசாட்சியில் பங்குகொள்ள தகுதிபட்டவர்களேயன்றி அரசாட்சிசெய்ய அல்ல. அரசாட்சி என்றால் அங்கு பிரஜைகள் வேண்டும் அல்லவா? அந்த பிரஜைகள் தான் இவர்கள். ஆக 1தெச.4:16 ஒரு தனிசம்பவம். இந்த சம்பவத்தில் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுகிறாள். வெளி.20:4 ல் மணவாட்டி நியாயச்சங்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள். நியாயம் விசாரிக்கப்பட்டு தகுதியானவர்கள் அவள் தன் மணவாளனுடன் அரசாளப்போகும் ஆயிரம் வருட அரசாட்சியில் பங்குபெறுகிறார்கள். தன்னுடைய பிரஜைகளை அவள் நியாயத்தீர்ப்பில் தெரிந்தெடுக்கிறாள். இவள் தான் மத்தேயு 25 ல் கூறப்பட்டுள்ள மணவாளனுக்கு எதிர்க்கொண்டு போகப்புறப்பட்ட புத்தியுள்ள கன்னிகை. மணவாளன் வந்தபோது ஆயுத்தமாய் இருந்து, நீதிமானக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வாயிலாக நித்திய ஜீவனைப்பெற்று அவரோடுகூட கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தவள்.

44. இப்பொழுது கவனியுங்கள். கிறிஸ்து தாவீதின் குமாரனாக தன் மணவாட்டி மற்றும் பிரஜைகளுடன் ஆயிரம்வருட அரசாட்சியை முடித்து, அதன்பின்பு பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்பபுக்கு வருகிறார். அவருடன் அவரது மணவாட்டியும் நியாயச்சங்கத்தில் அமர்கிறாள். இங்கு வெளி.20:11-15, மத்.25:31-46 வசனங்கள் சம்பந்தபட்டுள்ளன. புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. இந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டுள்ள பெயர்கள் யாவும் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள். இவர்கள் தொடக்கம் முதல் பாவிகள். இவர்களுக்கு ஒரு வாய்ப்பும் இல்லை. இவர்கள் துவக்கத்திலிருந்தே ஆக்கினைக்குட்பட்டவர்கள். இவர்கள் தேவனை அறியாதவர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்கள். (2தெச.1:7,8) இவர்கள் தங்களுக்கென மனந்திரும்புதலுக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் காலங்களை அசட்டைபண்ணி, தேவன் வெறுக்கிற சிலைகளை, விக்கிரகங்களை தொழுதுக்கொண்டு வந்தார்கள். இவர்கள் தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரை தொழுது சேவிக்காமல், சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள். ஆதலால் தேவன் இவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத இவர்களுடைய இருதயம் இருளடைந்தது. (ரோ.1:21-25) தேவன் இல்லை என்று மதிக்கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான். இவர்கள் தங்களை கெடுத்து அருவருப்பான கிரியைகளை செய்துவருகிறார்கள். (சங்.14:1) உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிராத பூமியின் குடிகள் இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழுத்தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழுமலைகளாம். அந்த ஏழுமலைகள் மீது அமர்ந்திருப்பது போப் ஆளுகை செய்யும் வாட்டிகன் சிட்டி என நாம் அனைவரும் அறிவோம். இதுதான் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைபீடம். ஆக கத்தோலிக்க திருச்சபையின் போப் முதற்கொண்டு கத்தோலிக்க திருச்சபை விசுவாசிகள் அனைவருடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவில்லை. (வெளி.17:8,9) ஆதலால் இவர்கள் பெயர்கள் புஸ்தகங்களில் காணப்படுகிறது. ஆக மனந்திரும்பாத பாவிகள், விக்கிரகாரதனைக்காரர்கள், கத்தோலிக்க திருச்சபை அங்கத்தினர்கள், விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டங்கள் இப்படிபட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லையாதலால் இவர்கள் பெயர்களும் புஸ்தகங்களில் உண்டு. ஆக ஜீவபுஸ்தகத்தில் ஏழுதப்பட்டவனாக காணப்படாதவன், புஸ்தகங்களில் காணப்படுகிற அனைவரும் அக்கினிகடலிலே தள்ளப்படுவார்கள். (வெளி.20:15) இவர்கள் இரண்டாம் மரணத்தில் பங்கடைவார்கள். சமுத்திரம் தன்னில் உள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிகடலில் தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். இப்பொழுது புஸ்தகங்களில் யார், யார் பெயர்கள் காணப்படும் அவர்களின் நிலை என்ன என்பதை அறிந்துக்கொண்டோம்.

45. **அடுத்து ஜீவபுஸ்தகத்திற்கு வருவோம். இதுக்குறித்து நாம் :**
(அ) ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. (வெளி.20:12)

(ஆ) எருசலேமாகிய பரிசுத்த நகரத்தில், ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரமே பிரவேசிப்பார்கள். (வெளி.21:27)
(இ) அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாக காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். (தானி.12:1)
(ஈ) என் உத்தம கூட்டாளியே அவர்களுக்கு (எயோதியாள் மற்றும் சிந்திகேயாள்) உதவியாய் இருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடும்கூட சுவிசேஷ ஊழியத்தில் என்னோடுகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. (பிலி.4:3).
(உ) ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல் என் பிதா முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும், அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். (வெளி.3:3)
(ஊ) உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள். (வெளி.13:8)
(எ) உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டிராத பூமியின் குடிகள் இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாய் இருக்கிற மிருகத்தை பார்த்து ஆச்சரியப்படுவார்கள். (வெளி.17:8)
(ஏ) கர்த்தர் மோசேயை நோக்கி :
எனக்கு விரோதமாய் பாவம் செய்தவன் எவனோ அவன் பெயரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன் என்றார். (யாத்.32:33)
(ஐ) ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டு போவதாக, நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக. (சங்.69:28)

46. ஜீவபுஸ்கத்தின் ஒரு பாகமாகிய ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் அவருடைய மணவாட்டியின் பெயர் மாத்திரமே காணப்படுகிறது. இவர்களது பெயர் எக்காரணம் கொண்டும் கிறுக்கப்படமாட்டாது. ஆனால் ஜீவபுஸ்தகத்திலிலுள்ள பெயர்கள் கிறுக்கப்பட வாய்ப்பு உள்ளது. மணவாட்டி மத்.25 ல் கூறப்பட்டுள்ள புத்தியுள்ள கன்னிகை. இவர்கள் தங்கள் தீவட்டிகளோடு கூட தங்கள் பாத்திரங்களில் எண்ணெய்யும் கொண்டு போனார்கள். இதோ மணவாளன் வருகிறார் என்ற சத்தம் உண்டானபோது, தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் பண்ணினார்கள். மணவாளன் வந்தபோது அவரோடுகூட கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது. (மத்.25:4,7,10) இவர்கள் மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையாவது அறியாதிருந்தும், அவருடைய வருகைக்காக எப்பொழுதும் ஆயத்தமாக விழித்திருந்தார்கள். ஏனென்றால் இவர்கள் மேய்ப்பனுடைய சத்தத்தைக் கேட்டு அதாவது தேவனுடைய வார்த்தையை கேட்டு அவருக்கு பின் சென்று, வார்த்தையின்படி தங்களை காத்துக்கொண்டார்கள். (யோ.10:27,28, 6:54-56) இவர்கள் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல அதன்படி நடக்கிறவர்களுமாய் இருந்தார்கள். (யாக்.1:22) இவர்கள் நித்திய ஜீவனை ஏற்கெனவே பெற்றுவிட்டதினால், இவர்களுக்கு நியாயத்தீர்ப்பு தேவையில்லை. ஆதலால் இவர்கள் எந்தவிதமான நியாயத்தீர்ப்பிலும் காணப்படமாட்டார்கள். மாறாக நியாயத்தீர்ப்பின் போது நியாயச்சங்கத்தில் அமர்ந்திருப்பார்கள். யாராவது நியாயத்தீர்ப்புக்குமுன் வருகிறார்கள் என்றாள் அவர்கள் நித்தியஜீவனை அதுவரை பெறவில்லை என்பதாகும்.

47. புத்தியுள்ள கன்னிகைகள் கிறிஸ்துவின் மணவாட்டி என்று கண்டோம். அப்படியானால் புத்தியில்லாத கன்னிகைகள் யார்? இவர்கள் கன்னிகைகள் தான். அதை யாரும் மறுக்கமுடியாது. இவர்கள் தங்கள் விசுவாசத்தில் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் தான். பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்தான். இதோடு நின்றுவிட்டார்கள். இதற்குமேல் அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்குள் கடந்துவரமுடியவில்லை. ஆனால் பரிசுத்தமாக்கப்பட்டதின் நிமித்தம் பரிசுத்த ஆவியின் கிரியைகள் / வரங்கள் அவர்களிடத்தில் காணப்பட்டன. அதைக்கொண்டு அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுவிட்டதாக ஒரு தவறான எண்ணத்தில் இருந்தார்கள். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியை பெறவே இல்லை. மற்றபடி ஒரு மணவாட்டிக்குரிய அனைத்து தகுதிகளும் அவர்களிடத்தில் காணப்பட்டன. இவர்கள் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தது உண்மைதான். தங்களால் முடிந்தவரை தேவனுடைய வார்த்தைக்கு, காலத்திற்குரிய செய்திகளுக்கு கீழ்படிந்தார்கள். ஆனால் முற்றிலுமாக கீழ்படிய அவர்களால் முடியவில்லை. இன்று இந்த நிலையில் தான் அநேகர் காணப்படுகிறார்கள். இவர்கள் ஜீவியத்தில் குற்றம் காணமுடியாது. தேவனுடைய வார்த்தையிலும், இக்காலத்திற்குரிய செய்தியிலும், அதன் ஒரு பாகமாக மாத்திரமே இவர்கள் இருந்தார்களேயன்றி முழுமையாக இல்லை. தங்களுக்கு சாதகமானதை எடுத்துக்கொண்டு, சாதகமில்லாததை தங்கள் முதுகுக்குபின் எறிந்துவிட்டார்கள். சாதகமில்லாதவைகளையும் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப தங்களை திருத்திக்கொள்ள அவர்கள் முன்வரவில்லை. மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமேல் உள்ள விசுவாசத்தை, அன்பை, செய்தியின் மேல் உள்ள தாகத்தை பட்சபாதத்தோடு மாத்திரம் பற்றிக்கொண்டார்கள். வெறுமையாக தங்களை உணர்ச்சிவசப்படுத்திக்கொண்டார்கள். ஆனால் இந்த உணர்ச்சிவசப்படுதலில் உண்மை எதுவும் இல்லை. ஆதலால் மணவாளன் வந்தபோது ஆயத்தமாக இல்லாமல், தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டு ஏமாந்துபோனார்கள். அவர்கள் தீவட்டியில் எண்ணெய் இல்லை. இந்த புத்தியில்லாத கன்னிகைகளின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் உண்டு. ஆதலால் இவர்கள் உபத்திரவகாலத்திற்குள் தங்கள் சுத்திகரிப்புக்காக தள்ளப்பட்டு நியாயத்தீர்ப்புக்கு வந்து நித்திய ஜீவனை பெறுகிறார்கள். ஆனால் மணவாட்டி ஸ்தானத்தை இழந்தார்கள். இவர்கள் மூன்றரை ஆண்டுக்கால உபத்திரவத்திற்குள் கடந்து சென்று, சுத்திகரிக்கப்பட்டு தங்கள் இரட்சிப்பை காத்துக்கொண்டார்கள். ஆனாலும் ஆயிரவருட அரசாட்சியிலும் இவர்களுக்கு பங்கு இல்லை. ஏனென்றால் வெளி.20:4 ல் கூறப்பட்ட மூவகையினரே கிறிஸ்துவுடன் கூட ஆயிரம்வருட அரசாட்சி செய்கிறார்கள். மற்றவர்கள் அந்த ஆயிரம்வருடம் முடியும் வரை உயிரடையவில்லை. (வெளி.20:5) ஆதலால் இவர்கள் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குதான் வரவேண்டும்.

48. அடுத்து ஜீவபுஸ்தகத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார் என விசுவாசிக்கும் அனைத்து மக்களுடைய பேர்களும் உண்டு. அவர்கள் ஜீவியம் எப்படியிருந்தாலும் அவர்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் காணப்படுகிறது. ஆனால் நியாயத்தீர்ப்பின் போது இவர்கள் அவரவர் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயம் தீர்க்கப்பட்டு, சில தங்கள் பெயரை தக்கவைத்துக்கொண்டனர். ஆனால் சிலர் பெயர் கிறுக்கப்படுகிறது. ஆனால் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் அவரது மணவாட்டியின் பெயர் மாத்திரமே உண்டு. கிறிஸ்துவின் வசனத்தைக்கேட்டு, அதை புரிந்துக்கொண்டு, அவரை அனுப்பினவரை விசுவாசித்ததினால் நித்திய ஜீவனை பெற்று, ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டுவிட்டார்கள். (யோ.5:24) இப்பொழுது ஜீவபுஸ்தகத்தில் பேர் காணப்படுகிறவர்கள், கிறிஸ்துவர்கள் என்று பேர் பெற்றிருந்தாலும், வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதை செய்தாலும் அதை எல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே செய்யாது. (கொலோ.3:12) மனுஷருடைய கற்பனைகளை, உபதேசங்களை ஏற்றுக்கொண்டு, அதை போதித்து வீணாய் தேவனுக்கு ஆராதனை செய்தார்கள். ஆதலால் இவர்கள் நியாயத்தீர்ப்புக்கு முன் வரவேண்டியதாயிற்று. இங்கு இவர்கள் தங்கள்

கிரியைகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்க்கப்படுகிறார்கள். இந்த புஸ்தகத்தில் யார் யார் பெயர் கிறுக்கப்பட்டதோ, அவர்கள் போக மீதமுள்ள அனைவரும் நித்திய ஜீவனை பெறுகிறார்கள். அதேவேளை ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவனாக காணபடாதவர்கள், அக்கினிகடலிலே தள்ளப்படுகிறார்கள்.

49. **இங்கு மத்.25:31-46 சம்பவத்திற்கு வருகிறோம்.** இது தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர்கள் ஊழியத்தின் பாதையில், குடும்பவாழ்க்கையில் செய்த உதவிகளுக்காக, மற்றும் தேவனுடைய பிள்ளைகளுக்கு தங்கள் இருதயக்கததவை அடைத்தவர்களுக்கு, அவர்களுக்கு விரோதமாக செயல்பட்டவர்களுக்கு கொடுக்கப்படும் தீர்ப்பு. இவர்கள் தொடக்கத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல. ஆனால் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் நடந்துக்கொண்ட விதத்தில் தீர்ப்படைந்து ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் பெறுகிறார்கள். ஜீவபுஸ்தகம் திறக்கப்பட்டு ஜனங்கள் நியாயத்தீர்ப்படைகிறார்கள். இங்கு ஒரு மேய்ப்பனானவன் வெள்ளாடுகளிலிருந்து (Goat) செம்மறியாடுகளை (Sheep) பிரிக்கிறது போல பிரிக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெள்ளாடுகளை இடது பக்கமும், செம்மறியாடுகளை வலது பக்கமும் நிறுத்துகிறார். இங்கு நீங்கள் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் இந்த இரு பிரிவிலும் மணவாட்டி இல்லை. அப்படியானால் அவள் எங்கே? அவள் தன் மணவாளனுடன் அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறாள். எப்படியெனில், பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா? தேவதூதர்களையும் நியாயம் தீர்ப்போம் என்று அறியீர்களா? (1கொரி.6:2,3) ஆயிரமாயிரம் பேர் அவரை சேவித்தார்கள். இங்கு கணவனுக்கு மனைவி சேவை செய்கிறாள். அவருடன் சிங்காசனத்தில் அமர்கிறாள். (தானி.7:9,10) ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்கார்ந்து இருக்கும்படி அருள்செய்வேன். (வெளி.3:21)

50. **வெள்ளாடு – Goat :** இதுவும் செம்மறியாடுபோன்று வீட்டில் வளர்க்கப்படும் ஒரு விலங்கு. இதில் வயதுசென்ற ஆண் Buck என்றும், பெண் Nanny / Doe என்றும், இளம்வயது – Kids எனவும், வெள்ளாட்டுக்குட்டி என்றும் அழைக்கப்படுகிறது. இதனுடைய மயிர், பால், மாம்சம் மனித தேவைகளுக்காக பிரயோஜனப்படுத்தப்படுகிறது. இதற்கு கொம்புகள் உண்டு. இதனுடைய வால் எப்பொழுதும் மேல்நோக்கி இருக்கும். இது இலைகள், தழைகள் போன்ற அனைத்தையும் சாப்பிடும். இதன் குணம் துணிவு, வீண்பெருமை, பெருமையானவைகளை பேசுதல், வீம்பு போன்றவைகளாகும். இவர்கள் தங்களை கிறிஸ்துவர்கள் என்று கூறிக்கொண்டு, கிறிஸ்துவுக்கு புறம்பாக வாழ்ந்துவருகிறவர்கள். இவர்கள் சபிக்கப்பட்டவர்கள். பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியே இவர்கள் பங்கு. நித்திய ஆக்கினை அடைவார்கள். (மத்.25:41,46)

51. **செம்மறியாடு – Sheep :** இதுவும் வெள்ளாடு போன்று வீட்டில் வளர்க்கப்படும் ஒரு விலங்கு. இதனுடைய மயிர், பால், மாம்சம் மனித தேவைகளுக்காக பிரயோஜனப்படுத்தப்படுகிறது. இதற்கு கொம்புகள் கிடையாது. இதனுடைய வால் எப்பொழுதும் கீழ்நோக்கியே இருக்கும். இது புல்களை மாத்திரமே மேயும். இதில் வயதுசென்ற ஆண் Ram என்றும், ஆட்டுக்கடா என்றும், வயது சென்ற பெண் Ewe ஆட்டுக்கிடாரி என்றும் அழைக்கப்படுகிறது. இதில் இளம் வயதுள்ளது Lamb என்றும், இளமறி, செம்மாறியாட்டுக்குட்டி என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு சாதுவான விலங்கு. இது தன் வழியை அறியாது. தானகவே ஒரு வழியை தெரிந்துக்கொண்டு, அந்த வழியில் செல்லமுடியாது. ஆதலால் இது ஒருவரால் வழிநடத்தப்படவேண்டும். ஆதலால் இது மேய்ப்பனுடைய சத்தத்தைக் கேட்டு, அவன்பின் செல்கிறது. தேவன் நம்மை செம்மறியாடுகளுக்கு ஒப்பிடுகிறார். நாம் அவர் மேய்சலில் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே. (சங்.95:7) இது ஆங்கிலத்தில் We are the Sheep of his hand. எனக்கூறப்பட்டுள்ளது. அதாவது நாம் அவர்கைக்குள்ளான செம்மறியாடு. அடுத்து நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலில் ஆடுகளுமாய் இருக்கிறோம். (சங்.100:3) இதுவும் ஆங்கிலத்தில் We are his people and sheep of his pasture என்று உள்ளது. ஆக இங்கும் ஆடு என்பது செம்மறியாட்டையே குறிக்கும். தேவனும் தம்மை ஒரு ஆட்டுக்குட்டியுடன் ஒப்பிடுகிறார். அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும் (Lamb – செம்மறியாட்டுக்குட்டி) தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் (Sheep) தம்முடைய வாயை திறவாதிருந்தால் (ஏசா.53:7) செம்மறியாடு ஒரு அமைதியின் சின்னம். ஒரு முயலுக்கு ஆபத்துவந்தால், அது ஒடிவிடும். ஒரு அணிலுக்கு பிரச்சனை வந்தால், அது மரத்தில் ஏறிதப்பிவிடும். ஒரு நாய்க்கு பாடு வந்தால், அது கடிக்கும். குதிரை தன் காலால் உதைக்கும். பறவை பறந்துவிடும். வெள்ளாடு தன் கொம்புகளால் முட்டும். ஆனால் ஒரு செம்மறியாடோ உதவியற்ற நிலையில் அமைதியாய் நிற்கும். அதுப்போன்று நாம் நம்மில் முற்றிலுமாக போதுமானவர்கள் அல்ல. தேவன் நம்முடைய பலவீனத்தை எடுத்துவிட்டு, அவருடைய பலனை நம்மில் விளங்கச்செய்கிறார். (2கொரி.12:9,10)

52. இவர்கள் இரட்சிப்பின் அனுபவத்துக்குள் இல்லாவிட்டாலும் தேவனுடைய பிள்ளைகளுக்கு உதவிகள் செய்ததின் பேரில் இவர்களது பெயர் ஜீவபுஸ்தகத்தில் உண்டு. அதற்கு எடுத்துக்காட்டாக:

(அ) யோசேப்பு, நிக்கோதேமு. இவர்கள் இருவரும் அந்தரங்க சீஷர்கள். இயேசுவின் அடக்கத்தில் உதவியாக இருந்தார்கள். அரிமத்தியா ஊரானும், யூதர்களுக்கு பயந்ததினால் இயேசுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போகும்படி பிலாத்துவினடத்தில் உத்தரவு கேட்டான். பிலாத்து உத்தரவுக்கொடுத்தான். ஆகையால் அவன் வந்து இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போனான். ஆரம்பத்தில் ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கோதேமு என்பவன் வெள்ளைப்போளமும், கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான். அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்ணும், முறையின்படியே அதை சுகந்தவர்க்கங்களுடனே சேலைகளில் சுற்றிக்கட்டினார்கள். (அப்.19:38-40) இவ்வாறாக யோசேப்பு, நிக்கோதேமு இயேசுவின் சரீர அடக்கநேரத்தில் ஒத்தாசையாக இருந்தார்கள்.

(ஆ) அடுத்து சகலஜனங்களாலும், கனம்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர் கொண்ட ஒரு பரிசேயன் ஆலோசனை சங்கத்தில் எழுந்திருந்து, சங்கத்தாரை நோக்கி : இஸ்ரவேலரே இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். இந்த மனுஷருக்கு ஒன்றும் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும், கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்தால், ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது. தேவனோடே போர் செய்கிறவர்களாய் காணப்படாதபடிக்கு பாருங்கள் என்றான். அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு அப்போஸ்தலர்களை விடுதலையாக்கினார்கள். (அப்.5:34-40) இவ்வாறாக கமாலியேலும் சகோதரர்களுக்கு நன்மை செய்தான். (மத்.25:46) இவன் மணவாட்டி ஸ்தானத்தில் இல்லாவிட்டாலும், செம்மறியாடுகளாக காணப்பட்டு, நியாயத்தீர்ப்பு நேரத்தில் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், நீதிமான்களாகவும் காணப்பட்டு நித்தியஜீவனை பெறுகிறார்கள். (மத்.25:46) இவர்கள் பெயர்கள் ஏற்கெனவே ஜீவபுஸ்தகத்தில் இருந்தது. ஆயிரம்வருட முடிவில் மரணமடைந்த மற்றவர்கள் உயிரடைகிறார்கள். இவர்களில் ஒரு சாரார் சகோதரர்களுக்கு செய்த

நன்மைகளின் நிமித்தம், இவர்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் காணப்பட்டு, நித்திய ஜீவனை பெறுகிறார்கள். மற்றொரு சாரார் சகோதரர்களை பகைத்து நிந்தித்ததின் நிமித்தம் இரண்டாம் மரணமாகிய அக்கினி கடலில் தள்ளப்படுகிறார்கள்.

**53. யார் யார் பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடப்பட இருக்கிறது? மோசே, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்கு தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால், மன்னித்தருளும். இல்லாவிட்டால் உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரை கிறுக்கிப்போடும் என்றான். கர்த்தர் : எனக்கு விரோதமாய் பாவம் செய்தவன் எவனோ அவன் பெயரை என் புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன் என்றார். நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவங்களை அவர்களிடத்தில் விசாரிப்பேன் என்றார். (யாத்.32:30-34)**

1) பேர் கிறிஸ்துவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடபிருக்கிறது. இவர்கள் தேவனுடைய வார்த்தையை புறக்கணித்து மிருகத்தின் சொரூபமான உலகசபைகளின் ஐக்கியத்தில் பங்குபெற்றதின் மூலம் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டு, அவர்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

2) ஸ்தாபன சபைகளின் தலைவர்கள், விசுவாசிகள் அனைவரும் தேவத்துவத்தை சகாத சிந்தையோடு நிதானித்து வேதவாக்கியங்களில் காணப்படாத திரித்துவத்தை தேவனுடைய வார்த்தைக்குள் உட்புகுத்தி, திரித்துவ வழிபாட்டின் மூலமாக, சத்தியத்திற்கு விரோதமாக நடந்து, தேவனுக்கு வீணாய் ஆராதனை செய்து வருவதால், இவர்கள் அனைவருடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது. இவர்களிடம் சத்தியம் தள்ளுபடியாகிற்று.

3) வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்ற பெயரை புறக்கணித்து அவரது பெயருக்குரிய பதவிகளின் பெயரால் ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப்படாத அனைத்து திரித்துவ ஊழியர்கள், விசுவாசிகள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் அல்லாது வேறு எந்த பெயரினாலும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் பெயர்கள் அனைத்தும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட இருக்கிறது. நீங்கள் திரித்துவமுறைப்படி வேதவசனங்களில் எங்கும் கொடுக்கப்படாத, எடுக்கப்படாத ஞானஸ்நானத்தை பெறும்போது, ஒரு உலர்ந்துபோன பாவியாக தண்ணீருக்குள் சென்று, ஒரு ஈரமான பாவியாக வெளியேவருகிறீர்களேயன்றி உங்கள் பாவங்கள் மன்னிக்கபடவில்லை. நீங்கள் பாவியாகவே கீழே சென்று, ஒரு பாவியாகவே மீண்டும் மேலே வருகிறீர்கள்.

4) வேதவாக்கியங்களுக்கு கீழ்படியாது, சத்தியத்தை அறிந்தும் அதற்கு கீழ்படியாது பாவனை செய்தவர்கள் இறுமாப்பாய் பேசினவர்கள் அனைவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது. இவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்டு, அவருக்கு மகிமையாக ஜீவிப்பதற்கு பதிலாக, தங்கள் ஸ்தாபனங்களின் பெயரை தரித்துக்கொண்டு நான் ஒரு பெந்தெகொஸ்தேகாரன், நான் ஒரு தென்னிந்திய திருச்சபையை சேர்ந்தவன், நான் ஒரு அசெம்ளி ஆப் காட் சபையை சேர்ந்தவன், நான் கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்தவன் என கூறிக்கொண்டு பாஸ்டர் வணக்கம் செய்து வருகிறார்கள். இவர்கள் கோஷம் எல்லாம் இது எங்கள் சபை, இவர் எங்கள் பாஸ்டர். இதிலே இவர்களது கிறிஸ்துவ ஜீவியம் முடிவு பெறுகிறது.

5) அந்தந்த சபைக்கால தூதனை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள், சபைக்கால தூதனுடைய செய்தியை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள், தூதனுடைய பெயரைக்கேட்பதே எங்களுக்கு அலர்ஜியாக இருக்கிறது என்று இறுமாப்பாய் பேசினவர்கள் அனைவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

6) தேவனுடைய வார்த்தைக்கும், அந்தந்த காலத்து செய்திக்கும், உண்மையும், உத்தமமாய் இருந்து அதை ஜீவியத்தில் கடைப்பிடித்து எழுதப்பட்ட / ஜீவிக்கிற நிருபங்களாய் வாழ்ந்துவந்த தேவனுடைய பிள்ளைகளை அசட்டை செய்தவர்கள் / அவமதித்தவர்கள் / வெறுத்தவர்கள் அனைவருடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

7) பரிசுத்த ஆவியை பெறாது, ஆனாலும் பரிசுத்த ஆவியின் அற்புத அடையாளங்களை செய்துவந்த, அக்கிரமகாரர்கள் (மத்.7:21-23) அனைவருடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது. இவர்கள் தங்கள் அக்கிரமங்களினால் தேவனை வருத்தப்படுத்தினார்கள்.

8) பெண்கள் பொதுவாக வேலைகளில் அமர்கிறார்கள். அதாவது குடும்ப பொருளாதாரத்தை சரிக்கட்ட / ஈடுசெய்ய பொதுஸ்தலங்களுக்கு சென்று பணிபுரிவதாக கூறுகிறார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டால் அப்படி செய்யமாட்டார்கள். பரிசுத்த ஆவி உங்களை வழிநடத்துகிறது என்று கூறுகிறீர்களா? தேவனுடைய வார்த்தைக்கு முரணான ஒன்றை, பரிசுத்த ஆவி என்று அழைக்காதே. பிசாசு உங்களை தேவனுடைய வார்த்தையை மீற வைக்கிறான். தேவனுடைய வார்த்தை தூஷிக்கபடாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்க வேண்டும். (தீத்.2:5) ஆதலால் வீட்டில் தரித்திருக்காது தன் வீட்டை விட்டு வெளியே தரித்திருக்கும் அனைத்து பெண்களுடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்படவிருக்கிறது.

9) வேதவாக்கியங்களில், பரிசுத்த வேதாகமத்தில் எங்காவது ஒரு இடத்தில் கூட கர்ப்பத்தடை செய்து கொண்ட ஒரு பெண்ணை எடுத்துக்காட்ட முடியுமா? ஒரு காலும் முடியாது. கர்ப்பத்தடை என்பது ஒரு சிசுவை அழித்தலாகும். ஆதலால் அது ஒரு கொலைப் பாதகமாகும். இதில் அநேக ஊழியகாரர்களின் மகள், மருமகள்களுக்கு பங்கு உண்டு என நினைக்கிறேன். பிசாசு தொடக்கம் முதல் ஒரு கொலைப்பாதகன். ஆதலால் கர்ப்பத்தடை பிசாசின் வஞ்சனை. ஆதலால் கர்ப்பத்தடை செய்துக்கொண்ட ஸ்திரீகளின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

10) தேவனுடைய பிள்ளைகளிடத்து மலடு என்பது இருக்ககூடாது. நீ ஒரு மலடு என்ற நிலையில் தேவன் உன்னை வைத்திருப்பாராகில், உன் பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது. சகல ஜனங்களைப் பார்க்கிலும், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உங்களுக்குள் ஆணிலாகிலும், பெண்ணிலாகிலும் மலடு இருப்பது இல்லை. (உபா.7:14) ஒருவன் தன் சகோதரனின் மனைவியை விவாகம் பண்ணினால் அது அசுத்தம். அவன் தன் சகோதரனை நிர்வாணமாக்கினான். அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள். (லேவி.20:21) ஒருவன் தன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தால் அவன் தன் தகப்பன் சகோதரனை நிர்வாணமாக்குகிறான். அவர்கள் தங்கள் பாவத்தை சுமப்பார்கள். சந்தானமில்லாமல் சாவார்கள். (லேவி.20:20) இந்த புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன். சந்தானமற்று தன் வாழ்நாட்களில் வாழ்ந்தவன். தேவனால் சபிக்கப்பட்டவன். அவன் சபை பக்திவிருத்திக்கடுத்த ஐந்து வகை ஊழியங்களில் எதையும் செய்யமுடியாது. அவன் தன் இறுமாப்பினால், ஆணவத்தினால் செய்வானாகில் அவனுடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

11) இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஏனென்றால் ஒருவனை பகைத்து மற்றொருவனை சிநேகிப்பான். அல்லது ஒருவனை பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான். தியானியுங்கள். (மத்.5:24, லூக்.16:13) தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னை சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாய் இருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால், முடிசூடப்படான். (2தீமோ.2:4,5) ஒன்று நீ தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும். அல்லது இப்பிரபஞ்சத்து அதிபதிக்கு ஊழியம் செய்யவேண்டும். இரண்டில் ஒன்றை நீ

தெரிந்துக்கொள்ள வேண்டும். இரண்டையும் நீ பற்றிக்கொண்டிருக்க முடியாது. நீங்கள் பொதுவாக இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடக்கீறீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவருக்கு ஊழியம் செய்யுங்கள். பாகால் தெய்வமானால் இப்பிரபஞ்சத்தின் அதிபதிக்கு ஊழியம் செய்யுங்கள். (1இரா.18:21) அன்றைய இஸ்ரவேல் ஜனங்கள் ஒருபக்கம் கர்த்தருக்கு பயந்தார்கள். மறுபக்கம் விக்கிரகாராதனை செய்துவந்தார்கள், சேவித்துவந்தார்கள். (2இரா.17:41) அந்தமனப்பான்மையிலே நீங்கள் ஒரு பக்கம் தேவனுக்கும், மறுபக்கம் இப்பிரபஞ்சத்தின் அதிபதிக்கும் ஊழியம் செய்கிறீர்கள். உங்களுடைய எண்ணங்கள் அனைத்தும் பொருளாசை என்னும் விக்கிரகாராதனையை சார்ந்து இருக்கிறது. ஆதலால் உங்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது. You can't stay out there in the world and serve God at the same time. சிந்தியுங்கள். நீங்கள் மனுஷர்களையா? அல்லது தேவனையா? யாரை நாடி ஊழியம் செய்கீறீர்கள்? இன்னும் நீங்கள் மனுஷர்களை நாடி ஊழியம் செய்தால் நீங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அல்லவே.

12) கர்த்தருக்குரிய தசமபாகத்தை நீ அவருக்கு கொடுக்காமல் தேவனை வஞ்சிக்கிறாய். நீ சபிக்கப்பட்டவன் என்று தேவனுடைய வார்த்தை மல்.3:8 ல் கூறுகிறது. இயேசு : மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் தசமபாகம் செலுத்தி, நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விட்டுவிடாதிருக்க வேண்டும் என்றுக்கூறி கர்த்தருக்குரிய தசமபாகம் செலுத்துவதை உறுதிப்படுத்துகிறார். (மத்.23:23) ஆதலால் இது பழைய ஏற்பாடு காலத்திற்கு மட்டுமல்ல, புதிய ஏற்பாடு காலத்திலும் உள்ளது. ஆபிரகாம் தசமபாகம் கொடுத்தான். (ஆதி.14:20) இயேசு: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருந்தால், ஆபிரகாமின் கிரியைகளை செய்யுங்கள் என்றார். (யோ.8:39) இயேசு : பரிசேயரே உங்களுக்கு ஐயோ, நீங்கள் தசமபாகம் கொடுத்து, நியாயத்தையும், தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள். இவைகளையும் செய்யவேண்டும். அவைகளையும் விடாதிருக்க வேண்டும். (லூக்.11:42) ஆதலால் தசமபாகங்களை கொடாது தேவனை வஞ்சிக்கும் உங்கள் அனைவர்களுடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது. இன்றைய கிறிஸ்துவர்கள் பணம் சம்பாதிப்பதிலும், சொத்து சுகங்களை சேர்ப்பதிலே ஆர்வம் கொண்டு கண்ணோட்டமாய் இருக்கிறார்கள். கர்த்தருக்குரியதை நீங்கள் ஞானநன்மைகளை பெறும் ஊழியகாரர்களுக்கு உங்கள் சரீரநன்மைகளை கொடுப்பது இல்லை. மறுபக்கம் தேவனை பற்றிக்கொண்டு ஜீவிக்க விரும்புகிறீர்கள். இது முடியாத காரியம். இவை இரண்டும் கெட்ட நிலை. இதில் ஏதாவது ஒன்றைதான் நீ உன் ஜீவியத்தில் பற்றிக்கொள்ளவேண்டும்.

13) கர்த்தருக்குரிய தசமபாகம் பொதுவாக ஐந்து வகை ஊழியங்களில் உள்ள அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அதை ஒரு மேய்ப்பனே தனக்கு வைத்துக்கொண்டு, இதர ஊழியங்களை ஏமாற்றுகிறவன், எப்படி கர்த்தருக்கு பிரியமான பாத்திரமாக இருக்க முடியும்? இவன் ஒரு பொருளாசைக்காரனாகிய விக்கிரகாராதனைக்காரன் அல்லவா? பிறருக்குரியதை இச்சிக்கிறவன் அல்லவா? பிறனுக்குரிய யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக (யாத்.20:17) என்று தேவனுடைய வார்த்தை / பிரமாணம் கூறுகிறதே. பாவம் இன்னதென்று நீ அறிந்தபின்னும், கர்த்தருக்குரிய தசமபாகத்தை இதர ஊழியங்களுக்கு பகிர்ந்துக்கொடுக்காமல், பிறனுடையதை இச்சித்து நீ அயலானுடையதை உன் சொந்தமாக்கிக்கொண்டால், நீ ஒரு அக்கிரமகிரியைக்காரன் அல்லவா? உன் நடத்தை இப்படியிருக்க, தேவன் உன் மேல் எப்படி பிரியமாய் இருப்பார்? ஆதலால் கர்த்தருக்குரிய தசமபாகத்தை, இதர ஊழியங்களுக்கு பங்கிட்டுக்கொடுக்காத ஒருவன் பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது. பரிசுத்த ஆவி ஒரு மனிதனை கட்டுப்படுத்துகிறது. அதற்கு உங்கள் மீது கட்டுப்பாடு உண்டு. நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு முரணாக நடந்துக்கொள்ள அது உங்களை ஒருகாலும் அனுமதிக்காது. பரிசுத்த ஆவி அயோக்கியமானதை செய்யாது. உங்களுக்கு பலஆயிரங்கள் கர்த்தருக்குரிய தசமபாகமாக வருகிறது. தசமபாகம் கர்த்தருடைய பண்டகசாலைக்கு கொண்டுவரப்பட வேண்டும். இன்றைக்கு பண்டகசாலை ஆங்காங்கு உள்ள லோக்கல் சபைகள் ஆகும். ஆதலால் உங்கள் சபைக்கு வரும் தசமபாகத்தை நீங்கள் ஐந்துவகை ஊழியங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். ஆனால் நீங்களோ ஆல் இன் ஆல் என உங்களை வைத்துக்கொண்டு, அனைத்தையும் சுருட்டி விடுகிறீர்கள். ஏதோ ஒரு சிறுபாகத்தை உங்களுக்கு மிகவும் அறிமுகமான சில ஊழியர்களுக்கோ, அல்லது உங்கள் சபையில் உள்ள விசுவாசிகளுக்கோ கொடுக்கிறீர்கள். இந்த போக்கு என்ன? பிறனுக்குரியதை நீங்கள் அபகரிப்பதால் நிச்சயமாக உங்கள் பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் உங்கள் காரியத்தில் உண்மையும், உத்தமுமாய் இருக்கவில்லை. நீங்கள் அநீதியுள்ள உக்கிராணக்காரன்.

14) பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் வேறோரு சுவிசேஷத்தை பிரசங்கித்து, கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்து என்ற ஒரு புது சுவிசேஷத்தை கொண்டுவந்துள்ள மக்கள், அதை விசுவாசிப்பவர்கள் அனைவருடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட இருக்கிறது. இயேசுவே கிறிஸ்து, கிறிஸ்து இயேசுவே கர்த்தர். (அப்.5:42, 2கொரி.4:5) இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே அன்றி வேறொருவரையும் நீங்கள் அறியாதிருக்க வேண்டும் என அப்.பவுல் 1கொரி.2:2 ல் எழுதிகிறான். நம்முடைய விசுவாசம் இப்படியிருக்க இதை சீர்குலைத்து, பிரன்ஹாமே கிறிஸ்து, கிறிஸ்து பிரன்ஹாமே கர்த்தர் என்ற வேறொரு சுவிசேஷத்தை கொண்டு வருகிற அனைத்து பேலியாட்களின் மக்கள் பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட இருக்கிறது. இவர்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது போதாது என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் விசனப்படுத்துகிறார்கள்.

(15) உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்திரவு கொடுக்கிறதில்லை. என்னத்திலாயெனில் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்கு உட்பட்டாள் (1தீமோ.2:12-14) சபைகளில் கூட உங்கள் ஸ்திரீகள் பேசமாலிருக்கக்கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவு இல்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்கிறது. அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்திலே விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாய் இருக்குமே. (1கொரி.14:34,35) பெண்களுக்கடுத்தகாரியம் இப்படியிருக்க பொதுக்கூட்டங்களில் பேசும் பெண்கள் குறித்து என்ன கூறுவது? இராஜாவின் வார்த்தை எங்கோ அங்கே அதிகாரம் உண்டு (பிர.8:4) சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவனுக்கு அதிகாரம் உண்டு. (1கொரி.9:18) தேவனுடைய வசனத்தில் அதிகாரம் உண்டு. (லூக்.4:32) இப்படியிருக்க பெண்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவது தேவனுடைய வார்த்தைக்கு முரணான ஒன்றாகும். இதனால் துணிகரமாக தேவனுடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் அனைத்து பெண்கள் பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட இருக்கிறது. தேவனிடத்தில் பாரபட்சம் இல்லை. அது யாராக இருந்தாலும் சரி, அவள் ஒரு கோடீஸ்வரியாக இருந்தாலும் சரி, அவள் கிறிஸ்துவின் காரியத்தின் பேரில் நிந்தையை கொண்டுவருவதை பார்க்கிலும், அந்த நபர் மரித்துப்போயிருந்தால் அது அந்த நபருக்கு நலமாய் இருக்கும் என தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

16) தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிப்பார்த்து, மறுதலித்துப்போனவர்கள் மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம். (எபி.6:5,6) பொதுவாக அநேகர் ஒரே தேவன் என்கிற விசுவாசத்திற்குள் வருகிறார்கள். அந்த ஒரே தேவனுடைய நாமம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று அறிக்கையிடுகிறார்கள். பின் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். அதன்பின்பு அவர்களால்

பலன்கொடுக்க முடியவில்ல. உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புக்கூர்ந்து, விசுவாசத்தை விட்டு, விலகிப்போய் விடுகிறார்கள். நாய் தான் கக்கினதைத்தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே இவர்களுக்கு சம்பவித்தது.(2பேது.2:22) ஆதலால் இவர்களுடைய பெயர்கள் அனைத்தும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

17) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே, பாவமன்னிப்பு என்ற அறிந்த பின்பும், பணத்துக்காக சுகபோகமான வாழ்க்கைக்காக அறிந்த சத்தியத்தை மறுதலித்து அதை போதிக்காது மவுனம் சாதித்து இயேசு அழைக்கிறார், இதோ வருகிறார் என கோஷம் போட்டு மக்களை ஏமாற்றிவரும் கள்ளக்கபடமுள்ள வேலையாட்கள் அனைவருடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது.

18) வெள்ளை அங்கிகளைத் தரித்துக்கொண்டு, வெள்ளை ஆடைகளை அணிந்துக்கொண்டு, ஆசாரிய ஊழியத்தை கையில் எடுத்துக்கொண்டு மேய்ப்பன், கண்காணியானவன் ஸ்தானத்தில் இருந்துக்கொண்டு, சபை ஊழியம் செய்யும் பெண்கள் யாவரும் தேவனுடைய சித்தத்திற்கு புறம்பானவர்கள். தேவனுடைய வார்த்தையைக்கொண்ட பரிசுத்த வேதாகமத்தில் எங்காவது ஒரு பெண் மேய்ப்பன் மற்றும் கண்காணிப்பணியை செய்ததை காட்டமுடியுமா? இவர்கள் பிசாசுனுடைய கிரியைகளை செய்து வருகிறார்கள். தங்கள் ஸ்தானத்தை அறியாதவர்கள் தேவனுடைய வார்த்தையை தங்கள் முதுகிற்கு பின்பாக எறிந்துவிட்டவர்கள். ஆதலால் பெண் மேய்ப்பர்கள் மற்றும் கண்காணிகள் அனைவருடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

19) சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தப்பின், வயிற்றுப் பிழைப்புக்கு சரியான வருமானம் இல்லாததால் ஒரே தேவன், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, ஒரே ஞானஸ்நானம் அது கர்த்தராகிய இயேது கிறிஸ்து நாமத்தினால் என்ற சத்தியத்தை ஏசா தன் வயிற்றுக்கூழ்காக தன் புத்திர சுவீகாரத்தை விற்றது போல் இவர்கள் அனைவரும் எல்லாருக்கும், எல்லாமும் ஆனேன் எனக்கூறிக்கொண்டு நாய் கக்கினதை திரும்பத்திண்ணும் என்ற பழமொழிக்கு ஏற்றாற்போல் திரித்துவ ஸ்தாபன சபைகளுக்கு சென்று அவர்களுக்கு ஏற்றாற்போல் பிரசங்கித்து ஊழியம்செய்யும், வயிற்றுக்கு பிழைப்பு நடத்தும் பச்சோந்தி கூட்டத்தினர் அனைவர்களுடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

20) தன் கூட்டை விட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தை விட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான். (நீதி.27:8) இவர்கள் தேவன் தனக்கு மேய்ப்பன் ஊழியத்தை கொடுத்திருக்கிறார் என கூறிக்கொண்டு, உலகம் சுற்றும் வாலிபர் போன்று ஊர்ஊராக சுற்றத்திரிந்து, கடல்கடந்து, நாடு கடந்து ஊழியம் செய்யும், தன் ஊழிய அழைப்பை தெரிந்துக்கொள்ளாது, அதை உறுதிசெய்ய முடியாது, தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாக அவனுக்கென்றே ஒரு ஊழியம் செய்யும் நம் மத்தியில் பிரபலமானவர்கள் யாவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது. ஏனெனில் இவர்கள் பணத்திற்காகவும், புகழுக்காகவும் தன் எல்லையை விட்டுக்கடந்து, தன் அழைப்பை மீறி, அனைத்து ஊழியங்களிலும் தலையிடும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள். ஊழியக்காரன் ஒருவன் முதலில் தன் ஊழிய அழைப்பை அறிந்து அதை உறுதி செய்து அதில் மாத்திரமே நிலைத்து நிற்க வேண்டும். ஒரு மேய்ப்பனுக்கு கர்த்தர் கொடுத்த மந்தையின் மேல் மாத்திரமே அவர் கவனம் முற்றிலுமாக இருக்க வேண்டும். இதை விட்டுவிட்டு அவர் ஊர்சுற்றித் திரியக்கூடாது. ஐந்துவகை ஊழியத்தில் ஒரு ஊழியத்தை மற்றொரு ஊழியத்தோடு இணைக்கக்கூடாது. தனக்குள்ளே ஐந்துவகை ஊழியங்களையும் அடக்கிக்கொள்பவன் பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

21) உங்கள் சபையை நீங்கள் மணவாட்டி கூடாரம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கூடாரம் என நீங்கள் அழைக்கும் போது அந்த சபை பக்திவிருத்திக்கு ஐந்துவகை ஊழியங்களையும் உபயோகிக்கவேண்டும். இதை விட்டுவிட்டு மேய்ப்பனே எல்லாவற்றிற்கும் எல்லாம் அல்லது வெளிநாட்டிலிருந்து வந்தவர்க்கு மாத்திரமே பிரசங்கபீடம் அல்லது தனது உறவினர்களுக்கு மாத்திரமே சபையில் பிரசங்கிற்கும் அதிகாரம் அல்லது தனது வாரிசுகளுக்கே சபையில் உரிமை என அரசியலைப்போன்று நாடகமாடும் கள்ளகபடமுள்ள வேலையாட்கள் யாவருடைய பேரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது. சபைக்கு ஐந்துவகை ஊழியங்களும் அதன் பக்திவிருத்திக்கு தேவைப்படுகிறது. ஒரு உண்மையான மேய்ப்பன், தேவனால் மந்தைக்கு தெரிந்துக்கொள்ளப்பட்ட மேய்ப்பன் ஐந்துவகை ஊழியங்களையும் சபை பக்திவிருத்திக்காக உபயோகிப்பான். சென்னையில் ஒரு சபை மேய்ப்பன் இறந்தபின் உடைந்து, மறைந்த சபை பாஸ்டரின் மகன் ஒரு சபைக்கு பாஸ்டராகவும், மருமகன் ஒரு சபை பாஸ்டராகவும், தம்பி ஒரு சபை பாஸ்டராகவும், ஆக ஒரு சபை மூன்றாக பிரிந்தது. இதற்கு காரணம் என்ன? தங்கள் ஊழிய அழைப்பை அறிந்து, அதை உறுதிசெய்ய முடியாதவர்கள் தேவசித்தத்திற்கு புறம்பாக ஊழியம் செய்ய ஆரம்பித்துவிட்டதே காரணம். இவ்வாறாக மந்தையை பாழாக்குகிறவர்கள் அனைவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட உள்ளது. பொதுவாக மேய்ப்பர்கள் தங்களுக்குப்பின் தங்கள் குடும்பத்தில் ஒருவரையே மேய்ப்பனாக்க விரும்புகிறார்கள். இதில் சகோ பி. எம். ஏ. சாமி விதிவிலக்கு அல்ல. ஏனென்றால் அவரும் தன் மருமகனையே தனக்குப்பின் பாஸ்டராக்க விரும்பினார். அதனால் அவருடைய சபையும் உடைந்தது. இவை எல்லாவற்றிற்கும் காரணம் சபையின் பெயரில் உள்ள சொத்துக்களை தங்கள் குடும்பத்திலே தக்கவைக்க விரும்புகிறார்கள். இப்படிபட்ட சுயநல மேய்ப்பர்கள் யாவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது. எனென்றால் இவர்கள் தேவன் தம்முடைய சபைக்கு ஏற்ற மேய்ப்பனை ஏற்படுத்த அனுமதிக்காமல், தானே தன் குடும்பத்திலிருந்து ஒரு நபரை மேய்ப்பனாக நியமிக்கும் அதிகாரத்தை தன் கரத்தில் கொண்டு, தேவநியமத்திற்கு விரோதமாக செயல்படுவதால் வரும் பிரச்சனையே.

22) மேய்ப்பன் ஒரே மனைவியை உடைய புருஷனாக இருக்கவேண்டும். ஆனால் இருமனைவிகளை ஒரே நேரத்தில் சேர்த்துக்கொண்டு, ஒரு மானங்கெட்ட இல்லறவாழ்க்கை நடத்தும், அல்லது ஒரு மனைவி உயிருடன் இருக்க, அவளை தள்ளிவிட்டு மற்றொரு பெண்ணை விவாகம் செய்து, தேவநியமத்திற்கு மாறாக ஒரு இல்லற வாழ்க்கை வாழ்ந்துவரும் அல்லது சபையில் உள்ள பெண்களிடத்தில் சிறிய குடும்பம் நடத்தும் நயவஞ்சக ஊழியகாரர்கள் யாவரும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்படாத பாத்திரங்கள். இவர்கள் யாவரும் தங்களை தாங்களே மேய்ப்பனாக நியமித்துக்கொண்டு, தேவசித்தத்திற்கு புறம்பாக ஊழியம் செய்து வருகிறார்கள். இக்காலத்திற்குரிய செய்தியில் ஊழியம் செய்துக்கொண்டு வருகிறேன் என கூறிக்கொண்டு ஒருவன் நான்கு மனைவிகளை உடையவனாக இருப்பதை அந்த மனிதனின் வாயிலாக நான் பல ஆண்டுகளுக்கு முன்பு கேள்விப்பட்டேன். இது எத்தகைய கொடூரம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். தேவனை அறியாதவன் கூட இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடமாட்டான். ஆதலால் இப்படிப்பட்ட கேட்டின் மக்கள் அனைவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட இருக்கிறது.

23) ஒருவன் சுமார் பத்துபேரை தன் சபையில் வைத்துக்கொண்டு, அவன் எந்தவித ஒரு வேலையும் செய்யாது, சபை மக்களிடமிருந்து வரும் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் தனது வயிற்றிற்கு போதாது என ஒரு நிலைவரும்போது ஒரு பெரிய சபை பாஸ்டரை தன் கரத்தில் வைத்துக்கொண்டு, அவருக்கு பல்லாக்கு தூக்கி அவரிடமிருந்து உதவிகள் பெற்று, எந்தவேலையும் செய்ய விருப்பம் இல்லாது உடம்பை வளர்த்து, தேவனுக்கென்று ஊழியம் செய்கிறேன் என்பவன் தேவனால் அந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தப்படாதவன். ஆதலால் வயிற்றுப்பிழைப்புக்காக ஊழியத்தைக் கொண்டுள்ள எந்த மனிதனுடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து நீக்கிப்போட இருக்கிறது. இவன் தன் கையினால் உழைத்து சாப்பிடாமல் பிறர் உழைப்பில் வாழ்பவன். ஒரு எத்தன்.

24) தேவனுடைய வார்த்தை ஒரு மேய்ப்பன் தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளையும் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாக தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிகிறவர்களுமாய் இருக்கவேண்டும் என கூறுகிறது. ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் என்று கூறுகிறது. (1தீமோ.3:4,5) ஒரு மேய்ப்பன் திருமணம் செய்யாது, தன்னைத்தானே மேய்ப்பனாக்கி கொண்டு நான் என் பெற்றோர்களுடன் வாழ்கிறேன், அது என் குடும்பம்தானே என்றதொரு வியாக்கியானத்தை கொடுத்துக்கொண்டு, நான் அனைத்துப் பெண்களையும் என் சகோதரிகளாக காண்கிறேன் என மறுபக்கம் தன் ஆன்மீகத்தை மறுதலிக்கும் ஒரு நபராக இருப்பானாயில் அவனுடைய அழைப்பு எப்படி தேவனிடத்திலிருந்து வந்ததாகும்? இப்படிப்பட்ட ஊழியர்களும் தேவசித்தத்திற்கு புறம்பாக தேவனுக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். ஆதலால் இவர்களுடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

25) ஒருவன் தன்னை கர்த்தர் தமது சரீரமாகிய சபையை பக்திவிருத்திக்கு மேய்ப்பனாக ஏற்படுத்தியுள்ளார் என்றுக்கூறிக்கொண்டு அதே நேரத்தில் தன் பிள்ளைகளுக்கு அவிசுவாசிகளுடன் சம்பந்தம் கலப்பவனாகவும் இருந்தால், இவன் தன் விசுவாசத்தை தன் கிரியைகளில் காட்டமுடியவில்லை. இவன் விசுவாசம் கிரியையில்லாது செத்ததாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய ஏற்படுத்தியதில்லை. இவனும் தேவசித்தத்திற்கு புறம்பாக தன்னைத்தானே ஒரு மேய்ப்பன் என அழைத்துக்கொண்டு தன் கிரியைகளில் அவரை மறுதலிக்கும் வழியில் நடந்துவருகிறான். நாய் தானே தான் கக்கினதை திரும்பத்தின்னும். இவன் ஊழியமும் அப்படிதானே. ஆதலால் இவனுடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது.

26) ஒரு காலத்தில் சகோ பாலாசீர்லாறி தன் கைகளினால் அநேக அற்புதங்களை செய்தார் என சொல்லப்படுகிறது. விசுவாசத்தில் அவருடைய வாகனமானது பெட்ரோல் இல்லாது ஓடியது என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். காலங்கள் மாற இவர் தன்னை மனுஷகுமாரன் என்று அழைக்கலானார். நான் இதை அவரிடம் மும்பை பட்டிணத்தில் அவருடைய ஊழியத்தில் நேரிடையாக கேட்டிருக்கிறேன். அவர் அதற்கு சரியான பதில் கூறாது என்னை திருநெல்வேலியில் உள்ள அவரது ஆசிரமத்திற்கு அழைத்தார். நானோ செல்லவில்லை. ஆனாலும் அற்புதங்களை கண்ட ஜனங்கள் அவரை மனுஷகுமாரனாகவும், தங்களை அவருடைய மணவாட்டியாகவும் இணைத்து, தங்கள் சொத்து சுகங்களை விற்று, அவரது காலடியில் வைத்து அவரது ஆசிரமத்தில் மணவாளன் மணவாட்டி ஒப்பந்தம் செய்து, ஒருமித்து வாழ்ந்தார்கள். தங்கள் ஆவிக்குரிய கர்ப்பை இழந்தப்பின் ஒரு காலகட்டத்தில் வெளியே வந்தார்கள். அப்படியே அவரை விட்டு வெளிவந்தவர்களில் புதுக்கோட்டை ஜெயராஜ், வேலூர் தாமஸ் போன்றவர்கள் மீண்டும் திருச்சி புதுக்கோட்டையில் உள்ள அநேகரை வஞ்சித்தார்கள். இதில் திருச்சி சகோ ரூபன், சகோ ராபின்சன் இன்னும் அநேகர் உள்ளனர். இவர்கள் யாவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்படுவதாக இருக்கிறது. ஏனென்றால் இவர்கள் கிறிஸ்து அல்லாத மற்றொருவனை தங்கள் மணவாளனாக ஏற்றுக்கொண்டார்கள். வஞ்சிக்கப்பட்டவர்களோடு சவகாசம் வைத்துக்கொண்டு தேவனுடைய வார்த்தையை மறுதலித்தார்கள். நாமோ கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு கற்புள்ள கன்னிகையாக ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளோம். (2கொரி.11:2) ஒருமுறை நான் கர்நாடகா, கோலார் தங்கவயல் சென்றிருந்தபோது, அங்கு இருகை விரல்கள் எண்ணும் அளவுக்கு சபைகள் இருந்தன. அவைகளின் மேய்ப்பர்களை நிதானித்து, அங்கு ஒரு சபைக்கூட வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை என்றும், கிறிஸ்துவின் மணவாட்டியை வழிநடத்தும் தகுதியில் இல்லை எனவும், கூறி வந்தேன். அவ்வண்ணமாகவே திருச்சி நகரத்தில் அநேக சபைகள் இருந்தாலும், அனைத்தும் கோலார் தங்கவயல் சபைகளின் நிலையில்தான் உள்ளது. இங்கு கிறிஸ்துவின் மணவாட்டியை பக்திவிருத்தி அடையச்செய்யும் தகுதியில் சபைகளே இல்லை. இங்கு விசுவாசிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஆதலால் இவர்களுடைய பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

27) தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக, மாறாக பற்பல உபதேசங்களை கொண்டுவந்து இடது கைக்கும், வலது கைக்கும் வித்தியாசங்கள் தெரியாத பாமரமக்களது விசுவாசத்தை சீர்குலைக்கும், விசுவாசக்கப்பலை சேதப்படுத்தும் அனைவர்களுடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது. இவர்கள் தங்கள் உபதேசங்களினால் மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய் கூட்டங்களாக இருப்பதால் இவர்களுடைய பெயர்களும் அகற்றப்பட இருக்கின்றன. உதாரணமாக வெளி.22:8 ல் கூறப்பட்டுள்ள தூதன் சகோ பிரன்ஹாம் என்கிற துர்உபதேசம். அடுத்து இயேவின் திருமணம் இந்த பூமியில் நடந்துவிட்டது, இயேசுவின் வருகை வந்துவிட்டது, இராப்போஜனம் தேவையில்லை, சகோ பிரன்ஹாம் தேவன், கிறிஸ்து, ஓமேகா அவர் வேதவாக்கியங்களில் அறியாதது ஒன்றும் இல்லை, அவர்கொடுத்த ஏழாம் முத்திரைக்கடுத்த செய்தி புத்தகம் கர்த்தர் உரைக்கிறதாவது என்பது. மேலும் சகோ பிரன்ஹாம் போன்று சூட் அணிந்து, அமெரிக்க பாரம்பரியத்தின்படி திருமண வேளையில் மோதிரம் அணிவது, மணமகன், மணமகள் மேடையில் முத்தம் கொடுப்பது போன்ற காரியங்கள் நமது நாட்டிற்கு அநாகரீகமாக இருந்தாலும் அதை நடைமுறையில் கொண்டு வருவது. பத்துபேரைக் கொண்ட சபை பாஸ்டர் பிரசங்கவேளையில் மாத்திரம் பிரசங்கபீடத்திற்கு வந்து சகோ பிரன்ஹாமை காப்பி அடிப்பது போன்ற காரியங்கள். இப்படி அநேக காரியங்களில் சகோ பிரன்ஹாம்மை பார்த்து காப்பி அடிக்கும் கள்ளகபடமுள்ள வேலையாட்களுடைய பேர்கள் யாவும் ஜீவபுஸ்தகத்திலிருந்து நீக்கப்பட இருக்கிறது.

28) தேவனுடைய வார்த்தையைக் கொண்ட பரிசுத்த வேதாகமத்திற்கு மதிப்பும், மரியாதையும் கொடுக்காது, பிரசங்கபீடத்தில் நின்றுக்கொண்டு பரிசுத்த வேதாகமத்திலிருந்து ஒரு சில வார்த்தைகளை வாசித்துவிட்டு பின் அதன்மேல் சகோ பிரன்ஹாம் பிரசங்கித்த அநேக செய்தி புஸ்தகங்களை அடுக்கிக்கொண்டு செய்தி கொடுக்கும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த ஊழியர்களின் பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

29) ஜெபம் பண்ணும்போது, தீர்க்கத்தரிசனம் சொல்லும் போது அதாவது ஒரு ஸ்திரீயிடமிருந்து ஆவிக்குரிய வரங்கள் வெளிப்படும் போது, சபைகூடுதலுக்கு செல்லும் போது, தன் தலையை தன் சேலை முந்தானையாலோ அல்லது ஒரு கைக்குட்டையினாலோ அல்லது தொப்பினாலோ மூடிமறைத்துக்கொள்ளும் ஒரு ஸ்திரீ தேவசிந்தனையில் இல்லாத ஒரு பாண்டம். ஏனென்றால் ஒரு ஸ்திரீ தன் தலை மயிரை நீளமாக வளர்க்கிறது அவளுக்கு மகிமையாய் இருக்கிறது என்று சுபாவமே உங்களுக்கு போதிக்கிறது இல்லையா, அவளது தலைமயிரே அவளுக்கு முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நாம் 1கொரி.11:15 ல் வாசிக்கிறோம். நீ உனக்கு கொடுக்கப்பட்ட முக்காட்டை மற்றொரு சாதனத்தினால் மறைத்துக்கொள்வாயானால் நீ உன் தலையாகிய உன் கணவனை கனவீனப்படுத்துகிறாய். ஆதலால் உன் பேரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

30) மயிரை பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாக இருக்ககூடாது. (1பேது.3:3) பொன் ஆபரணங்களினால் உன்னை அலங்கரித்தாலும், சிங்காரித்தாலும், நீ உன்னை வீணாய் அழகுப்படுத்துகிறாய். (எரே.4:30) ஆனாலும் நீ இதினாலே உன்னை அழகுப்படுத்துகிறாய். யேசபேல் என்ற ஒரு ஸ்திரீதான் தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையை சிங்காரித்து தன்னை அழகுப்படுத்தினாள். (2ராஜா.9:30) நான் அணிந்திருப்பது ஒரு சின்ன கம்பல் தானே என்று நீ கூறலாம். ஒரு சின்ன ஜெயின் தானே என்று நீ கூறலாம். இதெல்லாம் அலங்காரமில்லாமல் என்ன? இது தேவனுடைய வார்த்தைமீது உனக்குள்ள அவநம்பிக்கையல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. யேசபேலின் முடிவு என்ன என்பதும் உங்களுக்கு நன்கு தெரியும். ஆதலால் உன் பேரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது. தேவன் மோசேயிடம் : உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு : நீ நிற்கின்ற இடம் பரிசுத்த பூமி என்றார். (யாத்.3:6) அப்பொழுது அவன்,

இதோ பாரும் நான் மலையடிவாரத்தில் ஒரு வனாந்திரமான இடத்தில் கடுமையான சூரியவெப்பத்தின் கீழ் நிற்கிறேன், ஆதலால் எனது கால்களின் பாதுகாப்புக்குத்தானே இந்த செருப்பை அணிந்திருக்கிறேன். இதை கழற்றினால் நான் எப்படி இந்த அகோரமான வெப்பத்தின் கீழ் நிற்க முடியும்? தயவுசெய்து நான், என் செருப்பை அணிந்திருப்பது நல்லது என்று தேவனுடைய வார்த்தைக்கு எதிராக அவன் பேசியிருந்தால் அங்கு என்ன நடந்திருக்கும்? நீங்களே நிதானித்து பாருங்கள். தேவன் செருப்பை கழற்று என்றால் அவன் அவர் கட்டளைக்கு கீழ்படியவே வேண்டும். தேவன் ஒன்றை செய்யாதே என்றால் அதை செய்யக்கூடாது. தேவன் உன் பொன் ஆபரணங்களை கழட்டிப்போடு என்றால், அதைக்கழட்டியாகவே வேண்டும். கீழ்படியாமை தேவனை எதிர்த்து நிற்பதாகும். அநேக ஊழியர்களின் குடும்ப பெண்கள் இதற்கு விதிவிலக்கு அல்ல. கவனியுங்கள், தேவனிடத்தில் இரு சித்தம் உண்டு. ஒன்று மூலசித்தம் (Original will), மற்றொன்று அனுமதிக்கும் சித்தம் (Permissive will) பிலேயாம் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. தேவன் அவனிடம் அந்த ஜனங்களை சபிக்கவும் வேண்டாம், அவர்கள ஆசீர்வதிக்கப்பட்டவரகள் என்றார். (எண்.22:12) ஆனாலும் பிலேயாம் பாலாக்கின் பிரபுகளோடு செல்ல ஆசைப்பட்டான். எதற்காக? அவனை எதிர்நோக்கி கொண்டிருக்கும் வெகுமதிக்களுக்காக. ஆதலால் அவன் இரண்டாம் முறை தேவசமூகத்திற்கு சென்றபோது, அவன் உள்ளத்தை அறிந்த தேவன் தமது அனுமதிக்கும் சித்தத்தின் கீழ் அவனை போக அனுமதித்தார். (எண்.22.20) இவ்வாறாக தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தின் கீழ் செயல்படுகிற அனைவர்களுடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது.

31) அரசியலும் சபையும் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படும். அரசியலைக்கொண்டு சபை நிலையை நிதானிக்கலாம். சபைநிலையை கொண்டு அரசியல் நிலையை நிதானிக்கலாம். அரசியல்வாதிகள் பணம் சம்பாதித்து ஒரு சுகபோகமான வாழ்க்கையை மக்கள் சேவை என்பதின் பெயரில் வாழ்கிறார்கள். அரசியலில் எங்கும் எதிலும் லஞ்சம், நேர்மையற்ற தன்மை. பொதுவாக கட்சிதொண்டர்கள்தான் ஏமாளிகள், அதேபோன்று இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் என்ற பெயரில் ஒரு சுகபோகமான வாழ்க்கையே ஊழியத்தின் பாதையில் ஊழியர்கள் தேடுகிறார்கள். இவர்கள் மத்தியில் ஒரே ஏமாற்றுவித்தைகள். பல திட்டங்கள் அனைத்தும் மக்களிடமிருந்து பணம்பறிப்பதற்கு. பொதுவாக கூறப்போனால் சபைமக்களை ஏமாற்றி பணம்பறித்து தங்கள் பிழைப்பை நடத்துவதையே இவர்கள் ஊழியத்தின் பேரில் தொழிலாக கொண்டுள்ளார்கள். இங்கு விசுவாசிகள்தான் ஏமாளிகள். இவ்வாறாக பணம்பறிப்பதில் இயேசு அழைக்கிறார் என்ற கம்பெனிக்கு நிகர் யாரும் கிடையாது. இவ்வாறு மக்களை ஏமாற்றுகிறவர்கள் பெயர்கள் அனைத்தும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்து போடப்படும்.

32) பற்பல உபதேசங்களை கொண்டுவரும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு உடந்தையாக இருந்துக்கொண்டு, அவர்களிடமிருந்து பணம் பெற்று, தங்கள் வசதிகளை பெருக்கும், பெரும் வயிற்று சோம்பேறிகள் யாவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட இருக்கிறது. உதாரணமாக நைனிட்டால் நாட்டிலிருந்து ஒரு உபதேசம் தமிழ்நாட்டில் இறக்குமதியானது. அதற்கு சென்னை சகோ. டேனியல் ஆசீர்வாதம் தமிழ்நாட்டின் பிரதான ஏஜெண்டாக இருந்தார். இவர்கள் ஆண்கள் தாடி வைக்கக்கூடாது, மீசை வைக்கக்கூடாது, பெண்கள் கேரள பெண்களைப்போன்று லுங்கி கட்டவேண்டும், என பல மாறுபாடான உபதேசங்களை கொண்டுவந்தார்கள். ஆனால் இவர்கள் சரக்குக்கு எதிர்பார்த்த அளவு ஆதரவு கிடைக்கவில்லை. இருந்தாலும் சென்னை ஆலந்தூர் பாஸ்டர் சாமுவேல் தன் மகனுடைய சாமர்த்தியத்தினால் ஒரு நல்ல சபைக்கட்டிடத்தைக் கட்டி தன்னை அந்த தெருவுக்கு மட்டும் பெரிய ஊழியகாரணாகிவிட்டார். சகோ டேனியல் ஆசீர்வாதத்திற்கு அந்த அளவுக்கு வியாபாரத்தை கையாள தெரியவில்லை. இப்பொழுது இவர்கள் அனைவரும் ஆவிக்குரிய ரீதியில் மரணமடைந்து போனார்கள். இந்த உபதேசத்தில் ஈடுபட்டவர்கள் அனைவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியப்பாதையில் இவர்கள் நோக்கமே சரியில்லை.

33) இந்நாட்களில் சகோதரன் பிரன்ஹாமிற்கு பிறகு வேறொரு தீர்க்கதரிசி எழும்ப வேண்டும் என வேதவாக்கியங்களுக்கு முரணாகக்கூறி ஆப்ரிக்கா நாட்டை சேர்ந்த காக்குவ் பிலிப்பு என்பவரை கேரளா மாநிலத்தை சேர்ந்த தமிழர் சகோ மார்ஷல் முன்நிறுத்துகிறார். இவர் தீர்க்கதரிசியின் செய்தியை அந்நிய ஆவியினால் நன்கு தியானிப்பவர். முற்காலத்தில் பிரன்ஹாம் கிறிஸ்து கூட்டத்தில் இருந்தார். பின் அதிலிருந்து தன் கண்கள் திறக்கப்பட்டதாக கூறி வெளியே வந்தார். இப்பொழுது ஒரு புது உபதேசத்தை பற்றிக்கொண்டார். ஆனால் இவர்கள் தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கும் சகோ பிரன்ஹாம் என்ன கூறுகிறார்? செய்தி ஒன்று வரும். செய்தியாளன் ஒருவன் வருவான். அது ஒரு மனிதனாக இருக்குமானால், அது எனக்குப்பின் வருகிற ஒருவராக இருக்கவேண்டும். ஆனால் நான் பிரசங்கித்து கொண்டிருக்கிற இந்த செய்தியானது, இந்நாளுக்கான உண்மையான செய்தி. இதுவே கடைசி செய்தி. நீங்கள் இந்த செய்தியின் செய்தியாளர்கள். (கே.பே.123, பத்தி.391) சகோ பிரன்ஹாம் கொடுத்துக்கொண்டிருக்கிற செய்தியை சபைக்கு கடைசி செய்தி என்றபிறகு சபைக்கு இன்னொரு செய்தியாளன் மற்றொரு செய்தியுடன் எதற்கு? இவரும் அந்த நைனிட்டால் ஊழியர் சகோ டால்டன்புரூஸ்க்கு ஏஜெண்டுகளாக இருந்து பணத்திற்காக செயல்பட்டது போன்று ஆப்ரிக்கா தீர்க்கதரிசிக்கு ஏஜெண்டாக இருந்து மக்களை வஞ்சித்து வருவதாக கேள்விப்பட்டேன். இவரது ஊழிய நோக்கமும் பண ஆசையே அன்றி, வேறொன்றும் கிடையாது. இவர்கள் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து ஊதியம் பெறுகிறார்கள். ஆதலால் இந்த புதிய உபதேசத்தில் உள்ள அனைவருடைய பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது.

34) கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறேன், ஆவலாய் உங்களை இயேசு அழைக்கிறார் என கூறிக்கொண்டு, கர்த்தர் கொடுக்கிறார் என பலத்திட்டங்களை, அவ்வபோது மக்கள்முன் நிறுத்தி, சாதூரியமாக பேசி, பாமரமக்களை கொள்ளையடிக்கும், செம்மையான வழியை விட்டு தப்பி நடந்து, உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாக பிடித்து, தங்கள் வஞ்சனைகளால் உல்லாசமாய் வாழ்ந்துவரும் பொருளாசைகளில் பழகின இருதயமுடைய சாத்தானின் பிள்ளைகள் யாவருடைய பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

35) ஏசா தேவனுடைய வாக்குதத்தத்தை பெற்றிருந்த குடும்பத்தில் பிறந்தவன். மூத்தவன் தான் சேஷ்டிர புத்திரபாகத்திற்கு உரிமையுள்ளவன். தேவனுடைய வாக்குதத்தத்தின் மூலம் ஏசாவின் பெயர் சேஷ்டிர புத்திரபாகம் பெற்றிருந்தவர்களின் பெயர்கள் அடங்கியிருந்த புத்தகத்தில் இருந்தது. ஆனால் அவனோ ஒரு பானைகூழுக்காக அதை விற்றுப்போட்டான். பசியாக இருந்த அவன் ஒரு நேரம் தன் வயிற்றை நிரப்புவதற்காக தன் சேஷ்டிர புத்திரபாகத்தை விற்றுப்போட்டான்.அதன் விளைவாக அவன் மனம்திரும்புவதற்கு எந்த வாய்ப்பும் கிடைக்காமல் போயிற்று. அதைப்போன்று இந்நாட்களிலும் சத்தியத்தை அறிந்த அநேகர் சத்தியத்தை மறுதலித்து ஸ்தாபனசபைகளோடு ஐக்கியம் கொண்டு தங்கள் பிழைப்புக்காக தாங்கள் பெற்றிருந்த சேஷ்டிர புத்திரபாகத்தை விற்றுப்போட்டார்கள். ஆதலால் இவர்களது பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து நீக்கப்பட இருக்கிறது.

36) ஒரு பிரசங்கி அங்கு எழுந்து நின்று தேவனுடைய வார்த்தையை ஒரு பிரதான தூதனைப்போல் பிரசங்கித்து, வேதத்திலுள்ள இரகசியங்களை நன்கு அறிந்து ஒரு நல்ல மேய்ப்பனாக விளங்கி உலகத்தை சார்ந்து மற்றகாரியங்களை செய்வாராயின் அவர் இழக்கப்பட்டவராய் இருப்பார். அவர் எவ்வளவு நல்லவராய் இருந்தாலும், அவர் என்னவாய் இருந்தாலும், அவருடைய வாழ்க்கையில் அவர் பரிசுத்த ஆவியை பெறாவிட்டால் அவர் இழந்தவரே. அவர் பெயரும் கிறுக்கப்படயிருக்கிறது.

37) நீ உன்னை மேய்ப்பன் என்று அழைத்துக்கொண்டு, உன் மனைவியை பொதுஸ்தலங்களில் வேலைக்கு அனுப்பி, உன் பெண் பிள்ளைகளை யேசபேலைப்போன்று பொன் ஆபரணங்களினால் அலங்கரித்து அவர்களை சத்தியத்தின் பாதையில் நடத்தாமல் அவர்கள் மனம்போல் நடத்தவிட்டு, உன் மனைவி உன்னை ஆளுகை செய்ய இடம் கொடுத்து, சபை மக்களை உனக்கு அடிமைப்படுத்தி, வீடு சந்திப்பு என்ற பெயரில் காலையும், மாலையும் வீடுவீடாக சென்று காணிக்கையின் பெயரில் பணம் வசூல் செய்தும், நீ பால், வெண்ணெய் கொழுத்த கன்றுக்குட்டிகளை அடித்து சாப்பிட்டு உன் விசுவாசிகள் உனக்கு காணிக்கை கொடுத்து அவர்கள் பசியிலும், பட்டினியிலும் படுத்து உறங்குவதைப்பார்த்துக்கொண்டு, நீ ஏசி காரில் உலாவி வந்து, நீ ஒரு சாட்சியற்ற ஊழியம் செய்துவருவதால், உன் பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

38) நன்மை செய்யும்படி உனக்கு திராணி இருக்கும்போது அதை செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல், என் ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள், பணம், ஆஸ்தி சொத்து சுகங்கள் என் குடும்பத்தினர், என் பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாக குறைவின்றிவாழ இழைப்பாறி புசித்து குடித்து, பூரிப்பாய் இருக்க சேர்த்துவைத்துள்ளேன் என்றுக்கூறி தங்களுக்காகவே பொக்கிஷங்களை சேர்த்துவைக்கிறவன் பேரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது. ஏனென்றால் இவன் உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூறுகிறவன். ஆதலால் இவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. செல்வம் என்றொன்றும் நிலைக்காது. (நீதி.3:27,27:24, லூக்.12:19-21, 1யோ.2:15)

39) உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிருந்தால் கணவன் மனைவி சிலகாலம் பிரிந்து இருக்கலாம். (1கொரி.7:5) ஆனால் பணம் சம்பாதிக்க, பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு தன் மனைவி, பிள்ளைகளை விட்டு, வெளிநாடுகள் சென்று பிரிந்திருக்கும் விக்கிரகாராதனைகாரனாகிய பொருளாசைக்காரன் (எபே.5:5) பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

40) தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள் (நீதி.30:5) வானமும், பூமியும் ஒழிந்துபோம், தேவனுடைய வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. (லூக்.21:33) ஆதலால் தேவனுடைய வார்த்தையோடு ஒன்றையும் கூட்டாதே, குறைக்காதே. ஆனால் தேவனுடைய வார்த்தையோடு ஒன்றைக்கூட்டி, குறைப்பவர்கள் அதில் யாராக இருந்தாலும், அவர்கள் பேர் ஜீவபுஸ்கத்திலிருந்து எடுக்கப்பட இருக்கிறது. ஏனென்றால் திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. (நீதி.13:13) இதற்கு எடுத்துக்காட்டாக சில ஊழியர்கள் அப்.2:38 வசனம் வரும்பொழுது அங்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் என்ற சொல்லை மறைத்துவிடுகிறார்கள். அந்த இடத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி நாமத்தினால் என்று பிரசங்கிக்கிறார்கள். இதனால் நான் மும்பையில் இருந்த காலத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பிரச்சனை உண்டானது. பிரசங்கி நீங்கள் மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும் என்று பிரசங்கிக்க நெல்லை ஜெபராஜ் அவர்கள் அதை பலமுறை பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் என்று மொழிப்பெயர்க்க, நான் அதை தட்டிக்கேட்க, கூட்டத்தில் பிரச்சனை உண்டானது.

41) கடைசி சபைக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம் என்றுக்கூறிக்கொண்டு, தேவனால் எழுதப்பட்ட வார்த்தைக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும், மகிமையையும் செலுத்தாது, எதற்கெடுத்தாலும் சகோ பிரன்ஹாம் சொன்னார், சொன்னார், அங்கு அப்படி சொன்னார், இங்கு இப்படி சொன்னார் என்றுக்கூறிக்கொண்டு சகோ பிரன்ஹாமுக்கு குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்த அந்த பெண்களைப்போன்று (அப்.16:16-18) துதிபாடிக்கொண்டிருக்கும், ஹாப்மேன் என்பவர் வரைந்த, இயேசு 33 வயதுப்படத்தை தங்கள் இல்லங்களின் முகப்பில் மாட்டி வைத்து விக்கிரகாராதனை செய்யும், மேலும் சகோ பிரன்ஹாம் படத்தையும் வீட்டில் மாட்டி அதற்கும் தனிப்பட்ட முறையில் ஒரு கனத்தைக்கொடுத்து வரும் அனைத்து நபர்களின் பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்பட இருக்கிறது. இது நிச்சயம் / உறுதி.

42) ஏழாம் சபைக்கால தூதனும், தீர்க்கதரிசியும் ஆகிய சகோ பிரன்ஹாம் செய்திகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிப்பெயர்க்கும் இன்றைய மொழிப்பெயர்பாளர்களின், வெளியிடுபவர்களின் இல்லற மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கை கிறிஸ்துவுக்கும், அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக இல்லை. நீங்கள் ஒரு விசுவாசித்திலும், உங்கள் மனைவி மற்றொரு விசுவாசத்திலும் உங்கள் பிள்ளைகள் இருவருடைய விசுவாசத்திலும் இல்லாது காணப்படுகிறார்கள். மேலும் எந்த ஆவியினால் செய்தியானது பிரசிங்கிக்கப்பட்டதோ, அதே ஆவி மொழிபெயர்ப்பாளர்களிடத்திலும், வெளியிடுபவர்களிடத்திலும், காணப்படவில்லை. அவர்கள் ஒரு துணிகரத்துடன் செய்தியை மொழிப்பெயர்த்து வெளியிடுகிறார்கள். ஆதலால் இவர்கள் பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்பட இருக்கிறது.

43) சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, அதாவது தேவத்துவத்தில் ஒருவர், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவமன்னிப்புக்கென்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம், தேவனுடைய வார்த்தை தூஷிக்கபடாதபடிக்கு திருமணம் ஆன பெண்கள் வீட்டில் தரித்திருக்க வேண்டும், தன் கணவனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிதலுள்ளவள் என்பதற்கு ஒரு ஸ்திரீ நீண்ட தலைமயிரை உடையவளாக இருக்க வேண்டும், அதுவே அவள் தலைமுக்காடு; தசமபாகத்தினாலும், காணிக்கைகளினாலும், தேவனை வஞ்சிக்க கூடாது, கர்த்தருக்குரிய தசமபாகத்தை ஒழுங்காக சபைக்கூடும் இடமாகிய, இன்றைய பண்டக சாலைக்கு கொண்டு செல்ல வேண்டும், பெண்கள் பொன் ஆபரணங்களை அணிந்து தங்களை அலங்கரிக்க கூடாது, பெண்கள் சபைகளில் ஆண்கள் மத்தியில் பிரசங்கம் செய்து அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது, ஒரு விசுவாசி அவிசுவாசியோடு எந்த வகையிலும் சம்பந்தம் கலக்க கூடாது போன்ற அன்றாட நடைமுறை சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தப்பின் ஒருவன் அதை மனப்பூர்வமாய் மறுதலித்து பாவம் செய்கிறவனாய் (அவிசுவாசியாய்) இருப்பானாயில் அவர்கள் பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போட இருக்கிறது. என்னைத்தள்ளி, என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்று இருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோ.12:48)

44) நான் அறிய தமிழ்நாட்டில் இக்காலத்திற்குரிய செய்திகளை போதிக்கும், விசுவாசிக்கும், மக்கள் மத்தியில் சத்தியத்தை காண்பதும், சத்தியத்தின்படி நடக்கிறவர்களை காண்பதும் மிக்க அரிதாய் இருக்கிறது. ஏனென்றால் தேவனைத்தேடுகிற உணர்வுள்ளவர்கள் இல்லை. நன்மை செய்கிற ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் வழிவிலகி ஏகமாய் கெட்டுப்போனார்கள். பிரன்ஹாம், பிரன்ஹாம் என்று தங்கள் பிரசங்கத்தில் நிமிடங்கள்தோறும் பேசும் அநேக பாஸ்டர்களின் நிலை இதுதான். விசுவாசிகளின் நிலையும் அப்படியே. இருவர்களிடத்திலும் சாட்சியும் இல்லை, கிரியையும் இல்லை. ஆதலால் இவர்களில் பெரும்பான்மையினோர் பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து அகற்றப்பட இருக்கிறது.

54. **ஜீவபுஸ்தகத்திலிருந்து பெயர்கள் அகற்றப்பட்டதற்கு, சில சம்பவங்களை நாம் பழைய, புதிய ஏற்பாடுகளிலிருந்து காணலாம்.**

(அ) யாக்கோபின் 12 குமாரர்களின் பெயர் ஆதி.35:22-26 வசனங்களில் உள்ளன. 1. ரூபன், 2. சிமியோன், 3. லேவி, 4. யூதா, 5. இசக்கார், 6. செபுலோன், 7. யோசேப்பு, 8. பென்யமீன், 9. தாண், 10. நப்தலி, 11. காத், 12. ஆசேர். யாக்கோபின் இந்த 12 குமாரர்களின் சந்ததி, இஸ்ரவேலின் 12 கோத்திரங்களாயின. யோசேப்புக்கு பதிலாக அவன் இரு குமாரர்களான எப்பிராயீம், மனாசே என்பவர்கள் சந்ததி உண்டாகி மொத்தம் 13 கோத்திரங்கள் இஸ்ரவேலில் உண்டாயிற்று. இதில் லேவி கோத்திரத்தினர் தேவனுடைய

ஆசாரிய ஊழியத்திற்கென பிரித்தெடுக்கப்பட்டனர். இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியே வந்த பிறகு, வனாந்தரத்தில் ஆசரிப்பு கூடாரத்தை அமைக்க தேவன் கட்டளையிட்டார். அப்பொழுது லேவி கோத்திரத்தார் 1.ரூபன், 2.சிமியோன், 3.இசக்கார், 4.யூதா, 5.செபுலோன், 6.பென்யமீன், 7.தாண், 8.நப்தலி, 9.காத் 10.ஆசேர், 11.எப்பிராயீம், 12.மனாசே என்னும் 12 கோத்திரதாருக்கு பணிவிடை செய்தனர். இதில் யோசேப்பு, லேவி கோத்திரத்தாரின் பெயர்கள் காணப்படவில்லை. (எண்.10:11-28) அடுத்து நடப்பதை கவனியுங்கள். இஸ்ரவேல் புத்திரத்தாருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள். 1,44,000 பேர் (வெளி.7:4) 1.யூதா-12,000, 2.ரூபன்-12,000, 3.காத்-12,000, 4.ஆசேர்-12,000, 5.நப்தலி-12,000, 6.மனாசே-12,000, 7.சிமியோன்-12,000, 8.லேவி-12,000, 9.இசக்கார்-12,000, 10.செபுலோன்-12,000, 11.யோசேப்பு-12,000, 12.பென்யமீன்-12,000. (வெளி.7:5-8). ஆனால் நாம் மேலே எண். 10:11-28 ல் கூறப்பட்ட பெயர் வரிசையிலிருந்து தாண், எப்பிராயீம், கோத்திரங்கள் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக மீண்டும் லேவி யோசேப்பு கோத்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பொழுது ஏன் இந்த மாற்றம் என்பதற்குரிய காரணத்தை நாம் வேதவாக்கியங்களிலே காணலாம். உபா.29:16-20 வசனங்கள் என்னக் கூறுகிறது? நாம் எகிப்து தேசத்தில் குடியிருந்ததையும், நாம் கடந்து வந்த இடங்களிலிருந்த ஜாதிகளின் நடுவில் நடந்து வந்ததையும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அவர்களுடைய அருவருப்புகளிலும், அவர்களிடத்தில் இருக்கிற மரமும், கல்லும், வெள்ளியும், பொன்னுமான நகரரான தேவர்களையும், கண்டிருக்கிறீகள். ஆகையால் அந்த ஜனங்களின் தேவர்களை சேவிக்கப்போகும்படி, இன்று நம்முடைய கர்த்தரை விட்டு அகலுகிற இருதயமுள்ள ஒரு புருஷனாகிலும், ஸ்திரீயாகிலும், குடும்பமாகிலும், கோத்திரமாகிலும், உங்களில் இராதபடிக்கு நஞ்சையும், எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களிடத்தில் இராதப்படிக்கு பாருங்கள். அப்படிப்பட்டவன் இந்த ஆணை உறுதியின் வார்த்தைகளை கேட்டும், தாகத்தின் நிமித்தம் வெறிக்கக்குடித்து, மன இஷ்டப்படி நடந்தாலும், எனக்கு சுகமுண்டாயிருக்கும் என்று தன் உள்ளத்தை தேற்றிக்கொண்டால் கர்த்தர் அவனை மன்னிக்க சித்தமாயிரார். அப்பொழுது கர்த்தரின் கோபமும், எரிச்சலும் அந்த மனிதன் மேல் புகையும் இந்த புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற சாபங்கள் எல்லாம் அவன் மேல் தங்கும். கர்த்தர் அவன் பேரை வானத்தின் கீழ் இராதபடிக்கு குலைத்துப்போடுவார். ஆக விக்கிரகாராதனை அல்லது ஆவிக்குரிய விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு சாபம் உண்டாயிருக்கிறது. இதனால் விக்கிரகங்களை ஆராதித்த தாண், எப்பிராயீம் இரு கோத்திரங்களின் பெயர்கள் அகற்றப்பட்டன. யெரொபெயாம் : இஸ்ரவேலரே, இதோ இவர்கள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி ஒன்றை பெத்தெலிலும், ஒன்றை தாணிலும் ஸ்தாபித்தான். இந்த காரியம் பாவமாயிற்று. ஜனங்கள் இந்த ஒரு கன்றுக்குட்டிக்காக தாண் மட்டும் போவார்கள். (1இரா.12:2-30) எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான். அவனை போகவிடு. (ஓசி.4:17) ஆக தாண் மற்றும் எப்பிராயீம் கோத்திரங்களை கர்த்தர் குலைத்துப்போட்டதால், அவர்களை சேர்ந்தவர்கள் முத்தரிக்கப்பட்ட கோத்திரங்களில் இல்லை. இக்கோத்திரங்கள் இனி ஒருபோதும் அறியப்படுவதில்லை. விக்கிரகங்களிடம் திரும்பியதினால் ஜீவபுஸ்தகத்திலிருந்து பெயர்கள் எடுக்கும்படியான தண்டனை அளிக்கப்படுகிறது என்றால் நிச்சயமாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒன்றான மெய்த்தேவன் என்று அறிக்கையிட்டு, ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்கும், இந்த திரித்துவஸ்தாபன சபை ஊழியர்களும், விசுவாசிகளும் இன்னும் அதிகமான தண்டனை பெறுவார்கள் அல்லவா? ஆதலால் அவர்கள் பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போடப்பட உள்ளன. (ஆ) மற்றொரு சம்பவத்தை புதிய ஏற்பாட்டில் காணலாம். லூக்.10:17-24 வசனங்களை தியானித்தால், இங்கு இயேசு சீஷர்களின் நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதாக கூறுகிறார். அவர்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இயேசு 70 சீஷர்களுக்கு மாத்திரம் அல்ல. (வசனம் 17) பன்னிருவருக்கும் (வசனம் 23) இதைக்கூறுகிறார். யூதாஸ் பன்னிருவரில் ஒருவனாக இயேசுவின் நாமத்தினால் பிசாசுகளை துரத்தினான். ஆனாலும் அவன் பிசாசு என்றும் கேட்டின் மகன் என்றும் அழைக்கப்படுகிறான். இயேசு அவர்களை நோக்கி : பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துக்கொள்ளவில்லையா? உங்களுக்குள் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார். சிமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத் பன்னிருவரில் ஒருவனாய் இருந்தும், தம்மைக்காட்டிக் கொடுக்க போகிறவனாய் இருந்தபடியால் அவனைக்குறித்து இப்படி சொன்னார். (யோ.6:70-71) வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக கேட்டின் மகன் கெட்டுப்போனானே அல்லாமல் அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. (யோ.17:12) நீங்களும் சுத்தமாய் இருக்கிறீர்கள். ஆகினும் எல்லாரும் அல்ல. வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிக்காலை தூக்கினான்.( யோ.13:10,11,18) யூதாஸை இயேசு தெரிந்துக்கொண்டாலும்,( யோ.13:18) அவன் சுத்தமாயில்லை.(யோ.13:10,11) பிதாவானவர் யூதாசே இயேசுவுக்குத் தந்தார்.( யோ.17:12) யூதாஸ் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டு அழிவுக்கென நியமிக்கப்பட்டான்.(1பேது2:8) யூதாஸ் பன்னிருவருள் ஒருவனாக இருந்து பெந்தெகொஸ்தே காலத்திற்கு முன்னிருந்த ஊழியத்தில் பங்குக்கொண்டான். அவன் செய்த ஊழியம் மற்ற சீஷர்களின் ஊழியத்தைக்காட்டிலும் தாழ்ந்ததல்ல. அல்லது இது சீஷர்களின் ஊழியத்தின் மத்தியில் ஏற்பட்ட பிசாசின் ஊழியமும் அல்ல. யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்கு போகும்படி இழந்து போன இந்த ஊழியத்திலும் என அப்.1:24 கூறுகிறது. பிசாசான யூதாஸ், தேவனால் அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் ஊழியத்தை இழந்து, தற்கொலை செய்துக்கொண்டு, தனக்குரிய இடத்திற்கு சென்றான். அவனுடைய பெயரும் ஜீவபுஸ்தகத்தில் உண்டாயிருந்து பின்பு அகற்றப்பட்டது. இங்கு மீண்டும் ஒருமுறை நன்கு கவனியுங்கள். யூதாஸ் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவன். சத்தியத்தில் போதிக்கப்பட்டவன். எல்லா பரம ரகசியங்களையும் அறிந்திருந்தான். வல்லமையுள்ள ஊழியம் அவனுக்கு அளிக்கப்பட்டது. இயேசுவின் நாமத்தினால் அவன் பிணியாளிகளை சுகப்படுத்தி, பிசாசுகளை விரட்டினான். ஆனால் கடைசியில் பணத்திற்காகவும், புகழுக்காகவும் இயேசுவை விற்றுப்போட்டான். அவன் ஜீவவார்த்தையை முப்பது வெள்ளிக்காசுக்காக காட்டிக்கொடுத்தான் என்பதற்காக, நியாயத்தீர்ப்பு அடைய வேண்டும். அவன் ஜீவபுஸ்தகத்திலுள்ள தன் பங்கை விற்றுப்போட்டான். அவன் அதற்காக அங்கு நியாயசங்கம் முன் நிற்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட வேண்டும். அவனுடைய பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்தது. அதன் காரணமாக அவன் இரட்சிக்கப்பட்டான் என்று அர்த்தமல்ல. அவன் நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டும். இயேசுகிறிஸ்துவை அநீதியாய் புறக்கணித்த தீயவர்களின் பெயர்களும், அவருடைய மக்களை நிர்மூலமாக்கினவர்களின் பெயர்களும், ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுக்கப்படும். (சங்.69:28) யூதாஸைப்போன்று நம் மத்தியில் ஆயிரக்கணக்கானோர் தோல்வி அடைந்ததை நம் கண்களினால் காண்கிறோம். இயேசு அழைக்கிறார், இயேசு விடுவிக்கிறார், இயேசு சுகமளிக்கிறார், இயேசு கைவீடார், இயேசு வருகிறார் என்று இயேசு பெயரை இப்படியே சொல்லிச்சொல்லி பணம் சம்பாதிப்பதிலும், புகழ்ச்சியை சம்பாதிப்பதும்தானே இவர்களுடைய பிரதான நோக்கமாய் இருக்கிறது. தசமபாகம் மற்றும் காணிக்கை கொடுக்கிறவன் ஏழையாகவே இருக்கிறான். ஆனால் அதை வாங்கிறவர்கள் மாடமாளிகையில் சுகபோகமாக வாழ்கிறார்கள். இவர்கள் ஜனங்களை கவர்ச்சியினால் ஏமாற்றவே விரும்புகிறார்கள். சத்தியத்தை தைரியமாக மக்களுக்கு எடுத்துக்கூறமுடியவில்லை. சத்தியத்தை சொல்லி ஏன் சத்துருவாக வேண்டும் என பயப்படுகிறார்கள். இதன் காரணமாக யூதாஸைப்போன்று இவர்களது பெயர்களும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போடப்பட உள்ளன.

55) **மத்.7:21-23 வசனங்களில் கூறப்பட்டுள்ளவர்கள் யார்?** பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி : கார்த்தாவே! கார்த்தாவே! என்று சொல்லுகிறவன் பரலோக

ராஜ்யத்தில் பிரவேசிப்பது இல்லை. அந்நாளில் அநேகர் கர்த்தரை நோக்கி கார்த்தாவே! கார்த்தாவே! உமது நாமத்தினால் பிசாசுகளைக் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களை செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமசெய்கைக்காரர்களே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன். மனுஷர்களுடைய அந்தரங்கள் எல்லாவற்றையும் அறியும் இயேசு அவர்களை நோக்கி : நான் உங்களை அறியவில்லை, அக்கிரமசெய்கைகாரர்களே என்றுக்கூறியதால் முதலாவது அற்புதங்களை செய்த இந்த கூட்டத்தார் கிறிஸ்துவின் மணவாட்டியல்ல. புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகளும் அல்ல. பரிசுத்தவான்களும், நீதிமான்களும் அல்ல. முதலாவது இவர்கள் தேவனுடைய வார்த்தையில் நிலைநிற்கவே இல்லை. இவர்கள் ஆவியின் கனிகளை கொடுக்கவும் இல்லை. ஆதலால் இவர்கள் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகின்றனர். இந்த குருப்பில் தான் உங்கள் மத்தியில் பிரபலமாய் இருக்கும், குட்டி குட்டி அற்புதங்களை செய்யும் அநேக ஊழியர்களும் இருக்கிறார்கள். இவர்கள் பிசாசுகளை துரத்துவது உண்மைதான், சிறு சிறு அற்புத அடையாளங்களை செய்வது உண்மைதான், ஆனால் அவைகள் யாவும் ஆவிக்குரியவைகள் அல்ல. ஆதலால் இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையும், உத்தமுமாய் இருந்து சத்தியத்தை சத்தியமாய் போதிக்காது பிலேயாமைப்போன்று, பணத்திற்காகவும், செல்வாக்கிற்காகவும், உலகத்தை சுற்றிபார்ப்பதற்காகவும், ஊழியம் செய்தார்களேயன்றி கிறிஸ்துவுக்கு உண்மையாய் ஊழியம் செய்யவில்லை. இவர்களை கர்த்தர் தம்முடைய பணிக்கென்று தெரிந்துக்கொள்ளவும் இல்லை. இவர்கள் ஐந்துவகை ஊழியங்களிலும் இல்லை. சொல்லப்போனால் இவர்கள் மனந்திரும்பவே இல்லை. ஏனென்றால் அழைப்பும் வரங்களும், ஒருவன் மனந்திரும்பாமலே அவனிடத்தில் கிரியை செய்யும் The Gifts and Callings are without repentance. ஆதலால் இவர்கள் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறார்கள். இவர்கள் பெயரும் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போடப்பட இருக்கிறது. ஆனாலும் இன்னும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் பிராயச்சித்தம் செய்துக்கொண்டிருக்கிறது. உங்கள் ஆத்துமா உங்கள் சரீரத்தை விட்டு செல்லுகின்றவரை, ஆதலால் இது நீங்கள் சிந்தித்து செயல்பட வேண்டிய நேரம். தாமாதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குதத்தத்தைக்குறித்து தாமதமாய் இராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமை உள்ளவராய் இருக்கிறார். (2 பேது.3:9)

56) முடிவாக நாம் புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகளை காண்கிறோம். புத்தியுள்ள கன்னிகைகள் மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளபடுகிறார்கள். புத்தியில்லாத கன்னிகைகள் உபத்திரவ காலத்தில், சுத்திகரிக்கப்பட்டு, சில இரத்த சாட்சிகளாய் மரித்து, நித்தியஜீவனை நியாயத்தீர்ப்பை பெறுகிறார்கள். ஆனாலும் இவர்கள் ஆயிரவருட அரசாட்சியில் காணப்படவில்லை. மாறாக வெளி.20:11-15 நியாயத்தீர்ப்பில் பங்குபெறுகிறார்கள். அடுத்து வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளும் வருகிறார்கள். வெள்ளாடுகளின் தொடக்கமே புறக்கணிக்கப்பட்டு சபிக்கபட்டவர்கள். செம்மறியாடுகள் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டு, கிறுக்கப்படாத அனைவரும் வருகிறார்கள். இவர்கள் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்பு பாராட்டின நிக்கோதேமு மற்றும் கமாலியேல் போன்றவர்கள். ஆக அப்.2:47 ல் தொடக்கப்பட்ட சபையின் ஒருபாகம் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டது. அதாவது எடுத்துக்கொள்ளப்பட்டது. மற்றொரு பாகம் நியாயத்தீர்ப்புக்கு செல்லப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது பாகம் பதர் என்று கருதப்பட்டு, அக்கினிகடலில் தள்ளப்பட்டு, சுட்டெரிக்கப்பட வைக்கப்பட்டிருக்கிறது.

57) இப்பொழுது நாம் செய்யவேண்டியது என்ன? நாம் கர்த்தருடைய இரகசிய வருகைகாக மாத்திரமே ஆயத்தமுடன் காத்திருக்கவேண்டும். நம்முடைய தீவட்டிகளை சுத்தம் செய்து அதை முற்றிலும் எண்ணெய்யினால் நிரப்பிவைத்து, இடைவிடாமல் ஜெபித்துக்கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அல்ல ஒவ்வொரு மணிநேரமும் நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையுடன் நம்மை ஆயத்தமாக வைத்திருப்போம். கர்த்தருடைய வருகைக்காக விழித்துக் காத்துக்கொண்டிருப்போம். அனைவருடனும் இனிமையாக இருப்போம். சமாதானத்தின் தேவன் தாமே நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. நம் ஒவ்வொருவருடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி, காக்கப்படுவதாக. நம்மை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். ஆதலால் அவர் அப்படியே நம்முடைய வேண்டுதல்களின்படி செய்வார்.

## கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி கூடுமானால் தெரிந்துக்கொள்ளபட்டவர்களையும் வஞ்சிப்பார்கள்.( மத்.24:24)

1. இந்நாட்களில் ஆப்ரிக்கா நாட்டை சேர்ந்த காக்குவ் பிலிப்பு (Kacou Philippe) என்பவரை ஒரு தீர்க்கதரிசியாக கேரளா, பாலக்காடு, குள்ளராயன் பாளையத்தை சேர்ந்த தமிழர் சகோ மார்ஷல் தலைமையில், கோவை சுந்தராபுரத்தை சேர்ந்த சகோ ஆபிரகாம் (இருவரும் எனக்கு மிக்க அறிமுகமானவர்கள்) மற்றும் சகோ அனில் போன்றவர்கள் அறிமுகப்படுத்தி வருகிறார்கள். கூலிக்காக மாரடித்துக்கொண்டு வருகிறார்கள். இவர்களுக்கடுத்த காரியங்களை வாட்ஸ்அப்பில் அவ்வப்போது காணலாம். ஒரு தீர்க்கதரிசி வரப்போகும் காரியங்களை முன்கூட்டி அறிவித்து, தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களுக்கு தெய்வீக வியாக்கியானம் அளிப்பது அவனது அடையாளம் ஆகும். இவன் முன்குறிக்கப்பட்டு தீர்க்கதரிசியாகயிருக்கப்பிறந்தவன். (சபை பக்திவிருத்திக்கான தீர்க்கதரிசி வேறு) இவனுடைய வாழ்நாள் முழுவதும் இவன் தீர்க்கதரிசியாகவே இருக்கிறான்.

2. முன்தின நாட்களில், தமிழ்நாட்டைச் சார்ந்த சகோ பாலாசீர் லாறி என்பவர் சகோ பிரன்ஹாம் பெயரை உபயோகித்து ஊழியம் செய்து பின் தன்னை மனுஷகுமார ஸ்தானத்திற்கு உயர்த்தினார். அற்புத அடையாளங்களையும் செய்தார். காலப்போக்கில் அவர் யார் என்பதை, அவருடைய கிரியைகளிலிருந்து மக்கள் தெரிந்துக்கொண்டனர். அவரைச்சார்ந்த அநேகர் தங்கள் சொத்து சுகங்களை இழந்து நடுத்தெருவிற்கு வந்தார்கள், அவமாய் போனார்கள். அடுத்து வேலூர் தாமஸ், புதுக்கோட்டை ஜெயராய் போன்றோர் எழும்பினார்கள். இவர்கள் யாவரும் பாலாசீர் லாறியின் மணவாட்டியாக வாழ்ந்தவர்களே. இவர்களும் நூற்றுக்கணக்கான பேர்களை வஞ்சித்தார்கள். இதில் நம் மத்தியில் திருச்சியிலுள்ள பாஸ்டர்கள் அநேகர் அடங்குவார்கள். ஆனாலும் இவர்கள் இன்று மணவாட்டிக்கு உபதேசிக்கிறார்கள் என்றால் இந்தக்கொடுமையை என்ன என்று கூறுவது? இவர்களையும் நம்பி திருச்சியில் ஒரு கூட்டம் சீரழிந்துக்கொண்டிருக்கிறது. இவர்களில் பிரபலமானவர்கள் திருச்சியில் சகோ ரூபன், சகோ செழியன், சகோ ராபின்சன் முதலானவர்கள். அதன்பின் சிங்கப்பூர் சகோ ரிச்சர்டு கேன் (Richard Gan) தன்னை ஒரு பெரிய மனிதனாக காட்டி இந்தியாவில் அநேகர்களுக்கு பொருளுதவி செய்து, அவருக்கு காவடிகள் எடுக்க ஏற்பாடு செய்தார். பலரை தன் நாட்டிற்கு அழைத்து சென்றார். இவர்களில் பிரபலமானவர்கள் கோவை சகோ சாத்ராக், பெங்களூரு சகோ சோமு சாலொமோன், ஊட்டி சகோ லாரன்ஸ் போன்றவர்களை நான் அறிவேன். ஆனால் சகோ ரிச்சர்டு அவர்களிடம் அந்த அளவுக்கு போதுமான பொருளாதார வசதி கிடையாது. ஆதலால் இவர் பெயர் கொஞ்சகாலம் அங்கும் இங்கும் பேசப்பட்டது. அதன்பின் மறக்கப்பட்டது. ஏனென்றால் அவருடைய உபதேசம் எடுப்படவில்லை. ஆதலால் அவரைச்சார்ந்த யாவரும் விசுவாசிகளால் அசட்டை பண்ணப்பட்டு, சிதறடிக்கப்பட்டார்கள். அடுத்து

நைனிட்டால் சகோ டால்ட்டன் ப்ரூஸ் உபதேசம் இறக்குமதி ஆனது. இவரும் பலருக்கு பணஉதவிகள் செய்து, தனக்கு துதிபாட கூலியாட்களை நியமித்தார். இவருக்கும் தமிழ்நாட்டில் சகோ டேனியல் ஆசீர்வாதத்திற்கு வாய்ப்புக்கிடைத்தது. இவரும் அவரிடமிருந்து பணஉதவிகள் பெற்றார். பலருக்கு பணஉதவிகள் செய்து ஆண்கள் தாடி, மீசை வைக்கக்கூடாது, பெண்கள் லுங்கி மாத்திரம் கட்டவேண்டும் போன்ற போதனைகளை கொண்டுவந்தனர். முடிவில் இவர்கள் பெயரைக்கூட உச்சரிக்க ஒரு நாதிகூட இல்லாமல் போய்விட்டது. ஆனால் சகோ சாமுவேலுக்கு ஒரு நல்ல வாய்ப்புக்கிடைத்தது. இவர் சோமங்கலம் அருகில் ஒரு சபைக்கட்டிடத்தைக் கட்டிவிட்டார். இவ்வாறாக இவர்களுக்கு அந்த உபதேசத்தில் வேலைவாய்ப்பு, சம்பளம் கிடைக்கும் வரை ஓடி, ஆடி ஊழியம் செய்தனர். பணவரவு குறைந்தவுடன் எங்கோ முடங்கி படுத்து உறங்கிவிட்டார்கள். இவர்களை கண்டுபிடிக்க விளம்பரம் செய்யவேண்டிய நிலை. ஆனாலும் இவர்களைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. முடிவில் இவர்கள் அனைவருடைய தலைகளும் கவிந்து தரையை நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

3. இப்பொழுது ஆப்ரிக்கா மண்ணில் பிறந்து வளர்ந்த சகோ காக்குவ் பிலிப்பை ஒரு தீர்க்கதரிசியாக மேல் பெயரிடப்பட்ட மூவரும் அறிமுகப்படுத்தி வருகிறார்கள். ஆனால் பொதுவாக ஆப்ரிக்கா நாடு மிக, மிக ஒரு ஏழ்மையான நாடு. ஆதலால் இவர் நம்முடையவர்களுக்கு எந்த அளவுக்கு பணம் கொடுத்து உதவி செய்வார் என தெரியாது. ஆனால் சூடியசீக்கிரத்தில் இவரும், இவரை சார்ந்தவர்களுடைய பின்நிலை முந்திய நிலமையைவிட மோசமாக இருக்கும் என்பது அதி நிச்சயம். சகோ மார்ஷல் ஒரு காலத்தில் கிறிஸ்து பிரன்ஹாம் விசுவாசத்தில் இருந்தார். ஆனால் காலப்போக்கில் என் கண்கள் திறந்தது என்றுக்கூறி வெளியே வந்தார். தலைமுக்காடு குறித்து எந்தவிதமான பிரச்சனை எழுப்பாமல், தன் திருமணம் முடியும் வரை பாலக்காடு, புங்கந்துரை சகோ விக்டர் லாசர் அரவணைப்பில் இருந்தார். அவர் இவரது திருமணத்தை நல்லமுறையில் நடத்தி வைத்தார். அது முடிந்தவுடன் பெண்கள் தங்கள் தலையில் சேலை முந்தானையைக்கொண்டு, ஒரு முக்காடு போடவேண்டும். அவர்கள் நீண்ட தலைமயிர் அவர்களது தலைமுக்காடு அல்ல என்ற பிரச்சனையை கிளப்பி, அவரை விட்டு வெளியே வந்தார். கேரளா, சகோ மார்ஷல் வீட்டாருக்கு நான் கூறும் ஆலோசனை என்னவென்றால்: ஒரு ஸ்திரீ நீண்ட தலைமயிர் வைத்திருப்பது, அவள் தன் தலையை மூடிக்கொண்டதாக அர்த்தம். அவள் தன் தலைமயிரை சிரைத்துக்கொள்வது வெட்கமாகவோ அல்லது அவமானமாகவோ இருந்தால் அவள் தன் தலையை மூடிக்கொள்ளகடவள். அவள் நீண்ட தலைமயிரை வைத்துக்கொள்ள கடவள். (தியானியுங்கள். கே.ப.351) இவரும் ஒரு ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்தான். ஆனால் இன்று ஆப்ரிக்கா சென்று தன் தீர்க்கதரிசியை முகமுகமாக பார்த்துவந்தார் என கேள்விப்பட்டேன். நான் அறிய சகோ மார்ஷல் காரியங்கள் இவ்வாறாக இருக்கிறது. இவர்களது இருதயம் சுத்தமாக இல்லை. பிலேயாமின் இருதயம் போன்றதுதான். அடுத்து சகோ ஆபிரகாம் குடும்ப காரியங்கள் சரியில்லை. மனைவி பிரிந்து வாழ்கிறார். இவர் தமிழ்நாட்டிலிருந்து பீகார் சென்று, அங்கு பணிபுரிந்து வருகிறார். தன் மூன்று பிள்ளைகளை கோவையில் மிக கஷ்டமான நிலையில் படிக்கவைத்து வருகிறார். இவருக்கும் பணக்கஷ்டம் அதிகம் தான். ஆதலால் பண ஆசை இவரையும் திசைதிருப்பி இருக்குமோ என்று ஐயப்படுகிறேன். ஆனால் கர்த்தர் இவருடைய உள்ளத்தை அறிவார். சேனைகளின் கர்த்தர் உள்ளிந்திரியங்களையும், இருதயத்தையும் சோதித்து அறிகிற நீதியுள்ள நியாயாதிபதியாய் இருக்கிறார். எரே.11:20 ஆனால் இவர்களது உபதேசம், ஒரு விசை பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாச அடிப்படையில் இல்லை. மாறாக தங்களுக்கு பணஅடிப்படையில் ஷேமத்தை தேடுகிறார்கள். ஆதலால் இவர்களது ஏஜெண்டுபணியும், ரொம்பகாலம் நிலைத்திருக்காது. ஒருநாள் வெட்கப்பட்டு தலைக்கு முக்காடு போடவேண்டிய நிலைவரும்.

4. இவர்களது தீர்க்கதரிசி ஒரு இடத்தில் இவ்வாறு பேசுகிறார். நான் ஒரு தீர்க்கதரிசி என்பதற்கு ஆதாரம் என்னவென்று அவர்கள் கேட்கும்போது குறைந்தப்பட்சம் இவ்வாறு சொல்லுங்கள். 1963 ல் பிரன்ஹாமினால் இவரைப்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. (சகோ பிரன்ஹாம் எந்த செய்தியில் இவரைப்பற்றி கூறியுள்ளார். என்ன கூறியுள்ளார் என்ற விவரங்கள் கொடுக்கப்படவில்லை). மேலும் மத்.25:6, வெளி.12:14 ன் படி நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் தாம் செய்துக்கொண்டிருக்கும் கிரியைகளை நிறைவேற்றும்படி தேவன் ஒரு ஆப்ரிக்கனை எழும்பப்பண்ணியிருக்கிறார் என்கிறார். ஆனால் எந்தவொரு அழைப்பும் வேதவாக்கியங்களிலிருந்து வரவேண்டும். வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாத எந்தவொரு அழைப்பும், தேவசித்தத்திற்கு புறம்பானது. இவர் தன் அழைப்பை வேதவாக்கியங்களின் அடிப்படையில் எடுத்துக்காட்ட முடியவில்லை. மோசே மகத்தானவர்தான். ஆனால் அவர் ஏற்கெனவே மரித்துப்போய்விட்டார். எலியா மகத்துவமானவர்தான் ஆனால் அவர் ஏற்கெனவே மரித்துப்போய்விட்டார். முகமது மகத்தானவர். ஆனால் அவர் ஏற்கெனவே மரித்துப்போய்விட்டார். வில்லியம் பிரன்ஹாம் மகத்தானவர்தான். ஆனால் அது அங்கே ஜெபர்சன்வில்லில் கல்லறையில் (பிணங்கள் புதைக்கும் இடம்) உள்ளது. அவர் ஏற்கெனவே மரித்துப்போய்விட்டார் என்று இந்த தீர்க்கதரிசி கூறுகிறார். இவரது இந்த பேய்தனத்துக்கடுத்த வியாக்கியானம் குறித்து கீழே தியானிப்போம்.

5. கர்த்தரின்தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். கர்த்தர் அவனை மோவாப் தேசத்தில் உள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். (உபா.34:5,6) அதேவேளையில் பிசாசு, பிராதன தூதனாகிய மிகாவேலிடம் மோசேனுடைய சரீரத்தைக்குறித்து தர்க்கித்தான். ஏனென்றால் அவனும் மோசேயின் பிரேதக்குழியை அறியான். ஆனால் இந்த மோசேயும், எலியாவும் இயேசுவுடன் பேசுகிறவர்களாக காணப்பட்டனர். (மத்.17:3) மோசே உயிர்தெழுந்தான். எலியா உயிருடன் எடுத்துக்கொள்ளப்பட்டான். ஆக இருவரும் இன்று உயிருடன்தான் இருக்கிறார்கள். எலியாவும் இதுவரை மரணத்தை ருசிப்பார்க்கவில்லை. இதோ அக்கினி இரதமும், அக்கினி குதிரைகளும் அவர்கள் (எலியா மற்றும் எலிசா) அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். (2ராஜா.2:11) உயிரோடுயிருக்கிறவர்களை கண் சொருகிப்போன இந்த குருட்டு தீர்க்கதரிசி மரித்தோர்கள் மத்தியில் காண்கிறார். இவர்தன் கண்களுக்கு கலிங்கம் போட்டால் நலமாக இருக்கும். ஆனால் அவர்கள் இருவரும் மரித்ததாக தேவன் இவரிடத்தில் நேரிடையாக பேசுகிறார் என்றுகூறும் இந்த தீர்க்கதரிசிக்கு மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பாருங்கள் வேதவாக்கியங்களுக்கு மாறான இவரது போதனை இவர் யார் என்பதை அடையாளம் காட்டுகிறது. ஆதலால் இவரை தேவன் அனுப்பியதும் இல்லை. இவருக்கு அதை கற்பித்ததும் இல்லை. உயிரோடு இருக்கிறவர்களை நித்திரை அடைந்தவர்களின் பட்டியலில் இவர் அடையாளம் காட்டுவது என்ன? நிச்சயமாக இவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியே. இவரை சார்ந்தவர்களும் கள்ளக்கபட வேலையாட்களே. இவர்களது உபதேசமே இவர்கள் யார் என்று அடையாளம் காட்டுகிறது. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதும் அல்லவா?

6. மேலும் தேவனிடத்திலிருந்து வரும் நியாயத்தீர்ப்பைக் குறித்து பிரசங்கம் பண்ணும் பொறுப்பையும், அழைப்பையும் 24-4-1993 ல் இவர் தேவனிடத்திலிருந்து பெற்றதாகக் கூறுகிறார். இதை நான் எனக்கு மே 21, 2016 ல் சகோ மார்ஷல் அனுப்பிய வாட்ஸ்அப்பில்

இருந்து எடுத்தேன். இந்த உபதேசம் தவறாக இருப்பதினால் அதுக்குறித்து நான் எழுதவேண்டிய கடமைக்குள்ளானேன். பொதுவாக தீர்க்கதரிசிகள் தேவனால் அனுப்பப்படுகிறார்கள். நான் உன்னை தாயின் வயிற்றில் உருவாகும் முன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் முன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிக்களுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன். (எரே.1:5) மேலும் இதுக்குறித்து : தங்கள் நாவின் சொல்லையே வழங்கி, அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்கிறார். இதோ பொய் சொப்பனங்களை தீர்க்கதரிசனமாக சொல்லி, அவைகளை விவரித்து என் ஜனத்தை தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும் மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் இந்த ஜனத்திற்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பது இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே.23:31)

7. இங்கு நாம் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஒரு தீர்க்கதரிசியும் தேவனுடைய நாமத்தைக்கொண்டுள்ள கள்ளத்தீர்க்கதரிசியையும் காண்கிறோம். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். (1கொரி.2:15) ஆதலால் இந்த கள்ளத்தீர்க்கதரிசியையும், அவரது மூன்று வேலையாட்களையும் வேதவாக்கியங்களைக்கொண்டு, ஆராய்ந்து நிதானிக்க வேண்டும். இந்த தீர்க்கதரிசியின் கைப்பாவைகளை நாம் ஏற்கெனவே ஆராய்ந்தோம். இப்பொழுது இந்த தீர்க்கதரிசியின் அழைப்பு மற்றும் உபதேசங்களை ஆராய்ந்துப்பார்ப்போம். **மோசே** அழைக்கப்பட்டதிற்கு தேவனுக்கு ஒரு நோக்கம் இருந்தது. இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்த தேசத்திலிருந்து நீக்கி, கானானிரும், ஏத்தியரும், ஏமோரியரும், பெர்சியரும், ஏவியரும், எபுசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு போய் சேர்ப்பதற்காக அந்த அழைப்பு இருந்தது. ஆதலால் மோசே இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி பார்வோனிடத்திற்கு அனுப்பப்பட்டான். (யாத்.3:7-10) **யோனாவுக்கு** ஒரு பணி இருந்தது. அவன் மகா நகரமாகிய நினிவேக்குப்போய், அதற்கு விரோதமாக பிரசங்கிக்க வேண்டியவனாயிருந்தான். ஏனென்றால் நினிவேயின் அக்கிரமம், தேவனுடைய சமூகத்தை வந்து எட்டியது. (யோனா.1:2) **ஆமோஸ்** மந்தையின் பின்னாலே போகிறபோது கர்த்தர் அவனை அழைத்து நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக தீர்க்கத்தரிசனம் சொல்லு என்று உரைத்தார். (ஆமோஸ்.7:15) **யோவான் ஸ்நானன்** அழைப்பை பெற்றிருந்தான். இவன் இஸ்ரவேல் சந்ததியாரின் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திருப்புவதற்கு அழைக்கப்பட்டான். பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும், கீழ்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும், திருப்பி உன்னதமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தம் பண்ணும்படியாக அவன் எலியாவின் ஆவியும், பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே (இயேசுகிறிஸ்து) நடந்தான். (லூக்.1:16,17) **சகோ பிரன்ஹாம்** பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்கள் இடத்திற்கு திருப்ப மல்.4:6 ன் பின்பகுதியை நிறைவேற்ற, எலியாவின் ஆவியை உடையவராக வந்தார். ஏழாம் சபைக்கால தூதனாகவும் இருந்தார். நாம் வேதவாக்கியங்களைக்கொண்டு அவரை அடையாளம் கண்டுக்கொண்டோம். இங்கு நீங்கள் கவனிக்க வேண்டியது. எலியா அற்புதங்களை செய்தான். ஆனால் பிரசங்கிக்கவில்லை. எலியாவின் ஆவியைவுடைய யோவான் ஸ்நானன் பிரசங்கம் மட்டும் செய்தான். அற்புத அடையாளங்கள் எதுவும் செய்யவில்லை. எலியாவின் ஆவியைபெற்ற எலிசா அற்புதங்களை மட்டும் செய்தான், பிரசங்கிக்கவில்லை. ஆனால் சகோ பிரன்ஹாம் அற்புத அடையாளங்கள் மற்றும் பிரசங்கம் இரண்டையும் செய்தார்.

8. பொதுவாக தீர்க்கதரிசிகள் தேவனுக்காக தேவனுடைய அழைப்பைப் பெற்று, தேவனுடைய வார்த்தையை பெற்று, ராஜாக்களிடம் சென்று பேசினார்கள். மக்களிடம் சென்று பேசினார்கள், ராஜாக்களை கடிந்துக்கொண்டு மக்களுக்கு எச்சரிப்பின் சத்தத்தை கொடுத்தார்கள். அரசியல், சமூக ஒழுங்கு கேடுகளை இடித்துரைத்தார்கள். மாய்மாலமான, மேலோட்டமான மார்க்கங்களை அனுசரிப்பவர்களை கண்டித்தனர். ஆதலால் இவர்கள் தேவனுடைய சார்பில் கூறிப்பிட்ட வேலைகளை செய்யும்படி ஏற்படுத்தப்பட்டனர். சொல்லப்போனால் இவர்கள் தேவனுக்காக செயல்பட்டனர், தேவனுக்காக பேசினர். நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலம் லவோதியக்கேயா சபையின் கடைசி மணிவேளை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நேரத்தை எதிர்நோக்கி கொண்டிருக்கும் வேளை. கதிர் முதிர்வடைந்து அருப்பை எதிர்நோக்கி கொண்டிருக்கிறது. சபை பக்திவிருத்திக்காக கர்த்தர் ஏற்கெனவே ஐந்துவகை ஊழியங்களை நமக்கு கொடுத்திருக்கிறார். இதில் இரண்டாவது ஸ்தானத்தில் தீர்க்கதரிசிகள் வருகிறார்கள். (எபே.4:13) இது தீர்க்கதரிசன வரங்களைக்கொண்ட தீர்க்கதரிசிகள். மற்றபடி பழைய ஏற்பாட்டில் காணப்படும் தீர்க்கதரிசிகளைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் பொதுமக்களுக்காக இருந்தார்கள். இங்கு இவர்கள் சபை பக்திவிருத்திக்காக மாத்திரமே. இங்கு சகோ காக்குவ் பிலிப்பு தன்னை ஒரு பெரிய தீர்க்கதரிசியாக தன்னைத்தானே அறிமுகப்படுத்தி கொள்கிறார். அப்படிப்பட்ட ஒரு தீர்க்கதரிசி இந்த மணி நேரத்திற்கு தேவையா? வேதவாக்கியங்களில் இதுக்குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளதா? இந்நாட்களில் அநேகர் தங்களை தீர்க்கதரிசிகள் என்று கூறிக்கொள்கிறார்கள். மறைந்த சகோ D.G.S. தினகரனை தீர்க்கதரிசி என்றே வர்ணிக்கிறார்கள். ஆனால் அதற்குரிய தகுதி வேதவாக்கியங்களின் அடிப்படையில் அவரிடத்தில் இருந்ததா? இல்லையே! சகோ டேனியல் கிறிஸ்டியான் தன்னை அப்போஸ்தலன் என்று அழைக்கிறார். ஆனால் அதற்குரிய தகுதிகளை வேதவாக்கியங்களின் அடிப்படையில் அவரிடத்தில் காணப்படுகிறதா? இல்லையே! ஆக அநேகர் தங்களை தீர்க்கதரிசி, அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக்கொள்ளலாம். ஆனால் இது பிசாசின் வஞ்சகம். ஆனால் அவர்கள் அழைப்பு வேதவாக்கியங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். எந்த தீர்க்கதரிசி சகோ D.G.S. தினகரனைப்போன்று கோடிக்கோடியான சொத்து சுகங்களை ஊழியத்தின் பேரில் சம்பாதித்து அனுபவித்தார், தலைமுறை தலைமுறைக்கான வாரிசுகளுக்கு சேர்த்துவைத்தார் என்பதை வேதவாக்கியங்களில் காட்டமுடியுமா? பொதுவாக தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் தனித்தவர்களாகவும், துக்கம், பாடுநிறைந்தவர்களாகவும், அனுபவிக்கிறவர்களாகவும், வேதவாக்கியங்களில் காணப்படுகின்றனர்.

9. இப்பொழுது நம்முடைய கள்ளத்தீர்க்கதரிசி தன் ஊழிய அழைப்பு மத்.25:6 மற்றும் வெளி.12:14 ல் கூறப்பட்டுள்ளது என்கிறார். இவர் 21 ஆம் நூற்றாண்டு தீர்க்கதரிசி என, இவருக்கு வால்பிடிக்கும் பக்தன் கோவை சகோ ஆபிரகாம் கூறுகிறார். ஆனால் நாம் 20 ஆம் நூற்றாண்டு தீர்க்கதரிசி என அழைக்கும் சகோ பிரன்ஹாம் மத்.25:6 குறித்து என்னகூறுகிறார்? இதற்கு விளக்கம் அவர் ஏற்கெனவே கொடுத்து விட்டார். கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வரும் போது முதலாவது ஆரவாரம் புறப்பட்டுச் சென்றது இது இக்காலத்திற்குரிய தீர்க்கதரிசி மற்றும் ஏழாம் சபைக்கால தூதனால் கொடுக்கப்பட்ட செய்தி என்று நம் அனைவருக்கும் தெரியும். ஆரவாரம் என்பது ஜனங்களை ஒன்றுக்கூட்டுவதற்கென்று அளிக்கப்படும் செய்தியாகும். இப்பொழுது தீவட்டிகளை சுத்தப்படுத்தும் (Trim) சமயமாகும். எழுந்து உன் தீவட்டிகளை சரிப்படுத்து இது ஏழாம் ஜாமத்தில் உரைக்கப்பட்டது. மணவாளன் வருகிறார், எழுந்து உன் தீவட்டியை சரிப்படுத்து. புத்தியுள்ள கன்னிகைகள் அதற்கு கீழ்படிந்தனர். சிலருடைய தீவட்டிகளில் எண்ணெய் இல்லாதிருந்தது. இது தீவட்டியை சரிப்படுத்தும் நேரம். இது மல்.4 ம் அதிகாரத்தின் நேரம். இது லூக்.17 ஆம் அதிகாரத்தின் நேரம். இக்காலத்திற்கென

வேதம் விளம்பிள்ள தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறும் நேரமும் ஆகும். அது தத்ரூபமாக நிறைவேறுகிறதை நீங்கள் காண்கிறீர்கள். (ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல். பக்கம்.57 பத்தி.141)

10. **அடுத்து வெளி.12க்கு வருவோம்.** இங்கு ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள் என்றுகாண்கிறோம். இந்த ஸ்திரீயைக்குறித்து சிலர் இது இஸ்ரவேலைக்குறிக்கிறது என்றும், சிலர் மரியாளை குறிக்கிறது என்றும், சிலர் சபையைக்குறிக்கிறது என்றும் கூறுகிறார்கள். பொதுவாக ஸ்திரீ சபைக்கு அடையாளமாக பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. (எபே.5 அதி) சபையானது கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. (2கொரி.11:2) பழைய ஏற்பாடு காலத்தில் இஸ்ரவேல் தேவனுடைய உடன்படிக்கையின் மனைவியாக வர்ணிக்கப்படுகிறாள். (எரே.3அதி) அக்காலத்தில் நீ என்னை பகாலி (My Lord) என்று சொல்லாமல் ஈஷி (Husband) என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார். (ஓசி.2:16) நித்திய விவாகத்திற்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்வேன். (ஓசி.2:19). மேலும் ஏசா.54:5 ல் இஸ்ரவேல் அவர் உடன்படிக்கையின் மனைவி என்றுக்கூறப்பட்டுள்ளது. (Thy Maker is thy Husband) பழைய ஏற்பாடு காலத்தில் இஸ்ரவேல் எப்படி தேவனுடைய மனைவியாக கூறப்பட்டுள்ளதோ அதேப்போன்று புதிய ஏற்பாட்டில் அப்.2:47 ல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்ட சபையானது கிறிஸ்துவின் மனைவியாகக் கூறப்படுகிறது. ஆனால் இங்கு புதிய ஏற்பாடு சபையே ஸ்திரீ என்ற இடத்தில் பொருந்தும். இங்கு ஸ்திரீயாக மரியாளை எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அவள் எந்த வனாந்தரத்துக்கும், இயேசுவை பெற்றப்பின் ஓடிப்போகவில்லை. (வெளி.12:6) அடுத்து வெளி:5 ல் அந்த ஸ்திரீ பெற்றது ஒரு ஆண் பிள்ளை. (Male Child) என்றுக்கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது. அவள் பெற்றது ஒரு மனிதன் என்று அழைக்கப்படும் முதிர்ச்சிப்பெற்ற ஆண் பிள்ளை (Man Child) என்றுக்காண்கிறோம். இது ஆங்கிலத்தில் Man Child என்றுக்கூறப்பட்டுள்ளது. மேலும் இயேசு பிறந்து வளர்ந்து, தனது இரட்சிப்பின் திட்டத்தை முடித்து, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பின்பு தான் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். (மாற்.16:19) ஆக அந்த ஸ்திரீ மரியாளும் அல்ல, Man Child என்று அழைக்கப்படுகிறதினால் அது இயேசுவும் அல்ல.

11. ஆக புதிய ஏற்பாடு சபைதான் அந்த ஸ்திரீ என்பது நன்கு பொருந்தக்கூடியதாக இருக்கிறது. (எபே.5:29,30) அவள் சூரியனை அணிந்திருந்தாள். தேவனுடைய நாமத்திற்கு பயந்திருக்கிற அவள் மணவாட்டி மேல் / மனைவி மேல் நீதியின் சூரியன் உதிக்கும். (Sun of Righteousness) அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். (மல்.4:2) அவள் பாதங்களின் கீழ் சந்திரன். சந்திரன் சூரியனுடைய ஒளியை பிரதிபலிக்கிறது. அவ்வண்ணமாகவே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டின் ஒளியை பிரதிபலிக்கிறதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறுகிறதாக இருக்கிறது. இந்த தீர்க்கதரிசிகளின் உபதேசத்தின் மேல்தான் சபை நிற்கிறது, கட்டப்பட்டதாக இருக்கிறது. (எபே.2:20) அந்த ஸ்திரீயின் தலையின் மேல் உள்ள 12 நட்சத்திரங்கள் 12 அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது.

12. கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகும் அளவும், உங்களுக்காக கர்ப்பவேதனைப்படுகிறேன் என்கிறான் அப்பவுல். (கலா.4:19) அதுப்போன்று சபையானது அந்த Man Child, அதாவது வளர்ச்சியடைந்த அந்த மனிதக்குழந்தையை - மணவாட்டியை - பிறப்பிக்க சபை கர்ப்பவேதனைப்பட்டு பிறப்பித்தது. மணவாட்டி ஒரு பரிபூரண மனிதனுடைய வளர்ச்சியடைந்து, கிறிஸ்துவின் தெய்வீக சுபாவங்களில் பங்குக்கொண்டது. ஆனால் உபத்திரவகாலங்களுக்கு முன்னே மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள், இவர்கள் யார்? ஒவ்வொரு சபைக்காலத்திலும் ஜெயம் கொண்டவர்கள்.

13. அடுத்து ஒருபக்கம் தேவன் இஸ்ரவேலை தன்னுடைய மனைவி என்றும், மற்றொருப்பக்கம் இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டப்புத்திரன் என்கிறார். (யாத்.4:22) புதியஏற்பாட்டில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை / மணவாட்டி பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபை என அழைக்கப்படுகிறது. (எபி.12:23) இது ஆங்கிலத்தில் Church of the first born, who are written in heaven என உள்ளது.

14. அடுத்து சகல ஜாதிகளையும், இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் Man Child இப்பொழுது இது யார் என்று கவனியுங்கள். ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களைகளை ஆளுவான். (வெளி.2:26,27) இந்த ஜெயங்கொள்ளுகிறவர்கள் யார்? இவர்கள் அந்தந்த சபைக்காலத்தின் மணவாட்டி. இவர்களைக்குறித்து : ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்வான். நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான் என்று வெளி.21:7 ல் கூறப்பட்டுள்ளது. ஆக ஒரு பக்கம் புதிய ஏற்பாடு சபை - ஸ்திரீ. மறுபக்கம் அவளே - ஜெயங்கொள்கிற அந்த Man Child – Not Male Child. ஆண்பிள்ளையாக, மாறாக முற்றிலுமாக வளர்ச்சியடைந்த மனிதத்தன்மையுள்ள பிள்ளை. மேலும் அந்த ஸ்திரீ மூன்றரை ஆண்டுகாலத்தில் பரலோகத்தில் போஷிக்கப்படுகிறதைக் குறிக்கிறது. ஆம் அவள் எடுத்துக்கொள்ளப்படுதலில் உபத்திரவகாலத்தை காணாது எடுத்துக்கொள்ளப்பட்டாள். அந்த ஸ்திரீ வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். அங்கே மூன்றே ஆண்டுகள் போஷிக்கப்பட்டாள் என்பது, ஓசியா.2:14-16 வசனங்களுக்கு ஒப்பாக இருக்கிறது.

15. ஆக மத்.25:6, வெளி.12:14 க்கு அடுத்த காரியங்கள் யாவும், ஏழாம் சபைக்கால செய்தியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது மற்றொரு தீர்க்கதரிசி எதற்கு? சபையில் குழப்பத்தை உண்டுப்பண்ணத்தானே? ஏழாம் சபைக்காலத்திற்கு இரு தூதர்களா? இரு தீர்க்கதரிசிகளா? இரு தூதர்கள் / தீர்க்கதரிசிகளுக்கு வேதவாக்கியங்களில் எங்கு ஆதாரங்கள் உள்ளது? மல்.4:5,6 ன் படி எலியாவின் ஆவியையுடைய ஒரு தீர்க்கதரிசி, பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடத்திற்கு திருப்ப வரவேண்டும். அவர் வந்து தன் ஊழியத்தை நிறைவேற்றினார். வெளி.10:6 ன் படி ஏழாம் சபைக்கால தூதனுடைய சத்தத்தின் நாட்களில் தேவரகசியம் நிறைவேற வேண்டும். அதுவும் முடிவுப்பெற்றது. இப்பொழுது லவோதிக்கேயா சபைக்காலத்திற்கு மற்றொரு தீர்க்கதரிசி எழும்ப வேதவாக்கியங்களில் ஆதாரங்களே கிடையாது. ஆக இந்த சகோ காக்குவ் பிலிப்பு தன்னைத்தானே தீர்க்கதரிசியாக்கி கொண்டவர். இவருடைய பெயர் கள்ளத்தீர்க்கதரிசியின் பட்டியலில் தான் உள்ளது. அடுத்து ஏழாம் சபைக்கால தூதன் என்ன கூறுகிறார்? செய்தி ஒன்று வரும். செய்தியாளன் ஒருவர் வருவார். அவர் ஒரு மனிதனாக இருக்குமானால் அவர் எனக்குப்பின் வருகிற ஒருவராக இருக்கும். ஆனால் நான் பிரசங்கித்துக்கொண்டிருக்கிற இந்த செய்தியானது இந்நாளுக்கான கடைசி செய்தி. இதுவே கடைசி செய்தி. நீங்கள் இந்த செய்தியின் செய்தியாளர்கள். (கே. ப.123, பத்தி.391) அடுத்து.15-04-1961 ல் பிரசிங்கிக்கப்பட்ட Uncertain Sound எந்த செய்தியில் 97வது பத்தியில் I am leaving the country : And there'll never be another on the field till I am

gone, THUS SAITH THE LORD. there has not been, and will not be. இதற்கு இந்தக்கள்ளத்தீர்க்கதரிசியும், அவரைச்சார்ந்த மூன்று கள்ளகபடமுள்ள, கூலிக்குமாரடிக்கும் வேலையாட்கள் என்னபதில் கூறப்போகிறார்கள்? சகோ பிரன்ஹாம் தனக்குப்பின் யாரும் இல்லை என்பதை கர்த்தர் உரைக்கிறார் என்றுக்கூறுகிறார். இதற்கு வேதவாக்கியங்கள் ஆதாரமாக இருக்கிறது. ஏழாம் சபை, ஏழாம் சபைக்காலம், ஏழாம் சபைக்காலத்தூதன், சபைக்கு கடைசி செய்தி, இத்துடன் ஏழாம் சபைக்கடுத்த அனைத்துக்காரியங்களும் முடியவடைகிறது. இனி சபை எடுத்துக்கொள்ளபடுதலுக்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. இதை சீர்குலைக்க எழுந்துள்ளது இந்த சாட்சியற்ற வாழ்க்கை வாழ்ந்துவரும் சிறுக்கூட்டம். வரும்நாட்களில் இவர்கள் யாவரும் விரும்பப்படாத பாத்திரமாக காணப்படுவார்கள். வெட்கி நாணி தங்கள் தலையை முக்காடிட்டு கொள்வார்கள். இந்த தீர்க்கதரிசியினாலும் இவரது இந்திய வேலையாட்களாலும் லவோதிக்கேயா சபைக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை.

16. மேலும் தன்னைத்தானே தீர்க்கதரிசியாக்கி கொண்ட இந்த கள்ளத்தீர்க்கதரிசியின் வார்த்தைகளை கவனியுங்கள். கடவுள் இன்று பூமியில் பேசவேண்டும் என்றால் அது உயிரோடு இருக்கும் காக்குவ் பிலிப்பு ஆகிய என்னைக்கொண்டு மாத்திரமே என வீண்பெருமையினால் தன் இருதயத்தின் கபடத்தை தன் நாவின் சொல்லாகக் கூறுகிறார். இவரது வார்த்தையே இவருக்கு பாவமாக இருக்கும். பாருங்கள் இது எவ்வளவு பெரிய தேவதூஷனம். வேதவாக்கியங்களில் காணப்படாத ஒரு அழைப்பைக்கொண்டு, தனக்கு பெரிய காரியங்களைத்தேடி தன்னைத்தானே தீர்க்கதரிசி என்று கூறிக்கொண்டு, இவ்வளவு ஆணவமாய் ஒருவன் பேசுவானாயில், அவன் பிசாசாகவே இருக்க வேண்டும். அவன் பிசாசு தான். அவன் தான் பெருமைக்கொண்டவன். நிச்சயமாக ஒருநாள் இவனுடைய இருதயத்தின் அகந்தை இவனை மோசம் போக்கும். இவ்வாறாக தீர்க்கதரிசியின் செய்தியை கறைப்படுத்தும் அளவுக்கு அநேகர் எழும்பினாலும் அது இன்றும் செய்தியாகவே நிலைத்து இருக்கிறது. அதின் வாசனை வேறுப்படவில்லை. ஒருக்காலும் வேறுபடாது. அது தன்னுடைய வாசனையை இந்த காலம் முழுவதும், அது முடியும்வரை கொடுத்துக்கொண்டே இருக்கும். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே இந்த அக்கிரமகாரர்களுடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்பூண்டு பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திலிருந்து, விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். இந்த தீர்க்கதரிசியின் இந்திய ஏஜெண்டுகள் அநீதியின் கூலியை விரும்பி செம்மையான வழியை விட்டு தப்பி நடந்த போயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றுகிறவர்கள். பிசாசின் கிரியைகளில் ஈடுபடும் இவர்கள் விசாரிக்கப்படும் நாள் மிக்க சமீபித்திருக்கிறது. அந்நாளில் இவர்களது பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறது.

## பிசாசின் பிடியில் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி தமிழ் மொழிப்பெயர்ப்பு

1. இந்நாட்களில் ஏழாம் சபைக்கால தூதனுடைய ஆங்கில செய்தியை தமிழில் மொழிப்பெயர்ப்பது, வெளியிடுவது யார் என்பதற்கு எந்தவிதமான தகுதிவரம்பு எதுவும் இல்லாமல், யார்வேண்டுமானாலும் மொழிப்பெயர்க்கலாம், வெளியிடலாம், யார் தங்கள் பையில் பணம் வைத்திருக்கிறார்களோ அல்லது சகோ ஜீவஜெயம் மற்றும் அவரது சகாக்கள் போன்று, ஊர்ஊராக தெருத்தெருவாக சென்று கரத்தில் திருவோடை ஏந்தி, செய்தி மொழிப்பெயர்ப்புக்கு கொடுங்கள், கொடுங்கள் என பிச்சை எடுக்கும் திராணி உடையவர்களாக யார் இருக்கிறார்களோ அவர்கள் இந்த பணியை செய்யலாம் என்ற நிலையில் தள்ளப்பட்டுள்ளது. ஆதியில் இருந்தே இந்த மொழிப்பெயர்ப்பில் பிசாசின் தலையீடு இருந்துவருகிறது. ஆதலால் செய்தியின் மொழிப்பெயப்புகளில் வார்த்தையிலுள்ள ஜீவன் நாளுக்குநாள் குன்றிக்கொண்டே போகிறது. தொடக்கத்தில் சகோ பாலாசீர் லாறியின் மணவாட்டியின் கையில் இந்த மொழிப்பெயர்ப்பு போய் விழுந்தது அவர்களைக்கொண்டு, மொழிப்பெயர்ப்பு பிரிண்ட் மற்றும் பணிகள் நடந்தது. அக்காலத்தில் இந்த பணிகளை சகோ லாறியின் மணவாட்டிகளிடத்தில் ஒப்படைப்பதை நான் எதிர்த்து நின்றேன். ஆதலால் நான் வெளிநாடுகளிலிருந்து வரும் ஊழியர்களால் புறக்கணிக்கப்பட்டேன். நித்திரை அடைந்த சகோ டாக்டர் ஜேக்கப் தலைமையை எதிர்த்தேன். ஏனென்றால் இவரும் லாறியின் முன்னாள் மணவாட்டியாக இருந்தார். மேலும் அவரது குடும்பத்தினர் யாவரும் இக்காலத்திற்குரிய செய்தியை ஏற்றுக்கொள்ளுவதாக இல்லை. ஆக ஆதிநாட்கள் முதல் இன்றுவரை வஞ்சிக்கப்பட்ட நபர்களை கொண்டே தூதனுடைய செய்தி மொழிப்பெயர்க்கப்பட்டு வருகிறது. நான் மொழிப்பெயர்பாளர்களை குறித்து எதிர்ப்பு தெரிவித்ததினால், மொழிப்பெயர்பாளர்கள் யார் என்பதை புத்தகத்தில் வெளியிடுவதை தவிர்த்தனர். ஏனென்றால் மொழிப்பெயர்பாளர்களுக்கும் செய்திக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. செய்தியோடு அவர்கள் இணைப்புக்கிடையாது. மொழிப்பெயர்பாளருடைய குடும்பவாழ்க்கை சீர்குலைந்து காணப்பட்டது. குடும்பத்தில் மனைவி பிள்ளைகள் யாரும் செய்தியில் இல்லை. அவர்களுடைய விசுவாசம் திரித்துவத்தின் மேல். ஆக வில்லியம் பிரன்ஹாம் குட் நியூஸ் சொசைட்டி என்னை என் ஆலோசனைகளை புறம்பே தள்ளியது. முடிவு என்ன? ஆந்திராவிலும், தமிழ்நாட்டிலும் இந்த சொசைட்டியின் சொத்தை விற்று நம்முடையவர்கள் ஆளுக்கொரு பங்குப்போட்டுக்கொண்டார்கள். தொடக்கத்தில் ஆந்திராவில் என் எதிர்ப்பைமீறி இயேசு மட்டும் (Only Jesus) விசுவாசக் குடும்பத்தைக்கொண்டு செய்தி மொழிப்பெயர்ப்பு, பிரிண்ட், விநியோகத்தை செய்தார்கள். அது ஒரிரு ஆண்டுகள் கூட நிலை நிற்வில்லை. விசுவாசிகளின் பணம் பாழானது. அடுத்து சென்னையிலும் அதே கதிதான். இந்நிலையில் இப்போது எந்த விதமான கட்டுப்பாடும் இன்றி, தங்கள் தங்கள் திறமைக்கேற்ப தகுதியில்லாதவர்கள், செய்தியோடு வேதவாக்கியங்களோடு தங்களுடை இல்லற வாழ்க்கையை அமைக்காத நபர்கள் செய்தியை மொழிப்பெயர்கிறார்கள். வெளியிடுகிறார்கள். இந்நாட்களில் மொழிப்பெயர்ப்பதில், வெளியிடுவதில் சகோ ஜீவஜெயம், நாகர்கோவில் சகோ ஜெபக்குமார், திருச்சி சகோ லாரன்ஸ் போன்றவர்களுக்கு பங்கு உண்டு. ஆனால் இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? முதலாவது இவர்களுடைய குடும்ப வாழ்க்கை சரியில்லை. இவர்கள் குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் பிரச்சனை, தாய், மனைவி, பிள்ளைகள், யாருமே விசுவாசத்தில் இல்லை. இவர்கள் பணத்திற்காக, புகழுக்காக செய்தியை மொழிப்பெயர்த்து, வெளியிடுகிறார்கள். இவர்கள் வாழ்க்கை தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் சாட்சியாக இல்லை. கிரியையில்லாத இவர்களுடைய விசுவாசம் செத்ததுதானே. இப்படியிருக்க இவர்கள் செய்தியை மொழிப்பெயர்த்து எப்படி வெளியிடலாம்? இந்நாட்களில் சகோ ஜெபக்குமாரால் மொழிப்பெயர்த்து, சகோ லாரன்ஸால் வெளியிடப்படும் செய்தி ஆவிக்குரியரீதியில் இல்லாமல் மாம்சரீதியில் மொழிப்பெயர்க்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.

2. ஒருவர் தீர்க்கதரிசியின் செய்தியை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிப்பெயர்த்து வெளியிட்டால், முதலாவது அவர் வேதவாக்கியங்களில் நன்கு பழகினவராகவும், அதன்பின் செய்தியை நன்கு அறிந்தவராகவும், அதோடு மட்டுமல்ல தேவனுடைய வார்த்தையையும் செய்தியையும், தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறவராகவும் இருக்க வேண்டும். தான் மட்டுமல்ல தன் குடும்பத்தினர் அனைவரோடும் அதாவது தன் மனைவி, பிள்ளைகளுடன் ஒரே விசுவாசத்தில் இருக்க வேண்டும். அடுத்து செய்தியைக்கொண்டு தன்னுடைய கோட்பாட்டை மொழிப்பெயர்ப்பில் நுழைக்கிறவராகவும் இருக்க கூடாது. சகோ ஜீவஜெயம் கூட்டத்தினர் கிறிஸ்து பிரன்ஹாம் உபதேசத்தில் நிலைநிற்பவர்களே. கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்று விசுவாசிப்பவர்களே. செய்தி

மொழிப்பெயர்பாளார் சகோ S. A. ஜெபக்குமார் 01-07-2016 அன்று என்னிடம் கைத்தொலைபேசியில் பேசினார். நான் அவருக்கு கொடுத்த புத்திமதியானது மொழிப்பெயர்பாளாராகிய நீங்களும், செய்தியை வெளியிடும் சகோ லாரன்ஸ்சும் முதலாவது உங்கள் சொந்த குடும்பத்தை சத்தியத்திற்குள் வழிநடத்துங்கள், பின்பு நீங்கள் செய்துக்கொண்டிருக்கும் பணிக்குத் திரும்புங்கள் என்றேன். அவரும் அதை ஆமோதித்தார்.

3. சகோ பிரன்ஹாமின் செய்தியை ஒருவர் மொழிப்பெயர்ப்பாராகில் சகோ பிரன்ஹாமுக்குள் இருந்து செய்தியை பிரசங்கித்த அதே ஆவி நிச்சயமாக மொழிப்பெயர்பாளரிடத்திலும் காணப்பட வேண்டும். அப்போது தான் பிரசங்கித்த செய்தியிலிருந்த ஆவியின் வல்லமை, மொழிபெயர்ப்பிலும் காணப்படும். ஆனால் இன்று மொழிப்பெயர்பாளர்களிடம் சகோ பிரன்ஹாமுக்குள் இருந்த ஆவி இருக்கிறதா? இவர்கள் இருவருக்குள்ளும் இல்லையே. அந்நாட்களில் மறைந்த கவிஞர் கண்ணதாசன் இயற்றிய “இயேசுவின் காவியம்” பிரபலமாக பேசப்பட்டது. ஆனால் அவர் அதை எந்த ஆவியினால் இயற்றினார்? கிறிஸ்துவுக்குள் இருந்த ஆவியினாலா? இல்லவே இல்லை. அவர் மற்றொரு ஆவியினால் தான் இயற்றினார். அதைப்போன்றுதான் இந்த மொழிப்பெயர்பாளர்களும் பிரசுரிப்பவர்களும் மற்றொரு ஆவியினால் தங்கள் கிரியைகளை நடப்பிக்கிறார்கள். ஆங்கிலம் நன்கு தெரிந்த அது யாராக இருப்பினும் சபைக்கால தூதனுடைய ஆங்கில செய்திகளை தமிழில் மொழிப்பெயர்க்கலாம் என்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது. இது ஒரு ஆவிக்குரிய மொழிப்பெயர்ப்புக்கு அடுத்த காரியம். ஆதலால் காலத்து செய்தியை, வேதவசனங்களை நன்கு அறிந்து மொழிப்பெயர்க்கும் நபர், அதன்படி ஜீவிக்கிற நிருபங்களாய் இருக்க வேண்டும். ஆனால் நம்முடையவர்களோ தண்ணீரில்லாத கிணறுக்கும் சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாய் இருக்கிறார்கள். சகோ பிரன்ஹாம் அறியாமல் அவரது சபையில் டீக்கன் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் செய்தியை ஏற்றுக்கொண்டு சிலக்காலம் தான் கடந்துள்ளது. மேலும் குடும்பம் செய்தியை ஏற்றுக்கொள்ளவில்லை. விபரம் அறிந்த சகோ பிரன்ஹாம் அந்த சகோதரனுடைய டீக்கன் பதவியை ரத்து செய்தார். காரியம் இப்படியிருக்க ஒரு டீக்கன் பதவியைவிட மேலான பணியைக்கொண்ட மொழிப்பெயர்பாளர்கள் எந்த அளவுக்கு மேன்மையான தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும்? உங்கள் தகுதிகளை நீங்களே சீர்தூக்கிப்பாருங்கள். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே என் புத்திமதியை ஏற்றுக்கொண்டு, இப்படிப்பட்ட மொழிப்பெயர்ப்பை ஆதரிக்காமல், இவர்களை விட்டு விலகுங்கள். செய்தியை கறைப்படுத்தாதீர்கள். தேவன் உங்கள் பெயரை நிச்சியமாக ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போட இருக்கிறார். ஒரு சகோதரன் குறிப்பிட்டது போல இன்னொரு மனிதன் மிகவும் தகுதியுள்ளவராகவும் இருந்தார். மிகவும் உத்தமமுள்ள மனிதனாக இருந்திருப்பார். காரியத்தை விசாரித்தப்பிறகு அந்த சகோதரன் இந்த விசுவாசத்திற்குள் மிக சமீபத்தில் வந்தவராக இருந்தார். அவருடைய மனைவி இதை விசுவாசிப்பது இல்லை என்றும் கண்டறியப்பட்டது. அப்படியானால் அது ஊழியத்தில் இந்த மனிதனை ஒரு தகுதியற்றவராக செய்கிறது. ஏனென்றால் அவர் தன் முழு குடும்பத்தினரையும், கீழ்படிய பண்ணுகிறவராக இருக்க வேண்டும். அவரும்கூட விசுவாசத்தில் இருக்க வேண்டும். இல்லையென்றால் அது ஒரு முரண்பாடாக இருக்கும். (கே.ப.1:8, பக்கம்.3, பத்தி.8) காரியங்கள் இப்படியிருக்க எனக்கு அருமையான சகோதரர்களே நான் உங்களை நன்கு அறிவேன். நீங்களும் என்னை நன்கு அறிவீர்கள். ஆனால் தவறு என்று ஒன்றுகாணப்படும் போது நான் கண்டிக்க வேண்டிய ஸ்தானத்தில் இருக்கிறேன். நான் உங்களை புண்படுத்துவதாக நீங்கள் நினைக்கவேண்டாம். உங்கள் பணி வேதவாக்கியங்களின் அடிப்படையில் இருந்தால் அதை செய்யுங்கள். மற்றபடி அதைவிட்டு விலகியிருங்கள். இன்னொருவருடைய பணியில் நீங்கள் உங்கள் மூக்கை நுழைக்காதீர்கள். இதுவே என்னுடைய ஆலோசனை. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி, அவனவனுக்கு நான் (இயேசு) அளிக்கும்பலன் என்னோடே கூட வருகிறது. ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை, உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

ஜீலை 2016.

**கிறிஸ்துவின் அன்பில்**
**சகோ.காலேப் யோசுவா**

If undelivered
Please return to :
Caleb Joshua
11/2, Upstair, Periyaar Nagar,
Opp.E.B, Senneerkuppam,
Poonamallee P.O,
Chennai – 600 056.
Owned and Published by Caleb Joshua
from 11/2, Upstair, Periyaar Nagar,
Opp.E.B, Senneerkuppam,
Poonamallee P.O, Chennai – 600 056.

**PRINTED BOOK**
Under Clause No. 128 P.O. Guide Rules
G/RNP/Dlgs/16 dated @ Tambaram the 04.04.2016.
Rs. One per every 100 gms
To : Dr, Rev, Pr, Bro, Sis......................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................

Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai – 600 081.
Ph: 044- 25956006. Editor : Caleb Joshua.